

பெண்மணி
ஆகஸ்டு 2012
ரூ.20
ஸ்ரீகிருஷ்ண
அவதாரம்
சிறப்புக் கட்டுரை
சொ.கலைவாணி
ஒரு கூட்டுப் பறவைகள்
முழு நாவல்

மார்கழி மாதத்தின் அதிகாலை. பனி சொட்டிக் கொண்டிருக்க, அதைப் பற்றி துளியும் கவலைப்படாத பெண்கள் தங்களது வீட்டு முற்றத்தை சாணத்தால் மெழுகி பெரிய பெரிய கோலங்களால் அலங்கரித்துக் கொண்டிருந்தனர். அவரவர் உடல்நிலைக்கேற்ப ஸ்வெட்டராலும் தலையில் இறுகக் கட்டியிருந்த மப்ளராலும் குளிரிலிருந்து தங்களை பாதுகாத்துக் கொண்டனர்.

சிறுசுகள் கூட சில விழித்துக் கொண்டு வீட்டுவாசலில் அமர்ந்து கோலம் போடும் அம்மாவை, சகோதரியை பார்த்து தங்களுக்குத் தெரிந்த ஐடியாக்களை கூறிக் கொண்டிருந்தன.

"அக்கா! இனி எந்த ஊர்லயாவது ஆரஞ்சு கலர்ல இருக்குமா? பச்சைக்கலர் கொடுக்கா" என்றது ஒரு வாண்டு.

"இருந்தா கொடுக்க மாட்டேனா. சொல்ல வந்திட்டா பெரிசா. பச்சைக் கலர் நேத்தே தீர்ந்து போச்சு" கோலம் போட்டுக் கொண்டிருந்த பெண் அலுத்துக் கொள்ள, தனக்குள்ளே சிரித்துக் கொண்டாள் நிறைமதி.


"இந்த காலத்தில் பெரியவர்களைக் கூட சமாளித்து விடலாம். ஆனால் இந்த பொடிசுகளைத்தான் சமாளிக்க முடியலை" என்றவாறே மானின் கழுத்தை வளைத்து அழகாக்கினாள்.

"மதியக்கா! இன்னிக்கு மான் கோலமா? மானுக்கு புள்ளி வெக்கலையா?"

"ம்.... வெக்கணும். கலர் கொடுத்த பிறகு வெச்சாத்தான் எடுப்பா இருக்கும்" என்ற நிறைமதிக்கு தேனினும் இனிய குரல். இதமான மஞ்சள் நிறம். அளவான உடல்வாகு. போதுமான உயரம். தூக்கத்தில் கூட புன்னகையோடு இருக்கும் பொன்முகம். அதிர்ந்து பேசாத, பேசத் தெரியாத மென்மை. மொத்தத்தில் நிறைமதியைப் பார்ப்பவர் எவராக இருந்தாலும் நின்று நிதானித்து விட்டுத்தான் செல்வர்.

அப்படி ஒரு தெய்வீக முகம். அதிகாலையிலேயே குளித்து ஈரக் கூந்தலை கொண்டையாக்கியிருந்தாள். கைகள் லாவகமாய் கோலமாவை இழுக்க, அழகான நான்கு புள்ளிமான்கள் வளைந்த கொம்போடு ரெடியானது.

-ஏசா.கலைவாணி





# ஒரு கூட்டுப் பறவைகள்

எழுந்து நின்று கோலத்தைப் பார்த்தாள். திருப்தியாய் இருந்தது. 'கண்கள் இன்னும் கொஞ்சம் பெரிதாக வைக்கலாமே.' குனிந்து மானின் கண்களை பெரிதாக்கிக் கொண்டிருக்கும் போது, வீட்டிற்குள்ளிருந்து கையில் கூடையோடு வெளியே வந்தார் செல்வகணபதி.

கம்பளித் துண்டால் தலைப்பாகை கட்டி குளிரை விரட்ட முயற்சித்தார்.

"மதிம்மா! அப்பா பால் வாங்கிட்டு வர்றேம்மா."

"சரிப்பா. அப்படியே ரெண்டு பாக்கெட் தயிர் வாங்கிட்டு வாங்கப்பா. சந்தர் தயிர் வடை கேட்டான்."

"சரிம்மா. நீ சீக்கிரமா கோலத்தை முடிச்சிட்டு தலையை உலர்த்திக்க. பனி கடுமையா இருக்கு. சளி பிடிச்சிட்டா சட்டுனு போகாது."

"இதோ ஆச்சுப்பா" என எழுந்தாள்.

செல்வகணபதி செருப்பை மாட்டிக்

கொண்டு விலக, வாசலோரமாய் வைத்திருந்த கட்டிச்சாணத்தை எடுத்து பிள்ளையார் பிடித்து கோலத்தின் மையத்தில் வைத்துவிட்டு, முற்றத்தில் அடர்த்தியாய் நின்ற அடுக்குச் செம்பருத்தி செடியில் அப்போதுதான் இதழ்களை விரித்துக் கொண்டிருந்த பெரிய பூவை பறித்து சாணத்தில் செருகினாள்.

ரத்தச் சிவப்பினால் செம்பருத்தி கண்ணைப் பறித்து கோலத்தை இன்னும் அழகாக்கிக் காட்டியது. திருப்தியாய் புன்னகைத்து விட்டு கோலமாவுக் கிண்ணங்களை சேகரித்துக் கொண்டு வீட்டிற்குள் நுழையும் போது அடுத்த வீட்டு காயத்ரியின் குரல் கேட்டது.

"வாவ்! மதி! மார்னிங்கோலம் சூப்பர்ப்பா. ம்மா! இதுதாம்மா ..மான். நேத்து நீயும் போட்டியே" கன்னுக்குட்டி மாதிரி" என கிண்டலாய் கூற, கம்பிக்கோலம் போட்டுக் கொண்டிருந்த 'தனலட்சுமி மகளை முறைத்தாள்.

"ஏன்? நீ போட வேண்டியதுதானே. உன்னாட்டம் பொண்ணுதானே மதி. இவ்வளவு காலையிலே எழுந்து குளிச்சு வாசத்தெளிச்சு கோலம் போடுது. நீ விடியற வரைக்கும் தூங்கிட்டு என்னைக் குற்றம் சொல்றியாக்கும்."

"தாய்க்குலமே! காலையிலேயே உன் சுப்ரபாதத்தை ஆரம்பிச்சிடாதே. இன்னிக்கு ஸண்டே. லீவை ஜாலியா என்ஜாய் பண்ற மூடுல இருக்கேன். அதைக் கெடுத்திடாதே." காயத்ரி தாயை நோக்கி கும்பிட்டாள்.

"ஆமா! பெரிய கம்பெனியில வேலை பார்க்கிற மாதிரி அலட்டு. வீட்டு வேலை செய்யக் கஷ்டப்பட்டுட்டு அந்த மருந்துக்கடையில போய் நிக்கிற. ஆயிரம் ரூபாய் சம்பளத்துக்கு ரெண்டாயிரம் ரூபா செலவு பண்ற."

"உனக்கேம்மா வயித்தெரிச்சல். நானும் உன்ன மாதிரி அடுப்படியிலேயே கிடந்து வேகணுமா?. நமக்கு அதெல்லாம் சரிப்படாது" காயத்ரி அலட்சியமாய்ச் சொல்ல, இன்று இவர்களின் பிரச்சினை தீராது என்பதுபோல் தன் வேலையை கவனிக்கத் தொடங்கினாள் நிறைமதி.

தலையை உதறி லேசாய் முடிச்சிட்டுக் கொண்டே, உள் அறைக்குள் நுழைந்து தலை வரை போர்த்திக் கொண்டு உறங்கிய தங்கையை எழுப்பினாள்.

"வளர்! எழுந்திரு. மணி ஆறாகப் போகுது. எழுந்திரு வளர்" நான்குமுறை எழுப்பிய பிறகே வளர்மதியிடம் லேசான அசைவு தெரிந்தது.

"ம்..ம்... என்னக்கா! ஏன் இப்படி நடுசாமத்துல எழுப்புற" கண்களைத் திறக்காமலேயே முணங்கினாள் வளர்மதி.

"என்ன நடுசாமமா? சரிதான். முதல்ல போர்வையைக் கொடு. அப்பதான் விடியறது தெரியும்" என்றவாறே பெட்ஷீட்டை உருவி, உதறி மடிக்கத் தொடங்கினாள் நிறைமதி.

விருட்டென எழுந்து அமர்ந்தாள் இரவு உடையுடன் இருந்த வளர்மதி.

"ஸ்... குளிருதுக்கா. பெட்ஷீட்டைக் கொடு. ஒரு அரைமணி நேரம் கழிச்சு எழுப்பு" என போர்வையை இழுத்தாள்.

"வளர்! இன்னிக்கு ராணியம்மா ஊருக்கு போறாங்கள்ல. அவங்களுக்கு கொடுத்தனுப்ப வேண்டிய துணியெல்லாம் ரெடி பண்ண வேண்டாமா?"

"போக்கா! இன்னும் ரெண்டே ரெண்டு ஸ்கிரீன்தானே. நான் அப்புறமா எம்பிராய்டரி போட்டுத் தர்றேன். ப்ளீஸ்... தூங்க விடுக்கா."

"ம்ஹூம். இப்பவே மணி ஆறாகுது. நீ எழுந்து பல்லைத் தேய்ச்சு காபி குடிக்க ஏழு மணியாகிடும். அந்தம்மா எட்டு மணிக்கெல்லாம் வந்து நிற்பாங்க. எழுந்திரும்மா."

"அக்கா! அந்த சோம்பேறிய மெதுவா எழுப்புக்கா. இல்லன்னா மூஞ்சில தண்ணி எடுத்து ஊத்து. என் தூக்கமும் கெடுது" என சுவரோரமாய் இருந்த கட்டிலில் இருந்து குரல் வந்தது.

வளர்மதியின் உறக்கம் முற்றிலும் கலைந்தது. எழுந்து நின்றாள்.

"ஏன்டா தடிமாடு! பாவம் தம்பிக்கு குளிருமேன்னு உன்னை எங்க ரூம்ல படுக்க வெச்சது பெரிய தப்பு. நாளைக்கு கட்டிலை எடுத்து வராண்டாவில போட்டுடுறேன் பாரு."

"ஆமா! இவ போட்டா எனக்கு உள்ளே தூக்கிட்டு வர முடியாதாக்கும். போ... போய் வேலையைப் பாரு. என் தூக்கத்தைக் கெடுக்காதே."

"நாங்கள்லாம் முழிச்சு வேலை செய்யணும். நீ மட்டும் ஊரைச் சுத்திட்டு வந்து எட்டு மணி வரைக்கும் தூங்குவியா? எழுந்திருடா சோம்பேறி" கோபமாய் தம்பியை நெருங்கி மூடியிருந்த போர்வையை உருவினாள்.

வெறும் பனியன் டவுசருடன் படுத்திருந்த சந்திரசேகர் கோபமாய் எழுந்தான். "ஏய்

ராட்சசி. பெட்ஷீட்டை குடுடி. குளிருது."

நிறைமதி அதட்டினாள். "சந்தர்! அக்காவை என்ன டி போட்டு பேசுற. மரியாதையாப் பேசு."

"இவ என்ன அக்கா மாதிரியா நடந்துக்குறா. எனிமி மாதிரில்ல நடந்துக்குறா" என்றவாறே போர்வையை பறித்தான்.

"நீ என்ன தம்பி மாதிரியா நடந்துக்குற. மீசை கூட இன்னும் முளைக்கல்ல. அதுக்குள்ள பெரிய குடும்பத்தலைவர் மாதிரி அலட்டுற."

"ஏய், நீ சொன்னாலும் சொல்லாட்டியும் நான் குடும்பத்தலைவன்தான். நான்தானே உங்க ரெண்டுபேருக்கும் மாப்பிள்ளை பார்த்து கட்டி வெக்கணும்."

"மூஞ்சியப் பாரு. மொதல்ல பிளஸ்டூ பாஸ் பண்ணுடா. மாப்பிள்ளை பார்க்கிறானாம். அதுக்குத்தான் எங்க அப்பா இருக்காங்களே" தம்பியின் முகத்தில் இடித்தாள் வளர்மதி.

"வளர்! நான் பார்த்தாத்தான் மாப்பிள்ளை மன்மதன் மாதிரி இருப்பான். அப்பா பார்த்த மாப்பிள்ளை எப்படி இருந்தான் பார்த்தேல்ல..."

"சந்தர்! காலங்காத்தால என்ன வெட்டிப்பேச்சு? ரெண்டுபேரும் முதல்ல பல் துலக்குங்க" என்றவாறு கிச்சனுக்குள் நுழைந்தாள் நிறைமதி.

சந்திரசேகர் வளர்மதியிடம் கிசுகிசுத்தான். "வளர்! அந்த மாப்பிள்ளைக்கு முப்பத்தி ஏழு வயசாம். நம்ம அப்பாகிட்ட இருபத்தி அஞ்சுன்னு பொய் சொல்லியிருக்கான். தெரியுமா?"

"நிஜமாவாடா சொல்றே? அந்தக் கிழட்டுப்பயலுக்கே நம்ம அக்காவை பிடிக்கலையாமா? அவன் கண்ணை தோண்டி அடுப்பில போடணும்."

"அட நீ ஒண்ணு! அவனா வேண்டாம்னு சொன்னான். நாங்கல்ல சொல்ல வெச்சோம்" என்றான் பெருமிதமாய்.

"என்னடா தம்பி சொல்ற? நீங்கன்னா... யாரெல்லாம்?" வளர்மதி ஆர்வமாய் தம்பியினருகே அமர்ந்துக் கொள்ள, உற்சாகமாய் சொன்னான் சந்திரசேகர்.

"வளர்! நம்ம அப்பாவை பார்த்திட்டு இவர் ரொம்ப அப்பாவியா இருக்காரு, ஈஸியா ஏமாத்திடலாம்னு மாப்பிள்ளை வீட்டுக்காரனுங்க பிளான் பண்ணியிருக்காங்க. பெரிய சைக்கிள் கடையெல்லாம் கிடையாதாம். சைக்கிளுக்கு பஞ்சர் ஒட்டுறானாம். அதுவும் உலக மகா குடிகாரனாம்."

"அடப்பாவி"

"அதனாலதான் ஒருத்தனும் பொண்ணு குடுக்கல. நம்ம அப்பா மாப்பிள்ளை தேடுறது தெரிஞ்சதும் நம்ம வீட்டுக்கு

## உலகின் மிகப்பெரிய வேகமான சரக்கு கப்பல்!

டென்மார்க்கில் உலகின் மிகப்பெரிய மிகவும் வேகமான சரக்கு கப்பல் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த கப்பல் 1,302 அடி நீளம், 207 அடி அகலம் கொண்டது. இந்த கப்பலில் 1 லட்சத்து 23 ஆயிரத்து 200 டன் சரக்குகளை ஏற்றலாம். ஐக்கிய அமெரிக்க விமானந்தாங்கி கப்பலின் நீளத்தை விட இந்தக் கப்பல் பெரியது. 5 பிரிவுகளில் இது கட்டப்பட்டுள்ளது. 5,000



ஆண்கள் மற்றும் அதிகாரிகள் இதில் பணிபுரிகிறார்கள். சரக்குகளை ஏற்ற 15 ஆயிரம் கன்டெய்னர்கள் இக்கப்பலில் வைக்கப்பட்டுள்ளன. 1,330 அறைகளை கொண்டது. இதன் முதல் பயணம் 2006 செப்டம்பர் 8-ம் தேதி தொடங்கியது.

இந்த கப்பலின் கட்டுமான செலவு ரூ.1,160 கோடியாகும். எம்மா மேயர்ஸ்க் என்று பெயரிடப்பட்டுள்ள இந்த கப்பலை விட மிக வேகமாக செல்லும் மிகப்பெரிய சரக்கு கப்பல் வேறு எதுவுமில்லை. அடுத்த முயற்சியில் வல்லுநர்கள் ஈடுபடாத வரையில் இந்த கப்பல் தான் உலகின் மிகப்பெரிய மிகவும் வேகமான சரக்கு கப்பலாக விளங்கும்.

வந்துட்டான்."

"இதெல்லாம் உனக்கு எப்படித் தெரிஞ் சதுடா."

"நம்ம ராகுல் வீடு இருக்கில்ல. அந்த தெருவுலதான் இவன் பஞ்சர் ஒட்டிட்டு இருக்கான்."

"சரி! என்ன பண்ணீங்க?"

"என்ன பண்ணினோமா? நான், ராகுல், சுரேன், தியாகு, ரமேஷ், ரவி எல்லாருமா போயி அவனை ஒரு பிடிபிடிச்சிட்டோமில்ல."

"ஐயோ! அடிச்சிங்களாடா?"

"அது மட்டும்தான் பண்ணல்ல. கிரிக்கெட் பேட்டையும் ஸ்டெம்பையும் கொண்டு போய் மிரட்டி மிரள வெச்சிட்டோம். எங்க வீட்டுப்பக்கம் எட்டிக்கூட பார்க்காதேன்னு சொன்னோம். அவ்வளவுதான். திரும்பி வருவானா என்ன? அவன் கடையே இல்ல இப்ப"

வெற்றிச் சிரிப்போடு சொன்னவனை சற்று கவலையாய் ஏறிட்டாள் வளர்மதி.

"தம்பி! நீ சின்னப்பையன். இப்பவே இப்படியெல்லாம் ரவுடிஸம் பண்ணாதேடா. பிறகு அதுவே பழகிப் போயிடும்."

"என்னது? நான் சின்னப்பையனா? இன்னும் ரெண்டு மாசத்தில பிளஸ்டூ முடிக்கப் போறேன். பதினேழு வயசாகுது. நான் சின்னப்பையனா?"

"அதுக்கில்லடா! இருந்தாலும்..."

"இதோ பார் வளர். வீட்டுல ரெண்டு பொண்ணுங்களை வெச்சிட்டு நானும் அப்பாவியா இருந்தா எவன் வேணும்னாலும் வந்து உரசிப் பார்ப்பான். இப்பவே இப்டி கொஞ்சம் கெத்தா அதிரடியா இருந்தாத்தானே ஒரு பயம் இருக்கும்?"

"தம்பி! நீ பெரிய ஆள்தான். நான் கூட இதெல்லாம் யோசிக்கலியே."

"அதுக்கெல்லாம் மூளை வேணும் வளர். உனக்குத்தான் அதெல்லாம் கிடையாதே."

"என்ன? எனக்கு மூளை இல்லையா?"

"ஆமா! இருந்தா பாஸ் பண்ணி காலேஜ்க்கு போயிருப்பேல்ல."

"நான் வேணும்னேதான் பெயிலானேன். பாஸானா காலேஜ்க்கு போகணும்னு ஆசை வரும். படிக்க செலவுக்கு பணம் வேண்டாம்?"

"வளர்! உனக்கு படிப்பு வரலன்னாலும் சாமர்த்தியம் இருக்குடி. எப்படியும் பொழைச்சிப்ப."

"ரொம்ப பேசாதே. உன் ரிசல்ட் வரட்டும். அப்ப பார்க்கலாம்."

"பாருடி! எப்படியும் நைன்டி பர்ஸன்டேஜ் எடுத்திருவேன். அப்பத்தானே மெடிக்கல் காலேஜ்ல ஸீட் கிடைக்கும்."

"கிடைக்கும் கிடைக்கும். பகல் கனவு காணாதே."

"ஏய்... நான் எப்படியும் டாக்டராகிக் காட்டுறேன். பார்க்கறியா?"

"டேய்! அதெல்லாம் பணக்கார வீட்டுப் புள்ளைங்க படிக்கிற படிப்புடா. நமக்கெல்லாம் இந்த ஆசையே வரக்கூடாது."

"அது உன்னை மாதிரி முட்டாளுங்களுக்குத்தான். நான் நிறைய மார்க் எடுத்து மெரிட்லயே சேர்ந்திடுவேன்."

"நான் முட்டாளா?" சிலிர்த்துக் கொண்டு எழுந்தாள் வளர்மதி.

"ஆமான்டி. உனக்கு தெரியாதா?"

"டேய்ய்! நானாடா முட்டாளு? ஊர் சுத்திப்பயலே. ஒரு நாளைக்கு நானூறு ரூபா வரைக்கும் பூ வரைஞ்சு தைச்சு சம்பாதிக்கிறேன்டா. உன்னால ஒரு பத்துகாசு சம்பாதிக்க முடியுமா?"

"பத்து காசெல்லாம் இப்ப செல்லாதுடி. கூமுட்டை."

"நானா கூமுட்டை. உன்னை என்ன செய்கிறேன் பார்" என்றவாறு கட்டிலுக்கு அடியில் கிடந்த துடைப்பத்தைக் கையில் எடுத்தாள்.

அதற்குள் கையில் காபியோடு அறைக்குள் வந்தாள் நிறைமதி.

"ஏய்! நீங்க இன்னும் படுக்கையை விட்டே எழுந்திருக்கலையா? நீ என்னடி பண்ணிட்டு இருக்கே. மணி ஏழாகப் போகுது."

"உன்னை வந்து கவனிச்சிக்கிறேன்" என உறுமியவாறு துடைப்பத்தை கீழே போட்டுவிட்டு வெளியேறினாள் வளர்மதி.

"நீயும் போடா. பல் துலக்கிட்டு காபியக் குடி."

"முதல்ல அந்த பிசாசு வெளியே வரட்டும். இப்பப் போனா சுத்துவா."

"சந்தர்! உனக்கு எத்தனை முறை சொல்றது? அக்காவை மரியாதை இல்லாம பேசக் கூடாதுனு."

"அவளா அக்கா? வாயாடிக் கழுதை."

"நீதான்டா ஊர்மாடு. ஊர் முழுக்க சுத்துற தடிமாடு" என்றவாறு கையில் பிரஷ்ஷோடு வந்து நின்றாள்.

"வளர்! இதென்ன பழக்கம்? அவன்

நம்ம தம்பி. அவனைப் போய் மாடு அது இதுன்ற. இப்படியெல்லாம் பேசக் கூடாது."

"ம்... அப்படிச் சொல்லுக்கா. நீதான் என் செல்ல அக்கா" என்றவாறு நிறைமதியை கட்டிக் கொண்டான் சந்திரசேகர்.

"இப்படி கிலோ கணக்குல ஐஸ் வெச்சே அக்கா தலையில மொளகா அரைச்சிடு. ஆனாலும் நீ ரொம்ப ஏமாளியா இருக்க அக்கா."

"மதிம்மா! ராணியம்மா அனுப்பின ஆள் வந்திருக்கும்மா. துணியெல்லாம் ரெடியா?" அப்பாவின் குரல் கேட்டதும் பதறி ஓடினாள் வளர்மதி. பாத்ரூமிற்குள் நுழைந்து ஐந்தே நிமிடத்தில் வெளியே வந்து முகத்தைக் கூட துடைக்காமல் பூக்களும் கிளைகளும் வரைந்து வைத்திருந்த அந்த திரைச்சீலையை எடுத்துக் கொண்டு மிஷினில் உட்கார்ந்தாள்.

"இதுக்குத்தான் எழுப்பிவிட்டேன். நீ இவ்வளவு நேரம் வெட்டிப்பேச்சு பேசிட்டு இருந்திருக்க. காபியைக் குடி முதல்ல."

"அதெல்லாம் அப்புறம். முதல்ல வேலை" என்றவாறு கடகடவென எம்பிராய்டரி செய்யத் துவங்கினாள்.

நிறைமதி வராண்டாவிற்கு வந்தாள்.

"தம்பி! ஒரு ரெண்டு நிமிஷம் உட்காரும்மா. இப்ப ரெடியாகிடும்."

"சரிங்கக்கா" என்றவாறு அந்த சிறுவன் அமர்ந்துக் கொள்ள, உள்ளே சென்று இரவெல்லாம் விழித்திருந்து தயாரித்து வைத்த மண்ணாலான பூச்சாடிகளை ஒவ்வொன்றாய் எடுத்து அடுக்கினாள்.

வர்ணங்கள் பூசப்பட்ட பூச்சாடிகள் பளபளத்தன. பூவும் இலையும் கிளிகளும் புறாக்களுமாய் மொத்தம் பத்து பூச்சாடிகள். அனைத்தையும் கூடைக்குள் வைத்துவிட்டு எழுந்தபோது நான்கு திரைச்சீலைகளையும் அழகாய் மடித்து எடுத்து வந்தாள் வளர்மதி.

"எல்லாம் கிளீன் பண்ணிட்டியா வளர்? சரியா இருக்குல்ல"

"ராணிம்மா சொன்னமாதிரியே பண்ணியாச்சுக்கா. அப்புறம் காசை கரெக்டா வாங்கிடு. ஊருக்கு போயிட்டு வர பத்து நாளாகும்னு சொன்னாங்களே."

"பையன்தான் வந்திருக்கான். காசு கொடுத்து விட்டாங்களோ என்னவோ தெரியலையே. பார்ப்போம்" என்றவாறு துணிகளையும் கூடையில் வைத்துவிட்டு வெளியே வந்தாள்.

"தம்பி! இந்தா. எல்லாமே இருக்கு. சைக்கிள்லயா வந்தே?"

"ஆமாக்கா!"

"பார்த்துக் கொண்டு போ! எல்லாமே மண் ஜாடி. உடைஞ்சிடப் போகுது."

"மெதுவாத்தான் போவேன்க்கா. இந்தாங்க காசு. அம்மா தந்துவிட்டாங்க" என்றவாறு சட்டைப்பையினுள் கையைவிட்டு ரூபாய் நோட்டுக்களை எடுத்துக் கொடுத்தான்.

அதற்குள் குளித்துவிட்டு வெளியே வந்த சந்தரின் முகம் பிரகாசமானது.

"அக்கா! இன்னிக்கு என்ன ஸ்பெஷல்? காசு வந்தாச்சே."

"நோ ஸ்பெஷல். பொங்கல் வரப்போகுது. செலவுக்கு பணம் வேணுமில்ல. அதனால இந்தப் பணம் கஜானாவுக்கு போகுது."

"இதை நான் கடுமையாக ஆட்சேபிக்கிறேன். இன்னைக்கு தியேட்டருக்கு போக வேண்டும். போயே ஆக வேண்டும்" சந்தர் கத்த, வளர்மதியும் சேர்ந்துக் கொண்டாள்.

"நான் இதை வழிமொழிகிறேன்."

நிறைமதி இடுப்பில் கைவைத்துக் கொண்டாள். "அப்படியா? நீங்க ரெண்டு பேரும் ஸ்டிரைக் பண்ணிட்டு இருங்க. அப்பா! வாங்கப்பா நாம சாப்பிடலாம். இட்லி, சாம்பார், கொத்தமல்லிச் சட்னி, தயிர்வடை எல்லாம் ரெடியா இருக்கு."

"என்ன தயிர்வடையா?" தம்பியும் தங்கையும் கோரஸாய் கேட்க, நிறைமதி தலையாட்டும் முன் இருவரும் கிச்சனில் இருந்தார்கள்.

## 2

கண்ணாடி முன் நின்று தலைவாரிக் கொண்டிருந்த நிரஞ்சனை கோபமாய் அழைத்தாள் சிந்துஜா.

"அண்ணா! எத்தனை நேரமாய் அலங்கரிப்பாய்? நாமென்ன பொண்ணு பார்க்கவா போறோம்? சீக்கிரம் கிளம்பு."

"அப்போ இப்படியே வந்திடவா?"

"சீச்சீ! ஷர்ட் போடுண்ணா... சீக்கிரம்."

"ஏய்! இப்ப ஏன் பறக்கிற. லேட்டாப் போனா உன் சிநேகிதி ஓடிப் போயிடுவாளா? போனா போகட்டுமே."

"அண்ணா! ஷாலுக்குத்தான் அந்த வீடு தெரியும். எனக்குத் தெரியாது. அவதான் நமக்கு வழி சொல்லணும்."

"சிந்து! வர வர உன் அட்டகாசம் தாங்கல்ல. சும்மா உட்கார்ந்து டி.வி.

### ஓட்டுநர் இல்லாத ரோபோட் கார்!

கூகுள் நிறுவனம் ஓட்டுநர் இல்லாமல் நவீன தொழில்நுட்பம் மூலம் இயங்கும் ரோபோட் காரை உருவாக்கும் ஓர் அரிய முயற்சியில் ஈடுபட்டுள்ளது. சமீபத்தில் தான் இந்த கூகுள் ரோபோட் காருக்கான உரிமத்தையும் பெற்று, உலகின் முதல் ரோபோட் கார் என்ற பெருமையை பெற்றுள்ளது. இந்த காரில் பொருத்தப்பட்டுள்ள கேமரா, ராடார், சென்சார் உதவியுடன் தனிப்பட்ட



சாப்ட்வேர் மூலம் இயங்குகிறது. நாம் இந்த காரில் பயணம் செய்யும் போது எந்தவொரு பொத்தானையும் தொட வேண்டியதில்லை. ஏறும் இடம் முதல் இறங்கும் இடம் வரை நாம் வேடிக்கை பார்த்துக் கொண்டே சென்றால் போதும். மற்ற வேலைகள் எல்லாவற்றையும் சாப்ட்வேர் பார்த்து கொள்ளும்.

தற்போது வணிகரீதியாக இந்த கூகுள் ரோபோட் கார் வெளியிடப்படவில்லை என்றாலும் அடுத்து வரும் ஆண்டுகளில் இந்த ரோபோட் கார் விற்பனைக்கு வந்து விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ரோபோட் காரில் நாம் ஏறி உட்கார்ந்து கொண்டால் போதும் நாம் செல்ல வேண்டிய இடத்திற்கு அதுவே போய் சேர்ந்து விடும். நமக்கு வேறு எந்த வேலையும் இந்த ரோபோட் கார் கொடுக்காது. என்ன ஒன்று, இதுபோன்ற உயர் தொழில்நுட்பங்கள் நம்மை மேலும் சோம்பேறியாக்கி விடுகின்றன. இந்த ஒரு குறையை தவிர உயர் தொழில்நுட்பத்தின் வேறு குறையை காண முடியாது.

பார்த்தவனை எழுப்பிவிட்டு இப்படி விரட்டிட்டு இருக்க. உன்கிட்ட மாட்டிட்டு வசந்த் என்ன பாடுபடப் போறானோ?" போலியாய் வருந்தியவனின் முதுகில் அறைந்தாள் சிந்துஜா.

"அது வசந்த்தோட கவலை. நீ ஒண்ணும் கவலைப்பட வேண்டாம்."

"பேசாம அவனையே கூட்டிட்டு போயேன். இன்னிக்கு மேட்ச் இருக்கு."

"என்னை விட உனக்கு கிரிக்கெட் பெரிசா போச்சா. பேசாம வா. கல்யாணம் வரைக்கும் வசந்த்தோட எங்கும் வெளியே போகக்கூடாதுன்னு அப்பா கண்டிஷன் போட்டிருக்காங்க."

"அடேங்கப்பா! அப்பா சொல்றதை தட்டவே மாட்டியே" என்றவாறு ஹேங்கரில் கிடந்த சட்டையை எடுத்து மாட்டிக் கொண்டு, கார் சாவியை கையில் எடுத்தான் நிரஞ்சன்.

"அண்ணா! முதல்ல ஷாலு வீட்டுக்கு போ. அவளையும் பிக்-அப் பண்ணிட்டு மயிலாப்பூர் போகணும்" என்றவாறே காரில் ஏறி அமர்ந்தாள் சிந்து.

"அவ்வளவு தூரம் போகணுமா? இன்னிக்கு ஒன்டே மேட்ச் இருக்கு சிந்து."

"இருக்கட்டுமே. நைட் நியூஸ்ல கேட்டுக்க. இப்பக் காரை எடு" என்றாள் உத்தரவாய்.

முணுமுணுத்தவாறே காரை இயக்கினான் நிரஞ்சன்.

"அப்படியென்னதான் வாங்கப் போற? அதையாவது சொல்லு."

"அண்ணா! போனவாரம் ஷாலு வீட்டுக்கு போயிருந்தேன். அப்போ அவங்க அம்மா எனக்கு ஒரு கப்ல காபி கொடுத்தாங்க."

கோபமாய் தங்கையை முறைத்தான். "இதெல்லாம் ஒரு மேட்டரா?"

"முழுசாக் கேளேன். நாமெல்லாம் காபி எதில குடிப்போம்?"

"இதென்ன கேள்வி? டம்ளர்லதான்."

"அது தெரியும். ஆனா நாமெல்லாம் சில்வர், பிளாஸ்டிக், பீங்கான் இல்லன்னா வெள்ளி டம்ளர்லதானே குடிப்போம்."

"ஆமா."

"ஆனா ஷாலு வீட்டுல மண் கிளாஸ்ல கொடுத்தாங்கண்ணா."

"மண் கிளாஸா?"

"ஆமாண்ணா. மண் குவளை, மண் டம்ளர், மண் கிண்ணம், அப்புறம் மண்லயே பூஜாடியெல்லாம் வாங்கி வெச்சிருக்கா."

"சரி. அதுக்கென்ன? நாம இப்போ எங்கே போறோம்?"

"அந்த பொருளெல்லாம் எனக்கு ரொம்பப் பிடிச்சிருந்தது. எங்கே

வாங்கினேன்னு கேட்டேன். மயிலாப்பூர்ல ஒரு வீட்டுல செய்து விக்கறாங்களாம். இப்போ அதை வாங்கத்தான் போயிட்டு இருக்கோம்."

தங்கையை பரிதாபமாய் ஏறிட்டான் நிரஞ்சன். "சிந்து! இது உனக்கே நியாயமாப்படுதா? ஒரு மண்சட்டி வாங்கிறதுக்கு யாராவது பெட்ரோல் போட்டு கார் எடுத்துக்கிட்டு போவாங்களா?"

"என்ன அண்ணா இப்படிச் சொல்றே? மண்பாத்திரம்னா உனக்கு அவ்வளவு சீப்பா இருக்கா. மண் பாத்திரத்தில சமைச்சு மண்பானைத் தண்ணி குடிச்சதாலதான் நம்ம தாத்தா பாட்டியெல்லாம் இன்னும் ஸ்ட்ராங்கா ஹெல்த்தியா இருக்காங்களாம். தெரியுமா உனக்கு?"

"இதெல்லாம் உனக்கு யார் சொன்னது?"

"ஷாலு அம்மாதான் சொன்னாங்க."

"அப்போ சரி. உன் கல்யாண சீரா நாலஞ்சு மண்பானை, மண்குவளையெல்லாம் வாங்கித் தந்திடுறேன். எலக்ட்ரிக் குக்கர், பிரஷர் குக்கர், வெள்ளிப் பாத்திரம் வாங்குற செலவு எங்களுக்கு மிச்சம்."

"அண்ணா! அடி வாங்காதே. ஷாலு வாசல்லயே நிக்கிறா பாரு. காரை ஓரமா நிறுத்து." தங்கையின் கட்டளைக்கு கட்டுப்பட்டு காரை ஷாலினியின் அருகே நிறுத்தினான்.

சிந்துஜாவின் வயதை ஒத்த அந்த ஷாலினி கையில் ஒரு பையுடன் காரில் ஏற, கார் மீண்டும் புறப்பட்டது.

"ஹாய் சிந்து! ஹாய் அண்ணா. ஹவ் ஆர் யூ?" என்றாள்.

"ம்... பைன் மா. நீ எப்படி இருக்கே?"

"நல்லா இருக்கேண்ணா. சிந்து! நீ என்னவெல்லாம் வாங்கப் போறே" என தோழியிடம் கேட்டாள் ஷாலினி.

"போய்ப் பார்ப்போம். எதெல்லாம் பிடிக்குதோ அதெல்லாம் வாங்கிட வேண்டியதுதான். ஆமா... பை எதுக்கு ஷாலு?"

"நாம வாங்குற பொருளை பத்திரமா கொண்டு வரணுமில்ல. அதுக்குத்தான்."

"ஏன்? கவர்ல போட்டுத் தர மாட்டாங்களா?"

"பாலிதீன் பை யூஸ் பண்ணக் கூடாதுன்ற கொள்கையில இருக்காங்களாம். போன முறை இது தெரியாம போயிட்டேனா? அவங்க வீட்ல உள்ள பையிலயே தந்து விட்டாங்க. அதையும் திருப்பிக் கொடுக்கிறதுக்கு கொண்டு வந்தேன்."

"அச்சோ! நான் பேக் கொண்டு வரலையே."

"பரவாயில்லடி. நான் உனக்கும் சேர்த்துதான் எடுத்திட்டு வந்தேன். சரி, மாப்பிள்ளை போன் பண்ணினாரா?"

"ம்... நேத்து பண்ணினார். ஒரு வார டூர் ஹாங்காங் போயிருக்காங்க. நெக்ஸ்ட் வீக்தான் வருவார்."

"ஏன், கல்யாணம் முடிஞ்ச பிறகு போனா என்னவாம்? உன்னையும் கூட்டிட்டு போகலாமில்ல."

"இல்ல ஷாலு. இது பிஸினெஸ் டூர். மேரேஜ்க்கு அப்புறம் சிம்லா கூட்டிட்டுப் போறேன்னு சொல்லியிருக்கார்" சிந்து முகம் சிவக்கக் கூறினாள்.

"சிம்லாவா? சில்லுன்னு இருக்கும். புதுமணத் தம்பதிகளுக்கு ஏத்த இடம்தான். சரியான தேர்வு."

"ஷ்! அண்ணா இருக்கான்டி. மெல்லப் பேசு."

தோழிகளின் கிசுகிசுப்பில் கவனத்தை சிதறவிடாமல் சாலையில் கவனம் பதித்திருந்த நிரஞ்சன், ஒரு பிஸினெஸ்மேன். உணவுப் பொருட்களை பதப்படுத்தி அதை வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்பவன். அதோடு தன் நண்பன் கார்த்திக்குடன் சேர்ந்து உயர்தர சைவ உணவகம் ஒன்றையும் நடத்தி வருபவன்.

அப்பாவிற்கு ரெயில்வேயில் உயர்ந்த பதவி. அம்மாவிற்கு வீட்டு நிர்வாகம். ஒரே தங்கை சிந்துஜா. படித்து முடித்த கையோடு அருமையான வரன் அமைந்து விட திருமணத்திற்கு தயாராகி நிற்கிறாள்.

"இன்னும் ஒரு மாதத்தில் மாப்பிள்ளைக்கு இருபத்தியேழு வயது பிறந்து விடும். அதன்பிறகு திருமணம் செய்தால் சுபம்" என்று மாப்பிள்ளை வீட்டார் கூறியதால் கோலாகலமாக நிச்சயதார்த்தம் முடிவடைந்து திருமண நாளை எண்ணிக் கொண்டிருந்தனர் இளசுகள்.

மாப்பிள்ளை வசந்த் தொழிலில் புலிதான். பெண்களுக்கான பேன்சி பொருட்கள் மற்றும் வாசனைத் திரவியங்கள் தயாரித்து மொத்த விற்பனை செய்யும் தொழில். நாடு முழுவதும் பறந்துக் கொண்டே இருப்பான். பார்த்தவுடனே சிந்துவை அவனுக்கும், வசந்தை சிந்துவுக்கும் பிடித்துப் போக இப்போது போனிலே தங்களது வருங்காலத்தை, விருப்புவெறுப்புகளை பகிர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இது மட்டுமே நிரஞ்சன் அறிந்த



ரகசியம். ஆனால் அவனையும் அறியாமல் மாப்பிள்ளை வீட்டினர் ஒரு மாயவலைப் பின்னிக் கொண்டிருப்பதை அவனோ சிந்துவோ அறிந்திருக்கவில்லை.

''அண்ணா! இதோ இந்த லெப்ட். பார்த்து! சந்து கொஞ்சம் குறுகலா இருக்கும்'' என ஷாலினி குரல் கொடுக்க, காரை மெதுவாக திருப்பி அந்த சிறிய தெருவிற்குள் நுழைத்தான் நிரஞ்சன்.

"அதோ! அந்த பச்சை பெயிண்ட் அடித்த வீடுதான்." அவள் காட்டிய சற்று உள்ளடங்கி இருந்த அந்த நடுத்தர வீட்டின் முன்னே காரை நிறுத்தினான்.

தோழியர் இருவரும் இறங்கிக் கொள்ள, சிந்துஜா அண்ணனிடம் குனிந்தாள்.

"நீயும் வாயேண்ணா."

"நானா? நான் எதற்கு?"

"காரில் சும்மா இருந்தால் போரடிக்குமே உனக்கு!"

''அதைப்பற்றி நீ கவலைப்பட வேண்டாம். நான் பாட்டு கேட்டுக் கொள்கிறேன். நீங்க கிளம்புங்க. சீக்கிரமா வாங்க."

''சரி. நாங்க போயிட்டு வர்றோம்'' என்றவாறு அவர்கள் உள்ளே செல்ல, வீட்டினுள் இருந்து இரண்டு பெண்கள் கூடையில் ஏதோ பொருட்களோடு வெளியே வந்து கொண்டிருந்தனர்.

நிரஞ்சன் அந்த வீட்டை நோட்டமிட்டான். மொட்டைமாடியுடன் கூடிய அமைப்பான வீடு. இருபுறமும் பூச்செடிகளோடு பூக்களோடு பசுமையாய் இருந்தது. வீட்டின் பின்புறமாய் நான்கைந்து தென்னைமரங்கள் உயரமாய் வளர்ந்திருந்தது. வீட்டின் முன்புறம் இருந்த சிமெண்ட் தரையில் சிந்துஜா சொன்ன பொருட்கள் வெயிலில் காய வைக்கப்பட்டிருந்தது.

மண் கோப்பைகள், குடுவைகள், பூக்குவளைகள், தொட்டிகள் என எல்லாமே வரிசையாய் உலர வைக்கப்பட்டிருந்தன. வெறும் மண்பாண்டங்கள் அல்ல. மண்பாண்டத்தில் வண்ணமயமாய் படங்கள், ஓவியங்கள் வரையப்பட்டு மெருகேற்றி வைக்கப்பட்டிருந்தது.

வியப்பாய் புன்னகைத்தான் நிரஞ்சன். 'சாதாரணப் பொருட்கள். ஆனால் அதில் தன் திறமையைக் காட்டி ஒரு சிறந்த கைத்தொழிலாக மாற்றி அதை பிரபலப்படுத்தியிருக்கிறார்களே. கிரேட். இதுகூட ஒரு சாதனைதான்.' புன்னகையோடு பார்வையை வெளியே திருப்புகையில் அது கண்ணில் பட்டது.

வாசலில் தொங்கிய பலகை போன்ற பொருளில் சில எழுத்துக்கள். உற்றுப் பார்த்தான். 'அன்றில்கள் குடில்'. 'அன்றில்னா... இணைபிரியாத பறவை. அப்படின்னா... இந்த தொழில் செய்வது கணவனும் மனைவியாக இருக்குமோ? ரொம்ப அன்யோன்யமான தம்பதிகளாக இருக்குமோ? எத்தனை ரசனையான பெயரை தங்கள் இல்லத்துக்கு தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்.'

ஏதோ ஒரு இனம்புரியாத பரவசத்தோடு இனிய புன்னகையோடு சீட்டில் சாய்ந்து கொண்டு காத்திருக்க ஆரம்பித்தான். டேப்பை சுழலவிட்டுக் கொண்டு கண்களை மூடி ஒரு குட்டித் தூக்கத்திற்கு தயாரானபோது காரின் கண்ணாடியை 'டொக், டொக்' என யாரோ தட்டினார்கள்.

### உலகின் மிக நீளமான கட்டிடம்!

உலகின் மிக நீளமான கட்டிடம் லண்டனில் கட்டப்பட்டுள்ளது. இந்த அடுக்குமாடி கட்டிடம் 95 அடுக்குகளை கொண்டது. 310 மீட்டர் அதாவது 1,061 அடி நீளம் கொண்டது. இந்த அடுக்கு மாடி கட்டிடத்தில் ஒட்டல், ரெஸ்டாரண்ட், குடியிருப்புகள், அலுவலகங்கள் அமைந்துள்ளன. 2009-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் இந்த கட்டிடத்தின் கட்டுமானப் பணிகள் தொடங்கி 3 ஆண்டுகள் தொடர்ந்து நடைபெற்று இப்போது இக்கட்டிடம் திறப்புவிழாவை கண்டுள்ளது. இக்கட்டிடத்தை கட்ட 450 மில்லியன் பவுண்ட் செலவிடப்பட்டுள்ளது.

28-வது அடுக்கு வரை இந்தக் கட்டிடத்தில் அலுவலகங்கள் இயங்கும். இதற்கு அடுத்தபடியாக 3 அடுக்குகளில் ரெஸ்டாரண்டுகள் இயங்கவுள்ளன. இதற்கு மேலே

200 அறைகள் கொண்ட 5 நட்சத்திர ஓட்டல்கள் 19 அடுக்குகளில் செயல்பட உள்ளது. அடுத்த 12 அடுக்குகளில் 10 அடுக்குமாடி குடியிருப்புகள் வருகின்றன. ஒரு சிறிய குடியிருப்பை விடவும் 7 மடங்கு பெரியதாக இந்த குடியிருப்புகள் இருக்கும். இந்த குடியிருப்புகளை பெற வேண்டுமானால் பல மில்லியன் பவுண்ட் செலுத்த வேண்டியது இருக்கும். கட்டிடத்தின் இறுதியில் வானியல் ஆய்வு மையமும், அதற்கும் மேலே கோபுரம் போன்ற வடிவிலான கட்டிடமும் அமைந்திருக்கும். இந்த கட்டிடத்தை இத்தாலியை சேர்ந்த ரென்சோ பியானோ என்பவர் தான் வடிவமைத்துள்ளார்.

தற்போது இங்கிலாந்தின் பாரம்பரிய கட்டிடங்களாக லண்டனின் கோபுரம் என்று அழைக்கப்படும் செயின்ட் பால்ஸ் கதீட்ரல் கட்டிடமும், வெஸ்ட் மின்ஸ்டர் அரண்மனையும் விளங்குகிறது. இப்போது இந்த கட்டிடம் வந்த பிறகு இந்த இரு பாரம்பரிய கட்டிடத்தையும் மிஞ்சி விடுமோ என்று கட்டிட வல்லுநர்கள் கருதுகிறார்கள்.

"யாரது?" குரல் கொடுத்தவாறே திரும்பியவன் அசந்து போனான். கதவையொட்டியவாறே அந்தப் பெண் சற்றே கோபத்தோடு நின்று கொண்டிருந்தாள்.

எந்தவித அலங்காரமும் இல்லாமல் ஒரு பெண் இத்தனை அழகாய் இருக்க முடியுமா? காந்தக் கண்களில் ஏன் இத்தனை கோபம்? அந்த அழகுச்சிலை வாய் திறந்து ஏதோ பேச, அவசரமாய் கண்ணாடியை இறக்கி விட்டான்.

"ஹலோ! யார் சார் நீங்க? கார் ஏன் இங்க நிக்குது?"

"நான்... நான் இங்கே..."

"ஏன் சார், காரை கொஞ்சம் ஓரமா நிறுத்தக் கூடாதா? இப்படியா கோலத்து மேல நிறுத்துவீங்க?" குயில் சற்று கோபமாக கூவியதைப் போலிருந்தது அவளது தேன் குரல்.

"கோலமா? ஐ'ம் ஸாரி. நான் கவனிக்கல்ல."

"காலையில நாலு மணிக்கே எழுந்து ரெண்டு மணி நேரமா போட்ட கோலம். இப்படி நிமிஷத்தில கலைச்சிட்டீங்களே" கேட்டுக் கொண்டே சற்று வருத்தமாய் முற்றத்தைப் பார்த்தாள் நிறைமதி.

"ஐ'ம் வெரி ஸாரி. கொஞ்சம் வெயிட் பண்ணுங்க. நான் காரை எடுத்திடுறேன்" என்றவாறே ஹாரனை அழுத்தினான்.

காதைப் பொத்திக் கொண்டாள் நிறைமதி. "இப்ப ஏன் இப்படி காது செவிடாகிற மாதிரி ஹாரன் அடிக்கிறீங்க."

"ஸாரிங்க... என் தங்கை உள்ளே இருக்கா. இது அவளுக்காக அடிச்ச ஹாரன்" என்றவாறே வீட்டினுள் எட்டிப் பார்த்தான்.

"அங்கே என்ன பார்வை? இது என் வீடு" என்றாள் நிறைமதி கடுப்பாய்.

ஆச்சர்யமாய் அவளை ஏறிட்டான்.

"என்ன? இந்த அன்றில்குடில் உங்க வீடா? அப்போ... இந்தப் பொருளெல்லாம்..." என பேசிக் கொண்டிருக்கையிலே, சிந்துஜா வெளியில் வந்தாள்.

"ஏண்ணா ஹாரனடிச்சே. என்ன அவசரம் உனக்கு? நான் இன்னும் நிறைய பர்ச்சேஸ் பண்ணணும். எவ்வளவு வெரைட்டி இருக்கு தெரியுமா? நீயும் வான்னு கூப்பிட்டதுக்கு மாட்டேன்னியே... ஆமா இவங்க யாரு?" கேள்வியாய் நிறுத்தினாள்.

"இவங்கிட்டதான் கேட்கணும். நீயே கேளேன்."

"யாருங்க நீங்க?" என்றாள் சிந்துஜா.

"உங்க அண்ணனை காரைக் கொஞ்சம் ஓரமாய் நிறுத்தச் சொல்லுங்க" என்று சொல்லிவிட்டு வீட்டுக்குள் நுழைந்து மறைந்தாள் நிறைமதி.

"யாருண்ணா இது? ஏன் இவ்வளவு கோபமா போறாங்க?"

"கோலத்தை கலைச்சிட்டேனாம். இரண்டு மணி நேரமா போட்ட கோலமாம். நான்தான் கவனிக்கல்ல. அதான் இவ்வளவு கோபம்!"

"ஏண்ணா? பார்த்து ஓரமா நிறுத்தக் கூடாதா நீ. போ... காரைத் திருப்பி அந்த சுவரோரமா நிறுத்து. நான் பர்ச்சேஸ் பண்ணிட்டு வர்றேன்."

தங்கை சொன்னது போல் காரைத் திருப்பிவிட்டு சுவரோரமாய் நிறுத்திக் காத்திருக்கத் தொடங்கினான். கண்கள் தானாக அந்த கோலத்தை ஆராய்ந்தது. அழகான மான் கோலம். இரண்டு மான்களின் கொம்பு அழிந்து போயிருந்தது. நடுவே நிற்க வைத்திருந்த சாணியும் செம்பருத்திப் பூவும் காரின் டயர் பட்டு நசுங்கியிருந்தது.

'ம்ப்ச்! இந்தப் பெண் கோபப்பட்டதில் நியாயம் இருக்கிறது. முதலிலேயே கவனித்து

காரை ஓரமாய் நிறுத்தியிருக்கலாம். இறங்கிப் போய் ஒரு ஸாரி கேட்டுவிட்டு வரலாமா? வேண்டாம். ரொம்ப கோபமாய்ப் போனாளே. இந்த நேரம் நாம் உள்ளே போனால் நன்றாய் இராது.

இந்த சிந்து இன்னும் என்னதான் செய்கிறாள்? வீட்டையே விலை பேசுகிறாளா? இந்த சிறிய வீட்டில் அப்படி எவ்வளவு பொருள் குவிந்து கிடக்கப் போகிறது?' சலிப்பாய் மீண்டும் வீட்டை நோட்டமிட்டபோது பார்வையின் குறுக்கே வந்து நின்றான் சந்திரசேகர்.

கையில் சற்று தடிமனான கிரிக்கெட் மட்டை. வெயிலில் விளையாடிவிட்டுத் திரும்பியதில் முகம் முழுக்க வியர்த்திருந்தது. அரும்பு மீசை துளிர்த்திருந்த முகத்தில் தற்போது கோபம் குடிகொண்டிருந்தது. கிரிக்கெட் மட்டையை தோளில் வைத்தவாறே சற்றே மிரட்டலாய்க் கேட்டான்.

"ஹலோ! கார் ஏன் இங்கே நிக்குது?"

நிரஞ்சன் அவனைப் பார்த்தான். "நீங்க யாரு சார்?"

"நான் யாரா இருந்தா உனக்கென்னய்யா? இங்க வந்து காரை நிறுத்திட்டு எங்க வீட்டை நோட்டம் விட்டுட்டு இருக்கியே... நீ யாரு, முதல்ல அதைச் சொல்லு."

"போச்சுடா" நெற்றியில் கைவைத்துக் கொண்டான் நிரஞ்சன்.

"இன்னும் உங்க வீட்ல யாரெல்லாம் இருக்கிங்க. எல்லாருமே இப்படித்தான் விசாரிப்பீங்களா?"

"ஹலோ நான் கேட்டதுக்குப் பதில் சொல்லுங்க."

"தம்பி! நான் நிரஞ்சன். குரோம்பேட்டையில இருந்து வந்திருக்கோம். உங்க வீட்ல செய்து விக்கிற பொருட்களை வாங்க என் தங்கை உள்ளே போயிருக்கா. அவ வரதுக்காக நான் கார்ல வெயிட் பண்றேன். உனக்கு சிரமமா இருந்தாச் சொல்லு, நான் மெயின் ரோட்டுக்கு போயிடுறேன்." நிரஞ்சன் படபடவென சொல்ல, சந்திரசேகர் பதறினான்.

"சார்... மெல்லப் பேசுங்க சார். அவ்வளவு தூரத்தில இருந்து வந்திருக்கிங்க. நான் யாரோ பொறுக்கிப் பசங்கன்னு நினைச்சு விசாரிச்சுட்டேன். ஸாரி சார்."

"பரவாயில்லப்பா. நீ யாரு?"

"நான் சந்திரசேகர். இந்த வீட்டின் கடைக்குட்டி."

"ஓ! இந்தப் பொருளெல்லாம் உங்க அம்மாவும் அப்பாவும் செய்யறாங்களா?" பேச்சுத்துணை கிடைத்த ஆர்வத்தில் மெல்ல பேச்சுக் கொடுத்தான்.

"இல்ல சார். எங்க அம்மா இப்போ உயிரோட இல்ல. எங்க அப்பாதான் மண்பாண்டம் செய்வாங்க. எங்க பெரியக்கா அதில பெயிண்டிங் பண்ணுவாங்க. எங்க சின்னக்கா துணிகளுக்கெல்லாம் டிஸைன் போட்டு எம்பிராய்டரி பண்ணுவாங்க" என்றான் பெருமையாய்.

"நீ என்ன பண்றே?"

"நான் படிச்சிட்டு இருக்கேன் சார். பிளஸ் டூ. நெக்ஸ்ட் இயர் மெடிக்கல் காலேஜ்ல ஜாயின் பண்ணப் போறேன்."

"என்ன? டாக்டராகப் போறியா?"

"ஆமா சார். அது மட்டும்தான் என்னோட குறிக்கோள்."

"அப்போ... இது?" என்றான் கிரிக்கெட் மட்டையைக் காட்டி.

"இதுவா?... இது சும்மா ஹாபி. சில சமயம் ஆட்களை மிரட்டவும் உதவும்."

"என்னை மிரட்டின மாதிரியா?" நிரஞ்சன் சீரியஸாய்க் கேட்கவும் சந்தர் சிரித்துவிட, "சந்தர்! உள்ளே வா" என அதட்டல் குரல் கேட்டு இருவரும் திரும்பினர்.

அதே தேவதை அதே கோபத்தோடு வாசலில் நின்றது.

## 3

"இதோ வந்திட்டேன்க்கா" என்றவாறு சந்திரசேகர் ஓட, நிரஞ்சன் காரை விட்டு இறங்கினான். அதற்குள் கையில் பெரிய பையோடு வெளியே வந்த சிந்து, "அண்ணா! சீக்கிரம் வா. ரொம்ப வெயிட்டா இருக்கு" என குரல் கொடுத்தாள்.

"இதோ வர்றேன்" என நாலே எட்டில் தங்கையை நெருங்கியவன் தங்கையின் கையிலிருந்த பையை வாங்கிக் கொண்டான்.

"என்ன சிந்து! இவ்ளோ வெயிட்டா இருக்கு. குரோம்பேட்டையில ஒரு பிராஞ்ச் தொடங்கப் போறியா?"

"என்ன அண்ணா, இதுக்கே இப்படிச் சொல்ற? இன்னும் உள்ளே இருக்கே. வளர்மதி! அதைக் கொஞ்சம் கொண்டு வாங்களேன். ப்ளீஸ்"

"இதோ!" என்றவாறே கைக்கொன்றாய் இரண்டு பைகளோடு வெளியே வந்தாள்

வளர்மதி. ஷாலினியின் கைகளிலும் இரண்டு பெரிய பை.

"ஏய்! சிந்து. என்ன இதெல்லாம்? இவ்வளவா வாங்கினே!"

"ஆமாண்ணா. எல்லாத்திலேயுமே ரெண்டு ரெண்டு செட் வாங்கிட்டேன்."

"ரெண்டா? நீயும் ஷாலுவும் ஆளுக்கொரு ஸ்டால் போடப் போறீங்களா? குட் ஜாப்" என்றவாறு பேகை எடுத்து காரில் வைத்தான்.

"விளையாடாதே அண்ணா! ஒரு செட் நம்ம வீட்டுக்கு. ஒரு செட் வசந்த் வீட்டுக்கு"

"வசந்த் வீட்டுக்கா? ஏய் இதையெல்லாம் அவங்க யூஸ் பண்ணுவாங்களா?"

"பண்ணாட்டி போகட்டும். நான்தான் இன்னும் ரெண்டு மாசத்தில அங்கே போயிடுவேனில்ல. நான் யூஸ் பண்ணிக்கிறேன்."

"அதுசரி. இவ்வளவுதானா? இல்ல வீட்டையே வாங்கிட்டியா?"

"நீங்க கேட்டவுடனே வித்திடுவோமாக்கும். இது எங்க அம்மாவும் அப்பாவும் வாழ்ந்த வீடு" என்றாள் வளர்மதி.

"ஸாரி... ஸாரி. சும்மா ஒரு விளையாட்டுக்குக் கேட்டேன். ஸாரி."

"பரவாயில்ல சார். எங்க அக்கா எப்பவுமே இப்படித்தான்..." என்ற சந்தரை தன் முறைப்பால் அடக்கினாள் நிறைமதி. மவுனமாய் அவன் வீட்டினுள் சென்றுவிட, அண்ணனிடம் திரும்பினாள் சிந்துஜா.

"அண்ணா! இவங்க வளர்மதி. ஸ்கிரீன்ல, சாரியில எல்லாம் ரொம்ப அருமையா ஸ்டிச் பண்ணியிருக்காங்க. ஸ்டோன் வொர்க்கெல்லாம் கூட பண்ணுவாங்களாம்."

"ஹலோ" என்றான் சிநேகமாய். வளர்மதி கைகுவித்தாள்.

"அப்புறம்! இவங்க நிறைமதி. இவங்கதான் இந்த பெயிண்டிங்செல்லாம் பண்றாங்க. அதுமட்டுமில்லண்ணா... பனை ஓலையிலேயே வெல்கம் போர்டு எல்லாம் செய்யறாங்க. இதோ வாசல்ல தொங்குதே... இதே மாதிரி."

"இதெல்லாம் ஏன் அவர்கிட்ட சொல்லிட்டு..." நிறைமதி சற்றே சங்கோஜமாய் கூறினாள்.

"இல்லங்க. காரணமாத்தான் சொல்றேன். எங்க அண்ணன் 'புட் புராடக்ட்' கம்பெனி வெச்சிருக்கான். அதோட ரெஸ்டாரண்ட் வைச்சிருக்கான். உங்க பொருட்கள் தேவைன்னா யூஸ் பண்ணிக்கலாமே. என்ன அண்ணா?"

"ம்... பார்க்கலாம். இன்னும் பத்து நாள்ல ஓட்டல்ல உள்ள திரைச்சீலை, டேபிள்கிளாத் எல்லாமே மாத்தணும். வளர்மதி! நீங்க ரெண்டு சாம்பிள் பீஸ் கொடுங்க. என் பிரண்டோட டிஸ்கஸ் பண்ணிட்டு மொத்த ஆர்டரையும் தந்திடுறேன்" அவன் இயல்பாகவே சொல்ல, வளர்மதி விழிகளை விரித்தாள்.

## பார்வையற்றவர்களுக்கு உதவும் கருவி!

கண் பார்வையற்றவர்களுக்கு உதவும் வகையில் வண்ணங்களை இனம் கண்டு அதற்கு ஏற்றவாறு மாறுபட்ட இசையை உருவாக்கக்



கூடிய 'ஐ மியூசிக்' என்ற நவீன கருவி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஜெருசலேம் நகரில் உள்ள பல்கலைக்கழகம் ஒன்று இந்த கருவியை கண்டுபிடித்துள்ளது. 5 வகையான நிறங்களை இனம் கண்டு அவற்றிற்குரிய சமிக்ஞைகளை ஒலி வடிவில் கொடுப்பதற்கென, இசைகளை உள்ளடக்கியதாக இக்கருவியில் புரோகிராம் செய்யப்பட்டுள்ளது. நீலம், சிவப்பு, பச்சை, மஞ்சள் ஆகிய நிறங்களை காட்டும் போது ஒவ்வொரு விதமான இசையை இக்கருவி எழுப்பும். கருப்பு நிறத்தினை அடையாளம் காட்டும் போது இந்த கருவி எந்தவிதமான ஒலியையும் எழுப்பாது.

மேலும், நிறங்களை கண்டறிவதற்கென இக்கருவியில் விசேஷ வீடியோ கேமரா ஒன்றும் பொருத்தப்பட்டிருக்கும். இந்த கருவி எழுப்பும் இசை மூலம் பார்வையற்றவர்கள் வண்ணங்களை இனம் கண்டு கொள்ளலாம். இக்கருவி பார்வையற்றவருக்கு ஒரு கொடை என்றே சொல்லலாம்.

"நிஜம்மாவா சார்? பெரிய ஆர்டரா?"

"ம்? மூணு மாடி. மொத்தம் ஒரு இருநூறு டேபிள் இருக்கும். அப்புறம் ஒரு நாற்பது ஜன்னல் இருக்கும். அப்புறம் பேமிலி ரூம் ஒரு முப்பது. எல்லாத்துக்குமே ஸ்கிரீன் உண்டு."

மலைத்துப் போனாள் வளர்மதி. பெரியவளிடம் திரும்பினான் நிரஞ்சன்.

"எங்க ஓட்டல்லயும் கம்பெனியிலயும் ப்ளவர் வாஸ் தேவைப்படுது. நான் நெக்ஸ்ட் வீக்ல வந்து ஆர்டர் கொடுக்கிறேனே."

"ம்" தலையாட்டினாள் நிறைமதி.

"ஓ.கே. சிந்து! போலாமா?"

"இருண்ணா. ஒரு ஐநூறு ரூபா கொடு."

"ஏன்?"

"நான் கொண்டு வந்ததெல்லாம் செலவாகிப் போச்சு. இன்னும் கொஞ்சம் பேலன்ஸ் இருக்கு" என்றதும் தன் பேண்ட் பாக்கெட்டிலிருந்து பணத்தை எடுத்து நீட்டினான்.

"இந்தாங்க நிறைமதி."

"ஒரு நிமிஷம். இருபது ரூபா சேஞ்ச் வாங்கிட்டுப் போங்க" என்றவாறு அவள் வீட்டினுள் சென்றுவிட, வளர்மதி தயக்கமாய் நிரஞ்சனை ஏறிட்டாள்.

"சார்! நீங்க சும்மா பார்மாலிட்டிக்காக சொல்லலையே"

"நோ... நோ. வேலை விஷயத்தில் நான் எப்போதும் விளையாடுவதில்லை! சாம்பிள் பீஸ் கேட்டேனே"

"அண்ணா! நானே அஞ்சு டோர் காட்டன் வாங்கியிருக்கேன். வேற அவங்ககிட்ட ஸ்டாக் இல்ல. நம்ம வீட்ல வந்து பார்த்துக்க."

"சரி. போலாமா?"

"இதோ வந்திட்டேன்" என்றவாறு கையில் இரண்டு பத்து ரூபாய் நோட்டுகளோடு ஓடி வந்தாள் நிறைமதி. வாங்கிக் கொண்டு தோழியர் இருவரும் காரில் ஏறிக் கொள்ள, நிரஞ்சன் நிறைமதியிடம் வந்தான்.

"ஸாரிங்க."

"எ...எதுக்கு?"

"வந்து... உங்க கோலத்தில காரை நிறுத்தினதுக்கு."

"பரவாயில்ல சார் விடுங்க. எப்படியும் கலையறதுதானே" என்றாள் வளர்மதி.

"இல்ல. நான் கவனிக்கல்ல."

"பரவாயில்ல. நீங்க கிளம்புங்க" என்ற நிறைமதியைப் பார்த்து புன்னகைத்தான் நிரஞ்சன்.

"நீங்க... போன் வெச்சிருக்கீங்களா?"

"எதுக்கு?"

"ஆர்டர் பண்ணத்தான். போன்ல சொன்னா நீங்க ரெடி பண்ணி வெப்பீங்களே. அதுக்காகத்தான்."

"இல்ல சார். நேர்ல பாத்து எந்த டிஸைன் வேணும்னு சொல்லிட்டா ஒரு வாரத்தில ரெடி பண்ணிக் கொடுத்திடுவோம்."

"சரிங்க... வர்றேன்" என்றவாறு காரை அடைந்து புறப்பட்டுப் போனான் நிரஞ்சன்.

வளர்மதி தமக்கையிடம் கடிந்துக் கொண்டாள். "போன் நம்பர் கொடுத்தால் என்னக்கா?"

"வளர்! சிறுபிள்ளை போல் பேசாதே. இவர் யாரோ எவரோ? யார் கேட்டாலும் போன் நம்பர் கொடுத்திடக் கூடாது. அது தேவையில்லாத பிரச்சினைகளை கொண்டு வரும்."

"என்ன பிரச்சினை வரும்? இவரைப் பார்த்தாலே ரொம்ப நல்லவர் மாதிரி இருக்குதே. இல்லடா சந்தர்?"

"ஆமாக்கா! நான் கூட கார் ஏன் நம்ம வீட்டு முன்னால நிக்குதுன்னு அவர்கிட்ட கோபப்பட்டேன். ஆனா அவருக்கு கோபமே வரல்ல."

'நானும்தான் திட்டினேன். அவருக்கு கோபமே வரவில்லையே. மாறாக மன்னிப்பு தானே கேட்டார்.' மனதிற்குள் நினைத்தவாறே பணத்தை பத்திரப்படுத்தினாள்.

"அப்பாவும் இருந்திருந்தா நல்லா இருந்திருக்கும் இல்லக்கா. வீட்ல ஒரு பொருள் கூட இல்ல. எல்லாத்தையும் அந்தப் பொண்ணு அள்ளிட்டு போயிட்டா."

"அக்கா! இவங்க ரொம்ப பணக்காரங்களா இருப்பாங்களோ? அந்தப் பொண்ணு கேட்டதும் ஐநூறு ரூபா நோட்டை எடுத்து நீட்டினாரே அந்த ஆள்."

"வளர்! அவர் பேர் நிரஞ்சன்னு சொன்னார். ஆள்கூட சும்மா ஜம்முன்னு இருக்காரில்ல. நான் கூட வளர்ந்தபிறகு அப்படித்தான் இருப்பேன். அதேமாதிரி கார் கூட வாங்குவேன்" கண்கள் கனவில் மிதக்க கூறினான் சந்தர்.

"தம்பி! நீ கார் வாங்குவது இருக்கட்டும். அதற்குமுன் இதேபோல அழகான பணக்கார மாப்பிள்ளையா பாருடா. அக்காவுக்கு வயசு ஏறுதில்ல."

"இதேபோல என்ன? இதே

மாப்பிள்ளையையே பார்த்திடலாம்" என்ற சகோதரனை அதட்டினாள் நிறைமதி.

"ரெண்டுபேரும் முதல்ல வாயை மூடுங்க. எப்பவுமே நமக்கு மேல உள்ளவங்களை பார்த்து ஏங்கக் கூடாது. நம்ம தகுதிக்கேத்த மாதிரி ஆசைப்படணும்."

"போக்கா! அது சம்பாதிக்க தெரியாத முட்டாள்கள் சொல்ற அறிவுரை. எப்பவுமே பெரிசா சாதிக்கணும்னு ஆசைப்படணும். அப்பத்தான் சாதிக்க முடியும்."

"அப்பா ராஜா, முதல்ல படிச்சு பெரிய ஆளாகு. அப்புறம் சம்பாதித்து காட்டு. நீ என்ன சொன்னாலும் நம்பறேன். இப்பப் போய் கைகால் அலம்பிட்டு வா. சாப்பிடலாம்."

"அப்பாவும் வந்திடட்டுமேக்கா."

"அப்பா வர சாயந்திரம் ஆகிடும். நிறைய சாமான் வாங்கணும். லேட்டாகும். நீ சாப்பிடு. எங்களுக்கு நிறைய வேலை இருக்கு" என அந்தப் பேச்சிற்கு முற்றுப்புள்ளி வைத்தாள் நிறைமதி. என்றாலும் அன்று முழுக்க, ஏன் அடுத்தடுத்து வந்த நாட்களிலும் நிரஞ்சனது முகம் அவள் நினைவில் நிழலாடிக் கொண்டேதான் இருந்தது.

□ □ □

"என்னாச்சு ரஞ்சன் உனக்கு? ஏன் இந்த திடீர் மாற்றம்?" எனக் கேட்ட நண்பனிடம், அந்த பூப்படம் போடப்பட்டிருந்த துணியைக் காட்டினான் நிரஞ்சன்.

"டேய் கார்த்தி! இதுவரைக்கும் கோடு போட்டதும் கட்டம் போட்டதுமாத்தானே வாங்கி மாட்டியிருக்கோம். பார் எ சேஞ்ச். இதை மாதிரி போட்டுப் பார்க்கலாமே. பார்க்க அழகா இருக்கில்ல."

"அது சரிடா. ஆனா நாம புதுத்துணி மாத்தி ரெண்டு மாசம் கூட ஆகலையே. வழக்கமா ஒன் இயர்லதான் மாத்துவோம்."

"நான் சொல்லிட்டு வந்திட்டேன்டா. இப்ப நாம ஆர்டர் கொடுக்கலேன்னா அவங்க நம்மைப் பத்தி என்ன நினைப்பாங்க?"

"யாரு?"

"அதான்... நான் சொல்லிட்டு வந்தேனே... அந்தப் பெண்கள்!"

"அப்படிப்போடு. யாருடா அது? உன் லைப்ல புதுசா வந்திருக்கிற பெண்கள்."

"டேய்! இவ்வளவு நேரம் அதைப்பத்தித்தானே பேசிட்டு இருந்தேன். போன ஸன்டே சிந்துகூட போயி மயிலாப்பூர்ல..."

"வெயிட்! நான் அதைக் கேட்கல்ல. யாரந்த பொண்ணு?"

"என்ன நீ! கேட்ட கேள்வியையே திரும்பத் திரும்ப கேட்கிற?"

"ரெண்டு பொண்ணுங்கன்னு சொன்னியே. அந்த ரெண்டுபேர்ல உன் உள்ளம் கவர்ந்த கள்ளி யாருன்னு கேட்டேன்?" கார்த்திக் நின்ற நிலையிலே நிற்க, அசடு வழிந்தான் நிரஞ்சன்.

"என்னடா? என்னவெல்லாமோ சொல்ற?"

"பின்ன? அந்தப் பொண்ணைப் பத்தி பேசும்போது உன் முகத்தில பிரகாசம் தெரியுதே. வழக்கமா வந்தோமா... ஒரு ரவுண்ட் சுத்தி பார்த்திட்டு போனோமான்னு கால்ல சக்கரத்தைக் கட்டிட்டு அலைவே. இப்போ... கிட்டத்தட்ட ஒன் அவரா நம்ம ரெண்டுபேர் வேலையையும் கெடுத்திட்டு பேசிட்டே இருக்க" என்றான் குற்றம் சாட்டும் குரலில்.

"என்ன? நான் வந்து ஒரு மணி நேரமாச்சா?"

"ஓஹோ... நேரம் போறது கூட சாருக்கு தெரியலையோ."

"ஏய், கிண்டல் பண்ணாதேடா. உன் ஐடியாவையும் கேட்டுட்டு ஆர்டர் எடுக்கிறதா சொன்னேன். உன் ஐடியா என்ன?"

"என்னடா பெரிய ஐடியா? இதுக்கெல்லாமா என்னைக் கேட்கணும். உனக்கு எப்படி விருப்பமோ அப்படியே செய்."

"தேங்க்ஸ்டா. கொஞ்சம் கிராண்டா செய்யச் சொல்வோமா?" ஆர்வமாய்க் கேட்டான் நிரஞ்சன்.

"தாராளமாச் சொல்லு. பார்க்க ஜுக்கா இருக்கணுமே."

"சரி, அப்பக் கிளம்பு."

"எங்கே?"

"ஜவுளிக்கடைக்கு. துணி எடுக்க வேண்டாமா?"

"டேய்... பொங்கலுக்கு இன்னும் ரெண்டுநாள்தான் இருக்கு. ஜவுளிக்கடை பக்கம் போய்ப்பாரு. கூட்டம் அலைமோதுது."

"ஸோ வாட்?"

"என்ன ஸோ வாட்? நாம என்ன புடவையா எடுக்கப் போறோம்? போய் எடுத்திட்டு வர்றதுக்கு. ஜன்னலுக்கு,

## வில்வித்தையில் மன்னன்!

அமெரிக்காவைச் சேர்ந்தவர் மாட் ஸ்டட்ஸ்மேன். இவருக்கு 30 வயதாகிறது. பிறக்கும் போதே 2 கைகளும் இன்றி பிறந்தவர். ஆனால், இதை இவர் ஒரு குறையாகவே எடுத்து கொண்டதில்லை. இரு கைகள் இல்லையென்றாலும் வில்வித்தையில் இவர் மகா கெட்டிக்காரர். மாற்றுத் திறனாளிகளுக்கான ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்க தயாராகி வருகிறார். வில்லில் அம்பைச் செலுத்தி இலக்கை குறி பார்த்து அடிப்பதில் இவரை யாரும்



மிஞ்சி விட முடியாது. அந்தளவுக்கு குறி பார்த்து அம்பை எய்வதில் படுசூடர்.

''எனக்கு கைகள் இல்லாதது ஒரு பெரும் குறையாகவே தெரியவில்லை. எனது கால்கள் தான் எனக்கு கைகள். எனது உடம்பில் எனது கால்கள் தான் பலமானவை. எனது கால்களின் உதவியால் தான் வில்வித்தையை செய்ய முடிகிறது'' என்று சொல்லும் ஸ்டட்ஸ்மேன் மரங்களையும் எளிதாக ஏறுவார். மீன்பிடிக்கவும் செல்வார். தனக்காக இந்த உலகம் தன்னை மாற்றிக் கொள்ளாது என்பதால் தனக்காக தன் வீட்டையும் இவர் மாற்றியமைத்து கொள்ளவில்லை.

இவருக்கு மனைவி, 3 குழந்தைகள் உள்ளனர். வீட்டில் சமைப்பது, குழந்தைகளுக்கு உடை மாற்றுவது, உணவு ஊட்டுவது போன்ற வேலைகளையும் இவரே செய்கிறார். ''உலகில் நான் சிறந்தவனாக இருக்க விரும்புகிறேன். கைகள் இல்லாததற்காக இந்த சிறப்பை நான் அடைய விரும்பவில்லை'' என்கிறார் நம்பிக்கை மிகுந்த ஸ்டட்ஸ்மேன்.

டேபிளுக்கு, வாசலுக்குன்னு தனித்தனியா துணி கட் பண்ணி அளந்து வாங்க வேண்டாமா?''

''ஆமா! எப்பவும் அப்படித்தானே வாங்குவோம்.''

''அது சாதாரண நாட்கள்ல. இப்ப பொங்கல் கூட்டத்தில நாம துணிகளை ரகம் பார்த்து நிறம் பார்த்து எடுக்கவே முடியாது. ஸோ... ஒரு வாரம் கழிச்சுப் போகலாம்.''

"நோ. நாம இப்பவே போறோம்."

"ரஞ்சன்! என்ன நீ? நான் இவ்வளவு தெளிவா சொல்லியும்..."

''நான் பார்க்கணும்டா... அந்த தேவதையை பார்க்கணும்'' கண்களில் ஆர்வம் மின்ன நண்பனைப் பார்த்தான். ''கார்த்தி! நீ அந்தப் பொண்ணை பார்த்ததில்லையே. அழகுன்னா அப்படி ஒரு அழகு! இன்னிக்கெல்லாம் பார்த்திட்டே இருக்கலாம்'' ரசனையோடு சொன்னவனைப் பார்த்து கேலியாய் சிரித்தான் கார்த்திக்.

"சரிதான். முத்திப் போச்சு."

''என்னடா! என்னைப் பார்த்தா இண்டலா இருக்கா. இரு இரு. உனக்கும் இதே நிலைமை ஒரு நாள் வராமலா போயிடும். அப்பப் பேசிக்கிறேன்.''

"சரி நண்பா. கோவிச்சுக்காதே. இப்ப என்ன? நீ அவளைப் பார்க்கணும். அவ்வளவுதானே."

"ஆமா! ஆமா!"

"உனக்குத்தான் அவ வீடு தெரியுமே. போய் பார்த்து விட்டு வா."

கார்த்திக்கின் கழுத்தை ஆத்திரமாய் பற்றினான் நிரஞ்சன். "பாவி! படுபாவி. என்னை என்ன தெருப்பொறுக்கி என்று நினைச்சியா?"

"என்னடா சொல்ற?"

''ஆமா! சும்மா அவளைத் தேடிப் போனா என்னைப் பற்றி அப்படித்தானே நினைப்பாள். நான்கு நாட்களாய் நீ ஊரிலிருந்து வரும்வரை கஷ்டப்பட்டு எதற்காக காத்திருந்தேன்?''

"எதற்காக?"

"நீ வந்தவுடன் உன்னிடம் பேசிவிட்டு துணிகளை எடுத்துக் கொண்டு நேரிடையாய் அவள் வீட்டில் போய் ஆர்டர் கொடுக்க வேண்டும் என்றுதான் காத்திருந்தேன். அப்பத்தானே என்னைப் பார்த்ததும் ஒரு மதிப்பு வரும்."

"ம். அப்புறம்?"

''சும்மா போய் அவள் வீட்டிலோ தெருவிலோ நின்றால் என்னை என்ன நினைப்பாள்? அடித்தே விரட்டினாலும்

விரட்டுவாள். அவ்வளவு கோபக்காரி" முகபாவனையோடு சொன்ன நண்பனை அணைத்து சமாதானம் செய்தான்.

"ஓ.கே... ஓ.கே. கொஞ்சம் வெயிட் பண்ணு. இது லன்ச் டயம். கூட்டம் வருது பார். முதலில் அவர்களை கவனிப்போம். ஈவனிங் போவோமா?"

"கார்த்தி! வரவர உன் மூளை வேலையே செய்ய மாட்டேங்குதுடா."

"ஏன்டா?"

"பின்னே! ஈவனிங் போய் நாம துணிகளை எல்லாம் எடுத்திட்டு வெளியே வரவே இருட்டிடும். அதுக்கப்புறம் கிளம்பி சிட்டி ட்ராபிக்ல மாட்டி அவ வீட்டுக்கு போக நைட்டாயிடும். வேலை விஷயமாகவே இருந்தாலும் பெண் பிள்ளைகள் இருக்கிற வீட்டுக்கு இரவு நேரம் போனால் நன்றாகவா இருக்கும்?"

"ஏய் ரஞ்சன்? என்னடா... இவ்வளவு யோசிக்கிற. யப்பா" வியந்து போனான் கார்த்திக்.

"யோசிக்காம? நாளைக்கு நம்ம வீட்ல வந்து வாழப்போற பொண்ணு. அதுக்கு ஒரு கஷ்டத்தை நாமளே உருவாக்கலாமா?"

"டேய்! முடிவே பண்ணிட்டியா? ஏன்டா ஒரு நாள்தானே பார்த்ததாச் சொன்னே. அதுக்குள்ள எப்படிடா?"

"தினமும் ஆயிரம் முறை பார்க்கிறேனே. அவ என் கண்லயேதான் இருக்கா."

"ம்ஹூம். இனிமே ஒண்ணும் சொல்றதுக்கில்லே. இது எதுல போய் முடியுமோ?"

"கல்யாணத்துலதான். அதிலென்ன சந்தேகம்?"

"யப்பா சாமி, இப்ப நான் என்ன பண்ணணும்? அதை மட்டும் சொல்லு."

"குட். நான் கீழே போய் கார்ல வெயிட் பண்றேன். நீ பொறுப்பை முகுந்தன்கிட்ட விட்டுட்டு வா. ஜவுளி எடுக்கப் போறோம்."

"சரிப்பா. போ... வர்றேன்" என்றவாறு முகுந்தனைத் தேடிச் சென்று அவசரமாக வெளியே போவதாகவும், நிர்வாகத்தை கவனித்துக் கொள்ளுமாறு கூறிவிட்டு மாடியை விட்டு இறங்கி வெளியே வர, பார்க்கிங் பகுதியை விட்டு வெளியேறி காரோடு தயாராய் நின்றான் நிரஞ்சன்.

காரில் ஏறியதும் மெயின் ரோட்டில் நிதானமாய் பயணித்தது. உச்சி வெயில் கொளுத்திக் கொண்டிருக்க, சாலையோரம் முழுக்க கரும்புகள், மஞ்சள் கிழங்கு, பனங்கிழங்கு என பொங்கல் வியாபாரம் களைகட்டியிருந்தது.

சாலையோரம் போடப்பட்டிருந்த சிறுசிறு கடையில் கூட நெரிசல் இருந்தது. துணிக்கடைகளில் கேட்கவே வேண்டாம். வெளியே பார்த்துக் கொண்டே வந்த கார்த்திக் நண்பனிடம் திரும்பினான்.

"கடைகள்ல கூட்டத்தைப் பார்த்தியா? நாம இப்ப உள்ளே போனா நடுசாமத்தில தான் வெளியே வரமுடியும்."

"நீ ஏன்டா பெரிய கடையையே பார்க்கிற. இதோ இந்த மாதிரி சின்ன ஷோரூமைப் பார். இதுல ஒன்றைத்தான் நாம தேர்ந்தெடுக்கப் போறோம்."

"விளையாடுறியா நீ? இங்கெல்லாம் நாம தேடுற மாதிரி துணி இருக்குமா?"

"ஏன்டா? மாடிமேல மாடியா இருந்தாத்தான் நல்ல துணி இருக்குமா? இந்த மாதிரி விளம்பரம் இல்லாத கடையிலும் நல்ல துணிங்க கிடைக்கும். இங்கேதான் நமக்கு உரிய மரியாதையும் கிடைக்கும்... வா" என்றவாறே கொஞ்சம் ஒதுங்கி இருந்த கடையின் அருகே சென்று காரை நிறுத்தினான் நிரஞ்சன்.

"என்னடா நிறுத்திட்ட?"

"இந்தக் கடைக்குத்தான் போறோம், வா" என்றவாறே கீழே இறங்கிக் காரை பூட்டினான்.

"வர வர நீ செய்யறது எதுவுமே சரியில்ல" என்று புலம்பியவாறே தானும் இறங்கி நண்பனைப் பின் தொடர்ந்து அந்த துணிக்கடையில் நுழைந்தான் கார்த்திக்.

சொற்ப நபர்களே இருந்த அந்தக் கடைக்குள் ஏதோ களேபரம் நடந்து கொண்டிருந்தது. ஏதோ ஒரு பெண் சத்தமாக பேசி சண்டை போட்டுக் கொண்டிருக்க, ஒரு பெரிய மனிதர் கடையின் சொந்தக்காரராக இருக்கலாம். அவர் அவளிடம் சமாதானம் பேசிக் கொண்டிருக்க, அந்தப் பெண்ணின் குரலைக் கேட்டுத் திடுக்கிட்டான் நிரஞ்சன்.

'இது... இது அந்தக் குயிலின் குரல் அல்லவா?'

## 4

எந்நேரமும் அவள் நினைவிலேயே உழலுவதால் யாரைப் பார்த்தாலும் எந்தக் குரலைக் கேட்டாலும் அவளாகவே நினைக்கத் தோன்றுகிறதோ? தன்னையே திட்டிக் கொண்டு கூடியிருந்த கூட்டத்தில் நுழைந்தான் நிரஞ்சன்.

''சொன்னாக் கேளும்மா! இது பொங்கல் சீசன். நாங்க வியாபாரத்தை கவனிக்க வேண்டாமா? பிரச்சினை பண்ணாதேம்மா'' கடைக்காரர் கூற நிறைமதி சீறினாள்.

''ஏன் சார். நான் என்ன வேலை வெட்டியில்லாமலா உங்ககிட்ட வந்து பிரச்சினை பண்றேன். என் பணம் வேணும் எனக்கு.''

''ஏம்மா! கடையிலதான் தொலைந்திருக்குமா? வர்ற வழியில எங்காவது மிஸ் பண்ணியிருப்பீங்க.''

''இல்ல சார். நான் கடைக்குள்ள வந்த பிறகு கூட பணம் இருந்தது. ட்ரெஸ் எல்லாம் எடுத்திட்டு பில்லுக்கு பணம் கொடுக்கும் போதுதான் பணத்தைக் காணோம். யாரையும் வெளியே விடாதீங்க. செக் பண்ணணும்.''

'இது அவள்தான். சந்தேகமே இல்லை. ஐயோ! பணத்தை தொலைத்து விட்டாளா?' சற்றே பதைபதைப்பாய் அவளை நெருங்கினான். அதற்குள்,

''ஏம்மா! செக் பண்ணணும், செக் பண்ணணும்கிறியே. எப்படி பண்ணுவே. நாங்கள்லாம் பணம் இல்லாமலா நிக்கறோம்'' என்றார் ஒருவர்.

''அதானே! ஏம்மா! நீ எவ்வளவு கொண்டு வந்தே. எப்படி அடையாளம் கண்டுபிடிப்பே?'' எனக் கேட்டாள் ஒரு பெண்.

''நான் ரெண்டாயிரம் ரூபாய் எடுத்துட்டு வந்தேன். பன்னிரெண்டு நூறு ரூபாய் நோட்டு. நாலு ஐம்பது ரூபாய் நோட்டு. மிச்சமெல்லாம் பத்து ரூபாய்'' அவள் சொல்லி முடிக்கும் முன் அனைவரும் கேலியாய் சிரித்தனர்.

''என்னம்மா விளையாடுறியா? இந்த நோட்டெல்லாம் உன்கிட்ட மட்டும்தான் இருக்குமா? நாங்கள்லாம் ஆயிரம் ரூபாய் மட்டும்தான் வெச்சிருக்கோமா?''

அதற்குள் செல்வகணபதி குரல் கொடுத்தார். ''சிரிக்காதீங்கய்யா. இது வெறும் பணமில்லையா? நானும் எம்பிள்ளைகளும் முதுகொடிய செய்த வேலைக்கான கூலிய்யா.''

''பெரியவரே! நாங்க கேலி பண்ணலல. ஆனா உங்க பொண்ணு பேசறதும் அப்படித்தானே இருக்கு. மதியநேரம் கடையில கூட்டமிருக்காதுன்னு வீட்ல ஆயிரம் வேலையை விட்டுட்டு





வந்திருக்கோம். உங்க பொண்ணு எங்க எல்லார் நேரத்தையும் வீணடிக்குது."

"உங்க பணத்தை நீங்கதானே பத்திரமா வெச்சுக்கணும். அதை விட்டுட்டு எங்களையெல்லாம் சந்தேகப்பட்டா எப்படி? நாங்கல்லாம் கவுரவமான குடும்பத்தைச் சேர்ந்தவங்க."

"காசை அடிச்சவன் இங்கேயா நிற்பான். எப்பவோ போயிருக்க மாட்டானா?"

"இந்தப் பொண்ணு சும்மா வம்பு பண்ணிட்டு இருக்குது. ஏம்மா! நீ காசு எடுத்திட்டு வந்தியா இல்லையா?"

"இப்பல்லாம் யாரையும் நம்ப முடியறதில்ல. பார்த்தா படிச்ச

பொண்ணாட்டம் இருக்கு. இதுக்கு ஏன் இந்த பொழப்பு."

"வாயை மூடுங்கம்மா. என்னை என்ன உங்களைப் போல நினைச்சீங்களா? நான் ஒண்ணும் அடுத்தவங்களை ஏமாத்தி பிழைக்கிற கேடுகெட்டவ இல்ல. நான் பணம் கொண்டு வந்தது சத்தியம். பொங்கலுக்காக ரெண்டுமாசமா கஷ்டப்பட்டு சேர்த்த பணம் அது. வாய் இருக்கிறதால என்ன வேணும்னாலும் பேசிடாதீங்க." சொல்லும் போதே கண்ணீர் சுரந்தது.

"மதிம்மா! இதுக்கு மேலயும் இங்கே நிக்கணுமா? வாம்மா போகலாம்."

"அப்பா! துணியெல்லாம் எடுத்தாச்சே. வீட்ல பிள்ளைங்க ஆசையோட காத்திருப்பாங்களே."

"பரவாயில்லம்மா. துணியை திருப்பிக் கொடுத்திடு. பசங்ககிட்ட சொல்லிக்கலாம்."

தங்கைக்காக தம்பிக்காக வாங்கிய துணிகளை ஏக்கமாய் பார்த்தாள் நிறைமதி. எத்தனை ஆசையாய் தேடித்தேடி வாங்கியது.

"அக்கா! எனக்கு பீட்ரூட் கலர்ல ஜமிக்கி வெச்ச புடவை எடுத்திட்டு வா. கிடைக்கலன்னா ராமர் ப்ளூல எடு" என்று பத்துமுறை சொல்லி அனுப்பியிருந்தாள் வளர்மதி.

அவள் கேட்ட பீட்ரூட் கலர் புடவை இந்தக் கடையில்தான் கிடைத்தது. தம்பிக்கான ஜீன்ஸ் பேண்ட்டுக்காக கடையையே ஒரு மணிநேரமாய் அலசிக் கண்டுபிடித்து வாங்கியிருந்தாள். அப்போதுதான் பணம் போயிருக்க வேண்டும்.

'எப்படி கவனமாக இருக்காமல் விட்டேன். இப்போது வீட்டில் தங்கள் வருகைக்காக காத்திருப்பார்களே. வெறும் கையோடு போனால் ஏமாந்துவிட மாட்டார்களா? நாளை மறுநாள் தெருவே புத்தாடையோடு பளபளக்கும்போது நம் பிள்ளைகள் மட்டும்...'

"என்னம்மா யோசனை? வேண்டுமானால் உங்களுக்காக ஒன்று செய்கிறேன். இந்த துணியை தனியே எடுத்து வைத்திருக்கிறேன். வீட்டுக்கு போய் பணம் எடுத்திட்டு வந்து வாங்கிக்கங்க. என்னால இதுதான் செய்ய முடியும்" என்றார் கடைக்காரர்.

'வீட்டிலா? அங்கென்ன அச்சடித்தா வைத்திருக்கோம்' விரக்தியாய் புன்னகைத்துவிட்டு, "வேண்டாம் சார். சேல்ஸ் பண்ணிடுங்க" என துணிகள் அடங்கிய பார்சலை அவரிடமே கொடுத்தாள்.

"எக்ஸ்கியூஸ்மீ மேடம். ரொம்ப பீல் பண்றீங்களே. நான் வேண்டுமானால் பணம் தரவா?" எனக் கேட்டான் ஒருவன்.

"வேண்டாம் சார். பிச்சை எடுத்து பழக்கமில்லை. வாங்கப்பா போகலாம்" எனத் திரும்பினாள்.

சட்டென நண்பனின் பின்னே மறைந்துக் கொண்டான் நிரஞ்சன். கூட்டம் விலகி தங்களது வேலையைக் கவனிக்க, நிரஞ்சன் அவசரமாய் யோசித்தான். 'என்ன செய்யலாம்? சும்மா கொடுத்தால் வாங்க மாட்டாளே!'

சட்டென ஒன்று தோன்ற, அருகே நின்ற கடைக்காரரை அழைத்தான். இரண்டு ஆயிரம் ரூபாய் நோட்டைக் கொடுத்து சில்லறை கேட்டான். பன்னிரெண்டு நூறுரூபாய், நாலு ஐம்பது ரூபாய், மிச்சத்திற்கு பத்து ரூபாய் நோட்டுக்கள்.

கடைக்காரர் அவனை வியப்பாய் பார்த்துவிட்டு நோட்டுகளை எண்ணி நீட்ட, கார்த்திக்கிடம் திரும்பினான் நிரஞ்சன்.

"நண்பா! கொஞ்சநேரம் நான் எது செய்தாலும் நீ மறுக்காமல் அமைதியாய் நிற்க வேண்டும். எனக்காக ப்ளீஸ்" என்றான் கெஞ்சுதலாய்.

"ஏன்டா?"

"பிறகு சொல்கிறேன். இப்போது நேரமில்லை" என்றவன் வாசலை நெருங்கிவிட்டிருந்த நிறைமதியை அழைக்கச் சொல்லி கடைச் சிப்பந்தியை அனுப்பிவிட்டு, கார்த்திக்கின் தலையைக் கலைத்து விட்டான்.

"டேய்! என்னடா பண்றே நீ."

"ஷ்... பேசாமல் இரு" என்றவாறு அழகாய் இன் செய்யப்பட்டிருந்த சட்டையை வெளியே இழுத்துவிட்டான். இருகைகளாலும் அதைக் கலைத்து கசக்கி விட்டான். கார்த்திக் கோபமானான்.

"ரஞ்சன்! உனக்கென்ன ஆச்சு? ஏன் இப்படி பண்ணுகிறாய்."

"ப்ளீஸ் மச்சான்! எனக்காக. உன் உயிர் நண்பனுக்காக... ஒரு பத்து நிமிஷம்தான்" என்றவாறு கார்த்திக்கின் கையிலிருந்த கைச்செயின், வாட்ச், மோதிரம் என அனைத்தையும் கழற்றி தன் பைக்குள் பத்திரப்படுத்தியபோது நிறைமதி நின்று திரும்பிக் கொண்டிருந்தாள்.

"மேடம்! வாங்க. உங்க பணம் கிடைச்சிருச்சி. இதோ இவன்தான் எடுத்திருக்கான்" சற்று உரக்கக் குரல் கொடுத்தான்.

""அடப்பாவி! ஒரே நிமிஷத்தில என்னை திருடனாக்கிட்டியே" என்ற கார்த்திக்கின் வாயை மூடினான்.

வேகமாக அவனை நெருங்கினாள் நிறைமதி. நிரஞ்சனை அடையாளம் கண்டதும், ஒரு கணம் தடுமாறி சட்டென சுதாரித்து கார்த்திக்கை கோபமாய் ஏறிட்டாள்.

"ஏன்டா! இதெல்லாம் ஒரு பொழப்பா? ஆறடி உயரத்திற்கு வளர்ந்திருக்கியே. கைகால் நல்லாத்தானே இருக்கு. உன்னால உழைச்சு சாப்பிட முடியாது? இப்படித் திருடித் தின்றது எப்படிடா உன் உடம்புல ஒட்டும்.'' சரமாரியாய் அவள் திட்ட, கார்த்திக் கடுப்பாய் நண்பனை பார்த்தான்.

பொறுத்துக் கொள்ளும்படி பார்வையால் கெஞ்சினான் நிரஞ்சன்.

''சார்! இவனை போலீஸ்ல ஒப்படைக்கணும். போலீசுக்கு போன் பண்ணுங்க" நிறைமதி சொல்ல, பதறினான் நிரஞ்சன்.

"ஐயோ! வேண்டாம் மேடம். பாவம் குடும்பக் கஷ்டம். திருடிட்டான். நானே நிறைய அடிச்சிட்டேன். இதுல போலீஸ் அடியெல்லாம் எப்படி தாங்குவான்?"

"இந்த மாதிரி திருட்டுப் பயலுக்கெல்லாம் நாம பாவம் பார்க்கக் கூடாது சார்"

"எம்ப்பா! எம்பொண்ணை ஆளாளுக்கு வாய்க்கு வந்தபடி பேசினாங்களே. அப்பவாவது நீ பணத்தை தந்திருக்கலாமே. நீயெல்லாம் அக்கா தங்கையோட பிறக்கலையா?'' எனக் குமுறினார் செல்வகணபதி.

"திருடியே உடம்பை வளர்த்திருக்கான். இவன்கிட்ட போய் நியாயம் பேசுறீங்களேப்பா. சார்! இவனை போலீஸ்ல பிடிச்சுக் கொடுத்திடுங்க சார். அவங்க போடுற போடுலதான் இவன் திருந்துவான். மூஞ்சியப் பாரு. அவரை ஏன்டா முறைக்கிற" என்றவாறே இடித்தாள் நிறைமதி.

"விடுங்க மேடம். பாவம்! எல்லாரும் பார்க்கிறாங்களே. விட்டுடுவோம். இந்தாங்க உங்க பணம். சரியா இருக்கான்னு பாருங்க" என பணத்தை நீட்டினான்.

நன்றியோடு பெற்றுக் கொண்டு ஆவலாய் அதை எண்ணிப் பார்க்கத் தொடங்க, கார்த்திக்கின் கண்களில் தீப்பொறி பறந்தது.

'ப்ளீஸ்! ஒரு பைவ் மினிட்ஸ். எனக்காக' சைகையால் கெஞ்சினான் நிரஞ்சன்.

அவள் எண்ணிப் பார்த்துவிட்டு, "சரியா இருக்கு சார். ரொம்பத் தேங்க்ஸ் சார்" என்றாள் நன்றியோடு.

"பரவாயில்லை. இது என் கடமை. நீங்க பர்ச்சேஸ் பண்ணிட்டு கிளம்புங்க. நான் இவனை ரெண்டு தட்டுதட்டி வெளியே அனுப்பிட்டு வர்றேன்."

''தம்பி! உங்ககிட்ட எப்படி மாட்டினான். எப்படி கண்டுபிடிச்சீங்க?'' என செல்வகணபதி கேட்டார். நிரஞ்சன் திணறிப் போய்விட,

''அட! நானும் கேட்கணும்னு நினைச்சேன். எப்படி சார் உங்ககிட்ட மாட்டினான்?" என்றாள் நிறைமதி.

'இப்போது என்ன சொல்லப் போகிறாய்?' என்பதுபோல் கார்த்திக் நிரஞ்சனைப் பார்க்க, நிரஞ்சன் சட்டென சொன்னான்.

''எல்லாரும் உங்களைச் சுத்தி கூடியிருக்கும் போது இவன் மட்டும் வெளியே போக நைஸா நழுவினான். எனக்கு டவுட் வந்திடுச்சு. பிடிச்சு ரெண்டு தட்டு தட்டினேன். உடனே ஒத்துக்கிட்டான். பாவம். பசியில திருடியிருக்கான். விட்டுடுவோமே. பிழைத்துப் போகட்டும்."

கார்த்திக்கின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க, மீண்டும் அவன் முகத்தில் இடித்தாள் நிறைமதி.

"அவரை ஏன்டா முறைக்கிற? உன்னை போலீஸ்ல மாட்டி வைக்க வேண்டாம்னு நினைக்கிறாரே. அதுக்கு அவரை நீ கும்பிடணும்" என்றாள்.

அசடு வழிய சிரித்தான் நிரஞ்சன். "விடுங்க மேடம்! போடா. போய் ஒழுங்கா பொழைக்கிற வழியைப் பார்'' என மிரட்டியவாறே வாசல் வரை இழுத்து வந்தவன்,

"மச்சான்! மன்னிச்சிடுடா. எல்லாம் வந்து சொல்றேன். நீ கார்ல வெயிட் பண்ணு. நான் இப்ப வந்திடுறேன்'' என்றவாறு மீண்டும் கடைக்குள் நுழைந்தான்.

''தம்பி! உங்களுக்கு எவ்வளவு நல்ல மனசு. இருந்தாலும் அவன்கிட்ட கொஞ்சம் ஜாக்கிரதையா இருக்கணும் தம்பி.'' செல்வகணபதி வெகு அக்கறையாய்ச் சொல்ல, இயல்பாய் சிரித்து வைத்தான்.

"அப்பா! இது... சார் உங்க பேர் என்ன சொன்னீங்க?" நிறைமதி கேட்க, ஆர்வமாய் சொன்னான்.

"நிரஞ்சன்."

"ம்... நிரஞ்சன். அப்பா! அன்னிக்கு சொன்னோமே. நம்மகிட்ட உள்ள பொருளெல்லாம் மொத்தமா

வாங்கினாங்கன்னு."

"அடடே! ஆமாம்."

"அது இவங்க தங்கைதான்."

"அப்படியா! வளர்கூட ஏதோ ஆர்டர்னு சொன்னாளே..."

"ஆமா சார். அது விஷயமா துணி வாங்கத்தான் வந்தோம்"

"வந்தீங்களா? யாரெல்லாம்?" நிறைமதி கேட்க சட்டென உஷாரானான்.

"நானும் என் நண்பனும் வந்தோம். அவன் வேற கடைக்கு போயிருக்கான். நான் இந்தக் கடைக்கு வந்தேன். வந்ததும் நல்லதாப் போச்சு."

"ஆமா சார். நீங்க வரலன்னா என் பணம் கிடைச்சிருக்காது. பாவம்! வளரும் தம்பியும் ரொம்ப ஏமாந்திருப்பாங்க. ரொம்ப தேங்க்ஸ் சார்."

"பரவாயில்ல. நீங்க பர்ச்சேஸ் பண்ணிட்டு கிளம்புங்க. நான் கடைக்கு தேவையான துணி எடுத்திட்டு வீட்டுக்கு கொண்டு வந்து தர்றேன்."

"சரி சார். நீங்க வந்த வேலையை கவனிங்க" என்றவாறு கேஷ் கவுண்டரை நோக்கி நகர்ந்தாள்.

"ரொம்ப சந்தோஷம் தம்பி. வீட்டுக்கு அவசியம் வாங்க."

"வர்றேன் சார். அன்னிக்கு உங்களைத்தான் பார்க்க முடியல்ல."

"ஆமா தம்பி. பெயிண்ட், கலர் நூல், முத்து, புடவையில வைக்கிற கல் எல்லாம் வாங்கிறதுக்காக பாரீஸ் வரை போயிருந்தேன்."

"மண்பாண்டமெல்லாம் நீங்களே செய்யறீங்களா சார்?"

"ஆமா தம்பி! மொதல்ல மண் சட்டி, பானை இதெல்லாம்தான் செய்தோம். ஆனா அதுக்கெல்லாம் இப்ப ஏது மவுசு. ரொம்ப கஷ்டமாப் போச்சு. அப்புறம் மதி கொடுத்த ஐடியாதான் இது. காலத்திற்கு ஏத்தமாதிரி மாத்திப் பார்ப்போமேன்னு கொஞ்சம் வித்தியாசமா செய்தோம்.

அதுல அவ வரையுற படமும் பெயிண்டும் இன்னும் அழகாக்கிவிட, இப்போ நல்லா போயிட்டு இருக்குப்பா. நிறைவா வாழுறோம்" என்றார் செல்வகணபதி.

"இதுதான் சார் வேணும். ஒவ்வொரு மனுஷனும் தங்களுக்கு கிடைச்ச வாழ்க்கையை நிறைவா ஏத்துகிட்டா போதும். அதைவிட சந்தோஷம் வேறென்ன இருக்க முடியும்?"

"தம்பி! நல்லா பேசுறீங்க. தம்பிக்கு வீடு எங்கே?"

"நான் குரோம்பேட்டையில இருக்கேன். கம்பெனி கிண்டியில இருக்கு. அதோட சைதாப்பேட்டையில ஒரு ஓட்டலும் இருக்கு. நானும் என் நண்பனும் பங்குதாரரா இருக்கோம்."

"நல்லது தம்பி. இந்த சின்ன வயசுலயே ஊரைச் சுத்தாம நல்லா உழைக்கிறீங்க. அதுவே பெரிய விஷயம்."

"சார்! சின்ன வயசுன்னதும்தான் ஞாபகம் வருது. சந்தர் எப்படி படிக்கிறான்?"

"எம்புள்ளையைத் தெரியுமா தம்பி."

"ம்... அன்னிக்குப் பார்த்தேன். டாக்டராகப் போறானாமே."

"உங்ககிட்டயும் சொல்லிட்டானா? இப்படித்தான் தம்பி பார்க்கிற எல்லார்கிட்டேயும் சொல்லிட்டு திரியுறான்."

"இதுல ஒண்ணும் தப்பில்லையே."

"இல்ல தம்பி. ஆசை இருந்தா போதுமா? பணம் வேண்டாமா? அந்த படிப்புக்கு லட்சக்கணக்கில செலவாகுமாமே."

"அதெல்லாம நல்லா படிக்காதவங்களுக்கு. சந்தரை நல்லா படிக்கச் சொல்லுங்க. ஸ்டேட் பர்ஸ்ட் வந்தான்னா மெடிக்கல் காலேஜ் சீட் வீடு தேடி வரும். வேற எதுவும் உதவின்னா செய்ய நான் இருக்கேன். எனக்கு நிறைய ஆட்களைத் தெரியும்."

"தம்பி! நிசமாங்களா?"

"ஆமா சார்! சந்தரை நல்லா படிக்கச் சொல்லுங்க. மத்ததை நான் பார்த்துக்கிறேன்" என்றான் உறுதியாய்.

"இது ரொம்ப பெரிய உதவி தம்பி. அவன் வருஷக்கணக்கா கனவு கண்டுட்டு இருக்கான்."

"நிச்சயமா அவன் கனவு பலிக்கும்."

அதற்குள் ஜவுளி பார்சலோடு அவர்களை நெருங்கினாள் நிறைமதி.

"அப்பா! இன்னுமா பேசிட்டு நிக்கறீங்க! அவர் வேலையெல்லாம்..."

"வேலை என்னங்க வேலை. அதை எப்ப வேணா பார்த்துக்கலாம். சார்கூட பேசினா நேரம் போறதே தெரியல்ல."

"ஆமாம்மா! எனக்குக் கூட தம்பிய ரொம்பப் பிடிச்சிருக்கு! எவ்வளவு அருமையா பேசறாரு தெரியுமா?"

"சரிதான். எங்க அப்பா இனிமே உங்களை விடவே மாட்டாங்க" என்றாள் நிறைமதி கேலியாய்.

"அது என் பாக்கியம்" என தலைவணங்கி அவன் சொல்ல, கிண்கிணியாய்ச் சிரித்தாள் நிறைமதி.

## 5

"ஸாரிடா நண்பா! என் மனசுல இருக்கிற தேவதைக்காகத்தான் இதெல்லாம் செய்தேன். அந்தநேரத்தில எனக்கு வேற எதுவும் தோணல்ல. மன்னிச்சிடுடா." நிரஞ்சனின் குரலில் உண்மையான வருத்தம் தொனித்தது.

"சரி விடு. எப்படியோ என்னை திருடனாக்கிட்ட. நல்லா இருடா."

"கார்த்தி! நாளைக்கே உனக்கு ஒண்ணுன்னா நான் ஹெல்ப் பண்ண மாட்டேனா?"

"வேண்டாம்ப்பா. சும்மா ஓட்டல்ல இருந்தவனைக் கூட்டிட்டு வந்து பொம்பளை கையால அடிவாங்கித் தந்திருக்கியே. இதை மாதிரிதானே ஹெல்ப் பண்ணுவ?"

"அவ எங்கேடா அடிச்சா? சும்மா லேசா இடிச்சா."

"இடிச்சாளா? இடியா அது. கூட ரெண்டுவாட்டி அதே மாதிரி இடிச்சிருந்தா என்னோட பல்லு நாலஞ்சு கையோட வந்திருக்கும்."

"உண்மையாவே வலிச்சதா கார்த்தி?"

"ம்... கல்யாணத்திற்கு பிறகு நீ வாங்கத்தானே போற. அப்ப உனக்கே தெரியும். கடைசில உன் கல்யாணத்துக்கு கூட என்னை வரவிடாம பண்ணிட்டியேடா."

"ஏன்டா? நீ இல்லாம என் கல்யாணமா? நெவர்."

"ம். கேட்பாளே உன் இதய தேவதை. இந்தத் திருட்டுப்பய ஏன் உன்கூட இருக்கான்னு. மாட்டிக்க மாட்டே."

"சேச்சே! அப்படி எதுவும் நடந்துடக் கூடாதுன்னுதானே உன்னை தலையெல்லாம் கலைச்சிவிட்டு கெட்-அப்பை மாத்தினேன். அடையாளமே தெரியாம மாறிட்டேடா."

"இனிமே தெருவில ரோட்டுல போக முடியுமா என்னால..."

"கார்த்தி! அவனவனுக்கு ஆயிரம் வேலை. எவனுக்கும் நம்மை அடையாளம் தேடி கண்டுபிடிக்கிறது மட்டும் வேலையில்லை. விடுடா."

"நான் விடுறது இருக்கட்டும். நீ இவ்வளவு வேலை பண்ணிட்டு இருக்கியே. இது வீட்டுக்குத் தெரியுமா?"

"என்னடா அவசரம்? முதல்ல மதியோட மனசில இடம் பிடிக்கணும். அவளுக்கும் என்னைப் பிடிக்கணும். அவங்க வீட்ல உள்ள எல்லோரும் என்னை ஏத்துக்கணும். அதுக்கப்புறம்தான் வீட்ல சொல்லணும். நீ எதுவும் மூச்சு விட்டுடாதே."

"நான் உன் வீட்டுப்பக்கமே வரமாட்டேன்ப்பா."

"ஏன்டா?"

"வந்தா உனக்குத்தான் ஆபத்து. அந்த வாலு எப்படியும் என் வாயைக் கிளறி உண்மையை சொல்ல வெச்சிடுவா."

"ஆமாமா. அவ செய்வாள்தான். எதுக்கும் நீ அவ கண்ல பட வேண்டாம்."

"சரிடா. கல்யாண வேலையெல்லாம் எப்படி போயிட்டிருக்கு?"

"அம்மாவும் அப்பாவும் ரொம்ப பிஸி. நாள் குறிக்கிறோம், நேரம் பார்க்கிறோம்னு வீட்ல பார்க்கவே முடியறதில்ல."

"அதான் நீ இப்படி சுத்த ஆரம்பிச்சிட்ட. சரி. எப்படியோ நீ நல்லா வாழ்ந்தா போதும். சரிடா. என்னை கடையில போய் விட்டுடு. நிறைய வேலை இருக்கு."

"என்ன வேலை இருக்கா? அப்போ நீ என்கூட வரலையா?"

"எங்கே?"

"மதி வீட்டுக்கு."

"என்ன? உங்க ஆள் வீட்டுக்கா?"

"ஆமா! இந்தத் துணியெல்லாம் கொடுக்க வேண்டாமா?"

வேகமாய் காரை விட்டு இறங்கினான் கார்த்திக். "யப்பா சாமி. திரும்பத்திரும்ப அடிவாங்க என்னால முடியாது. என்னை விட்டுடு" என்றவாறு கைகளைத் தூக்கி கும்பிடு போட்டான். தானும் காரை விட்டு இறங்கினான் நிரஞ்சன்.

"ஏன்டா இப்படியெல்லாம் பேசுற. நீ என் நண்பன்."

"போதும்டா. மேல பேசாதே. எனக்கு தலைக்கு மேல வேலை இருக்கு. நீ எங்கே வேணாப்போ. நான் ஆட்டோ பிடிச்சு போயிடுறேன்."

"டேய் கார்த்தி, நில்லுடா" குரல் கொடுத்துக் கொண்டிருக்கும் போதே அவன் போய்விட்டான்.

'ச்சே! காலை வாரிட்டானே. இப்போ எப்படி தனியா போவது?' யோசனையாய் நின்றவன் மீது வந்து மோதி நின்றாள் அந்த நவநாகரீகப் பெண் தாரா.

திடுக்கிட்டுத் திரும்பிய நிரஞ்சன்

கோபமாய் சிடுசிடுத்தான். "ஹலோ! கண்ணு தெரியல்ல? கடைவீதியில இப்படியா வந்து மோதுவீங்க?"

"ஹய்யோ! நீங்க சிரிக்கும் போதுதான் அழகா இருப்பீங்கன்னு நினைச்சேன். பட் கோபப்படும்போது கூட சூப்பரா இருக்கீங்க. ஐ லைக் யூ நிரு" கொஞ்சியவாறே அவள் பேச புருவம் உயர்த்தினான்.

"நிருவா? ஹலோ யார் நீங்க?"

"என்ன நிரு நீங்க. என்னைத் தெரியலையா?"

"ம்ப்ச்... தெரியலை" என்றவாறு காரில் ஏறுவதற்கு கதவைத் திறக்க, அதை அறைந்து மூடினாள் தாரா.

"எங்கே என் முகத்தைப் பாருங்க."

தன் தோளைப் பற்றி திருப்பியவளின் கைகளைக் கோபமாய் தட்டிவிட்டான்.

"லுக்! அதான் நீ யாருன்னே தெரியலன்னு சொல்கிறேனே. பிறகேன் தொந்தரவு செய்கிறாய்? டோண்ட் டச் மீ."

"வொய்? நான் தொடாமல் வேறு யார் தொடுவார்கள்?"

எரிச்சலாய் அவளைப் பார்த்தான்.

அடர்த்தியாய் பூசப்பட்டிருந்த உதட்டுச்சாயம் முகம் சுளிக்க வைத்தது. இவளை எங்குமே பார்த்த ஞாபகம் இல்லையே. இவளும் இவள் அலங்காரமும். முகம் சுடுப்பேற, மீண்டும் காரை திறந்தான். மீண்டும் தடுத்தாள்.

"நிரு. நிஜமாவே என்னை உங்களுக்கு நினைவில்லையா?"

"நான் உன்னைப் பார்த்தது கூட இல்லை. நீ தான் என்னை தவறாக நினைத்துக் கொண்டு..."

"இல்லை. நீங்கள் வேண்டுமானால் என்னைப் பார்க்காமல் இருந்திருக்கலாம். ஆனா எங்கேஜ்மெண்ட் முழுக்க நான் உங்களைத் தவிர வேறு எதையும் பார்க்கவில்லை. தெரியுமா?" குழந்தைபோல் அவள் கேட்க, முகம் மாறினான் நிரஞ்சன்.

"எங்கேஜ்மெண்டா? யாரோட எங்கேஜ்மெண்ட்?"

"உங்க தங்கைக்கும் என் அண்ணனுக்கும் நடந்த எங்கேஜ்மெண்ட்."

"யாரு? வசந்த்தோட தங்கையா நீங்க?"

"ஹப்பா! ஒரு வழியா கண்டுபிடிச்சிட்டீங்க" அவள் துள்ளினாள்.

"ஸாரி... வெரி ஸாரி. எனக்கு நினைவில்லை. ஸாரி."

"பரவாயில்ல. எனக்கு ஹேப்பிதான். பெண்களை ஏறெடுத்துப் பார்க்காதவர் நீங்கன்னு புரிஞ்சுப் போச்சு."

"ஓ! சரி. எனக்கு வேலை இருக்கு."

"நோ நோ. எந்த வேலையா இருந்தாலும் ஒத்தி வையுங்க."

"ஏன்?"

"அங்கே பாருங்க" என ஒற்றை விரலை நீட்டினாள் தாரா. அங்கே வசந்த் தன் பெற்றோர்களுடன் வந்து கொண்டிருந்தான்.

"ட்ரெஸ் பர்ச்சேஸ் பண்ண வந்தோம். நான்தான் உங்களை முதல்ல பார்த்தேன். நீங்க போயிடக் கூடாதேன்னு ஓடி வந்தேன். அவங்க பில் பே பண்ணிட்டு வர்றாங்க" என்றவாறு உரிமையாய் அவள் அவன் தோளில் கைபோட, நாசூக்காய் அதை தட்டிவிட்டு நான்கடி முன்னே நகர்ந்து வசந்த்தின் கைகளைப் பற்றி குலுக்கினான் நிரஞ்சன்.

"ஹாய் வசந்த். எப்படி இருக்கீங்க? டூர் முடிஞ்சு எப்போ வந்தீங்க?"

"இன்னிக்கு மார்னிங்தான் வந்தேன். எப்படி இருக்கீங்க. வீட்ல எல்லாரும் நல்லா இருக்காங்களா?" என ஆங்கிலத்திலேயே உரையாடினான் வசந்த்.

"ம். எல்லாருமே பைன். முக்கியமா சிந்து வெரி பைன்" என்றான் நிரஞ்சன். பெரியவர்களிடம் மரியாதை நிமித்தம் பேசிவிட்டு நகர, ரத்தினபாண்டி அவன் கைகளைப் பற்றிக் கொண்டார்.

"என்ன மாப்பிள்ளை நழுவுறீங்க? உங்களைப் பார்க்கவே முடியறதில்லை. பார்த்தபிறகு விட முடியுமா?"

"இல்ல அங்கிள்! நான் கொஞ்சம் பிஸியா இருக்கன்."

"எப்பத்தான் நாம பிஸியா இல்ல. விடுங்க மாப்பிள்ளே. ஓட்டல்ல பேமிலி ரூம் புக் பண்ணியிருக்கேன். வாங்க! சாப்பிட்டுட்டு போகலாம்?"

"இல்ல... நான் வீட்டுல போய்..." நழுவ முயன்றான்.

"கமான் நிரு. தினம் தான் வீட்ல சாப்பிடுறோம். பார் எ சேஞ்ச். இன்னிக்கு எங்களோட ஓட்டல்ல சாப்பிடுங்களேன். ப்ளீஸ்."

"இல்ல.. நான்..."

"நோ ஆர்கியூமெண்ட். முதல்ல சாப்பாடு. அப்புறம் பேச்சு. கம்... கம். ரொம்ப பசியோட இருக்கேன் நான்" என நிரஞ்சனை தள்ளிக் கொண்டு

தாரா முன்னே செல்ல, மற்றவர்கள் அமர்க்களமான சிரிப்போடு பின்னே வர, நிரஞ்சன் மனதிற்குள்ளே நண்பனைத் திட்டினான்.

'ச்சே! இப்படி மாட்டி விட்டுட்டு போயிட்டானே. இனி எப்போ வெளியே வந்து நிறைமதியின் வீட்டுக்குச் செல்வது?' தவிப்பாய் கடிகாரத்தைப் பார்த்தான்.

□ □ □

''வேற என்னப்பா சொன்னார்?'' ஆர்வமாய் கேட்டான் சந்தர். அவனுக்காக வாங்கி வந்த உடை பிரிக்கப்படாமலே இருந்தது. கண்களில் ஆர்வமும் நம்பிக்கையும் சந்தோஷமும் மின்ன தந்தையின் முன் அமர்ந்திருந்தான்.

''அவருக்கு நிறைய ஆட்களைத் தெரியுமாம். நீ மட்டும் நல்லா படிச்சி பர்ஸ்ட் மார்க் எடுத்தா போதுமாம். அவரே சீட் வாங்கிக் கொடுத்திடுவாராம்'' என்றார் செல்வகணபதி.

"அக்கா! கேட்டியா? நான் டாக்டராகப் போறேன். வளர், பார்த்தியா... நிரஞ்சன் சாரே சீட் வாங்கித் தர்றாராம்'' என்றான் ஆர்ப்பாட்டமாய்.

"சந்தர்! அவர் சொன்னாருன்றதால நீ அலட்சியமா இருந்திடாதே. நிறைய மார்க் எடுத்தா யாரோட உதவியும் இல்லாமலே நீ ஜெயிச்சிடலாம்'' என்றாள் நிறைமதி.

"முதல்ல இந்த ஸ்டெம்ப், கிரிக்கெட் பேட் எல்லாத்தையும் எடுத்து பரண்ல போடு. பரீட்சை முடியற வரைக்கும் அதையெல்லாம் தொடாதே. அப்பத்தான் நல்லா படிப்ப. சரியா?'' என்றாள் வளர்மதி.

"சரிக்கா'' பலமாய் தலையாட்டினான்.

"அம்மாடி! உலக அதிசயமா என்னை அக்கான்னு சொல்லிட்டானே."

"இனிமே உன்னையும் மரியாதையா கூப்பிடுறேங்க்கா. என்னைவிட மூணு வருஷம் பெரியவளாச்சே நீ."

"அப்பா! எனக்கு மயக்கமே வருதுப்பா'' என கண்களை செருகினாள் வளர்மதி. மற்றவர்கள் சிரிக்க, செல்வகணபதியும் மனம் நிறைந்து சிரித்தார். மனதில் மானசீகமாய் மனைவியிடம் வேண்டிக் கொண்டார்.

'தேவகி! நம்ம புள்ளைங்க இதே மாதிரி எப்பவும் சிரிப்பும் சந்தோஷமுமா இருக்கணும். அதுகளுக்கு எந்த கஷ்டமும் வந்திடக் கூடாது. நம்ம குடும்பத்தில நிம்மதியும் அமைதியும் நிரந்தரமா குடியிருக்க நீதான் தெய்வமா இருந்து துணை புரியணும்.'

அன்று முழுக்க அனைவருமே சிரிப்பும் கலகலப்புமாய் இருக்க, மாலை ஆறு மணிக்கு காரில் வந்து இறங்கினான் நிரஞ்சன். துணிகளைக் கொடுத்துவிட்டு வளர்மதியிடம் என்னென்ன டிஸைன் வேண்டுமென்று பேசிக் கொண்டிருந்தபோது கையில் காபியோடு வந்தாள் நிறைமதி.

சற்று நேரமே முகம் காட்டிவிட்டு மேகத்தினுள் மறைந்து கொண்ட நிலவைப் போல அவள் வீட்டினுள் சென்றுவிட, தம்பியும் அப்பாவும் நிரஞ்சனை விட்டு நகரவே இல்லை.

தொழில்துறை, படிப்பு, விளையாட்டு, பொழுதுபோக்கு என பேசிக் கொண்டே இருக்க, நிறைமதி குரல் கொடுத்தாள்.

"அப்பா! மணி ஒன்பதாகப் போகுது."

''அச்சோ! இவ்வளவு நேரமா இருந்துவிட்டேன். ரொம்ப தேங்க்ஸ்ங்க. இப்பவாவது நினைவுபடுத்திட்டீங்க'' என்றவாறே எழுந்து கொண்டான்.

"தம்பி! சாப்பிட்டுட்டுப் போலாமே."

"இல்ல சார்! மதியமும் வீட்டுக்குப் போகல்ல. ரொம்ப முக்கியமானவங்க எல்லாம் வந்திருந்தாங்க. அவங்களோட ஓட்டல்ல சாப்பிட்டுட்டேன். டயமாச்சு. வீட்ல தேடுவாங்க. வரட்டுமா?''

"சரி தம்பி! பார்த்து போயிட்டு வாங்க."

"சரிங்க சார். வளர், நீங்க இதெல்லாம் எப்போ முடிப்பீங்க?''

"பொங்கல் முடிஞ்சதும் வேலையைத் தொடங்கிடறேன் சார். ரொம்ப அர்ஜெண்ட்னா ஒரு வாரத்தில தந்திடுறேன்."

"பரவாயில்லை. கூட ஒன் வீக் ஆனாலும் பரவாயில்லை. நிதானமா தந்தாலே போதும். ரெடியானதும் எனக்கு போன் பண்ணுங்க'' என்றவாறு தனது விசிட்டிங் கார்டு ஒன்றை எடுத்து அவளிடம் நீட்டினான்.

"இதுல என் செல் நம்பர், கம்பெனி நம்பர் எல்லாம் இருக்கு. ரெடியானதும் போன் பண்ணுங்க. நான் வந்து பில் செட்டில் பண்ணிட்டு வாங்கிட்டுப் போறேன்."

"சரிங்க சார்'' என்றாள் வளர்மதி.

''சார்! அதுக்கு முன்னால வரமாட்டீங்களா?'' சந்தர் சற்றே வருத்தமாய்க் கேட்க, அவனது கன்னத்தைத் தட்டிவிட்டு சிரித்தான்.

"அதுக்கென்ன வந்துட்டாப் போச்சு."

''ரியல்லி! எப்போ வருவீங்க?'' ஆர்வமாய்க் கேட்டான்.

"எப்போ வரணும்?"

"ம்? சார்! நீங்க காணும் பொங்கலுக்கு எங்கேயாவது போவீங்களா?"

"சில சமயம் பிரெண்ட்ஸ்களோட பீச்சுக்கு போவேன். பட், இந்த வருஷம் இன்னும் முடிவு பண்ணலையே. என்ன விஷயம்?"

"அப்போ... எங்க கூட வர்றீங்களா?"

"எங்கே?"

"மாமல்லபுரத்திற்கு. நாங்க ஒவ்வொரு வருஷமும் காணும் பொங்கலுக்கு அங்கேதான் போவோம்."

"அப்படியா?"

"ம். அது எங்க அம்மாவுக்கு ரொம்ப பிடிச்ச இடம். எங்க அக்காகூட ரொம்ப ஆசைப்படுவாங்க. நீங்களும் வர்றீங்களா?"

"சந்தர்! என்ன பண்ணிட்டு இருக்கே நீ" அதட்டிய நிறைமதியைப் பார்த்து புன்னகைத்தான் நிரஞ்சன்.

"சந்தர்! நான் வர்றது உங்க அக்காவுக்கு பிடிக்கலப் போலிருக்கே."

"அ... அப்படியெல்லாம் ஒண்ணுமில்ல. உங்களுக்கு எதுக்கு வீண்சிரமம்..." நிறைமதி மென்று விழுங்க, இன்னும் சிரித்தான்.

"நான் சிரமம் என்று சொல்லவில்லையே."

"அப்போ... வர்றீங்களா?" படபடப்பாய்க் கேட்டாள்.

"ஏன் இத்தனை பதற்றம் உங்களுக்கு?"

வளர்மதி கேலியாய் சிரித்தாள். "விஷயம் இருக்கு சார்."

"என்ன விஷயம்?"

"மகாபலிபுரம் போயிட்டாலே அக்கா குழந்தை ஆகிடுவா. பாறைகளோட பேசுறதும், சிற்பங்களை மணிக்கணக்கா ரசிப்பதும், செடி மரம், கடல் அலை என எதையுமே விடமாட்டா. அவ மட்டும் தனி உலகத்தில இருக்கிற மாதிரி நினைச்சுப்பா."

"ஏய்... சும்மா இருடி."

"உண்மையைத்தானே சொல்றேன்க்கா. காலையில போயிடுவோம் சார். இருட்டுற வரை அக்கா சிற்பத்தைவிட்டு நகரவே மாட்டா. அப்படியொரு ரசனை."

"இது ரொம்ப நல்ல விஷயம் வளர். ரசனைத்தன்மை உள்ளவங்களுக்கு சீக்கிரம் முதுமை வராதாம். முகத்தில எப்பவும் குழந்தைத்தனம் இருக்குமாம்" என்றான் நிறைமதியை ஓரக்கண்ணால் ரசித்தவாறே.

"உண்மையா சார்?"

"ஆமா வளர். ஆராய்ச்சியாளர் கண்டுபிடிச்சிருக்காங்களாம்."

"அப்பா! மணி பத்தாகப் போகுது" என்றாள் மூத்தவள்.

"கிளம்பிட்டேன்... கிளம்பிட்டேன். சார் வரட்டுமா?" என புறப்பட்டு வாசலுக்கு வந்தான். பின்னால் ஓடி வந்தான் சந்தர்.

"சார்! பதிலே சொல்லாம போறீங்களே. மகாபலிபுரம் வர்றீங்களா?"

உள்ளே நின்ற நிறைமதியைப் பார்த்தான். "ம்ப்ச்! வேண்டாம் சந்தர். உங்க அக்காவுடைய சந்தோஷத்தை ரசனையை நான் கலைக்க விரும்பல்ல. நான் வந்தா அவங்களால இயல்பா இருக்க முடியாது. ஸோ... நீங்க போயிட்டு வாங்க."

"அப்போ வரலையா?"

"அதனாலென்ன? இனிமே அப்பப்ப வருவேனே. அப்ப பார்க்கலாம். வரட்டுமா? நல்லாப் படிக்கணும். பை" என்றவாறு காரில் ஏறி புறப்பட்டுச் சென்றான்.

"ச்சே! சார் வந்தா ஜாலியா இருந்திருக்கும்" ஏமாற்றமாய் முணுமுணுத்தவாறே கடந்து சென்ற தம்பியைப் பார்த்தாள் நிறைமதி. ஏமாற்றம் தம்பிக்கு மட்டுமல்ல, தனக்கும்தான் என்றது அவளது உள்மனம்.

## 6

வழக்கமாய் வந்து போகும் இடம்தான். ஒவ்வொரு நொடியையும் வீணாக்காமல் பார்த்து ரசித்து பூரித்த சிற்பங்கள்தான். ஆனால் ஏனோ இன்று அத்தனை ஆர்வம் வரவில்லை. எதையோ தொலைத்ததுபோல் எதையோ இழந்து விட்டதுபோல் வெறுமையாகவே இருந்தது.

முன்பைவிட இப்போது மகாபலிபுரம் முழுக்க மனிதத்தலைகளால் நிறைந்திருந்தது. எந்த இடத்திலும் பொறுமையாய் அமரவோ நிற்கவோ முடியாத அளவிற்கு ஆணும் பெண்ணுமாய் அமர்ந்திருந்தது வெறுப்பேற்றியது.

செல்வகணபதியே திண்டாடிவிட்டார். பெண் குழந்தைகளை அழைத்து வந்து விட்டோமே என்றிருந்தது அவருக்கு. ஒரு பாறையோ மரத்தடி நிழலோ பாதையோரமோ காலியாக இருக்கவில்லை. ஒருவரையொருவர் ஒட்டிக் கொண்டும் உரசிக் கொண்டும் மடிமீது படுத்துக் கொண்டும் இருந்த ஜோடிகளைப் பார்க்கையில் அவருக்கு வயிற்றில் புளியைக் கரைத்தது.

தினமும் தினசரி நாளிதழ்களில் எத்தனையோ ஏமாந்த பெண்கள், ஏமாற்றப்பட்ட பெண்கள், உயிரிழந்த பெண்கள் என செய்தி வந்து கொண்டுதான் இருக்கிறது. அதெல்லாம் இவர்களது கண்ணில் படுவதில்லையோ? இவர்களைப் பெற்றவர்கள் எத்தனை நம்பிக்கையோடு இவர்களை வெளியே அனுப்பியிருப்பார்கள். ஆனால்... இவர்கள்...

"அப்பா! போகலாமா? இங்க நிற்கவே அருவருப்பாயிருக்கு" என்றாள் வளர்மதி.

"ஆமாம்ப்பா! தெருநாய்ங்க கூட கொஞ்சம் மறைவைத் தேடி போகும் போலிருக்கு. இதுங்க அதைவிடக் கேவலமா இருக்குதுங்க. நாம கிளம்பலாம்" என்றான் சந்திரசேகர்.

சோர்வுற்று நின்ற நிறைமதி தம்பியை அடக்கினாள்.

"தம்பி! அவங்க காதில விழுந்திடப் போகுதுடா. மெல்லப் பேசு."

"விழட்டுமேக்கா. இதுகளுக்கெல்லாம் சொரணை இருக்கும்னா நினைக்கிற. சொரணை இருந்தா இப்படி பொது இடத்தில வெட்கமில்லாம அலையுங்களா? வீடு வாசல் இல்லாத தெருநாய்ங்க" என்றாள் வளர்மதி.

"வளர்! வேண்டாம்மா! நமக்கேன் வம்பு?"

"சும்மா இருங்கப்பா. இப்படி எல்லாருமே கண்டும் காணாம இருக்கிறதாலதான் எங்க பார்த்தாலும் இதுங்க தொந்தரவா இருக்கு. ஒரு லீவுடைம்ல குடும்பமா, குழந்தைகளோட எத்தனை பேர் வருவாங்க. கெட்டு சீரழியணும்னு முடிவு பண்ணிட்டாளுங்க. இதுகளுக்கெல்லாம் வேற இடமாயில்லை. இதுகளையெல்லாம் செருப்பை கழட்டி அடிக்கணும். கழிசடைங்க" கோபம் தலைக்கேற குரல் உயர்த்தியே வளர்மதி பேச, ஒரு சிலர் எழுந்து நகர்ந்து போயினர். சிலர் முணுமுணுத்துக் கொண்டே சற்று விலகி அமர்ந்தனர்.

"வளர்! கைகொடு. பின்னிட்டே" கைகொடுத்தான் தம்பி.

"நமக்கேன்டா இந்த வீண் வேலையெல்லாம்?" நிறைமதி அதட்டினாள்.

"அப்படியெல்லாம் விடக் கூடாதுக்கா. இதுகளை பெத்தவங்க எவ்வளவு நம்பிக்கை வெச்சு வெளியே அனுப்பியிருப்பாங்க. பெத்தவங்களை ஏமாத்துறோம்கிற குற்ற உணர்ச்சி எவ முகத்திலாவது தெரியுதா பார்? அவனுங்க கூப்பிடுவானுங்கதான். அதுக்காக வந்துடலாமா? இங்க கூடியிருக்கிறதுல ஒரு பத்துபேராவது விரும்பியவனையே கட்டுவானான்றது சந்தேகம்தான். அப்புறம் ஏன் இவனுங்களை நம்பி ஏமாறணும்" என்ற வளர்மதியை தோளில் சாய்த்துக் கொண்டார் செல்வகணபதி.

"கண்ணுங்களா! எப்பவும் இதே மன உறுதியோட இருங்கடா. பொண்ணுங்களை பெத்தவங்களுக்கு இதுதான்டா வேணும். பெத்தவங்க நமக்கு ஒரு நல்ல துணையை அமைச்சுத் தருவாங்கன்னு நம்புங்கடா. உங்க வாழ்க்கை அமோகமா இருக்கும்" கண்கள் கலங்க கூறிய தந்தையைப் பார்த்து மூவருமே புன்னகைத்தனர்.

"அப்பா! நீங்க பயப்படாதீங்க. நாங்க யார்கிட்டயும் ஏமாற மாட்டோம். அப்படியே எவனாவது வந்து எங்ககிட்டே வழிஞ்சான்னா எங்க அப்பாகிட்ட போய் பேசுன்னு சொல்லிடுவோம். நீங்க காட்டுற ஆளுதாம்ப்பா எங்க வாழ்க்கைத் துணை. இல்லக்கா" என வளர்மதி கேட்க, திடும்மென அதிர்ந்தாள் நிறைமதி.

"ம்... ஆ... ஆமாம்ப்பா. எங்க மனசை அலைய விட மாட்டோம்ப்பா. தப்பு பண்ண மாட்டோம்ப்பா. உங்களை தலைகுனிய வைக்க மாட்டோம்" தந்தைக்காகவும் தன் மனதிற்கும் திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டாள்.

"போதும் தங்கங்களா! இதைவிட ஒரு அப்பனுக்கு என்ன வேணும். வாங்கடா போகலாம்" என்றதும் மூவருமாய் பின்னால் நடந்தார்கள்.

நிறைமதியின் மனம் புண்ணாய் வலித்தது. 'எப்படி மறந்தேன்? தன்னைவிட வயதில் சிறியவள். இவளுக்கு இருக்கும் தெளிவு எப்படி என்னிடம் இல்லாமல் போனது. ஓரிருமுறையே சந்தித்தவனின் மீது கவனத்தை சிதற விட்டது எத்தனை பிழை. இறைவா! நல்லவேளை. இப்போதே தெளிய வைத்து விட்டாய். இல்லையென்றால் அவனை நினைத்து பித்துப்பிடித்து பைத்தியக்காரி ஆகியிருப்பேனே.

இனி அவன் வீட்டிற்கு வந்தால் அவன் எதிரில் வரவேக் கூடாது. வளர் துணிச்சல்காரி. மனதிடம் கொண்டவள். அவளையே பேசி அனுப்பிவிடச் சொல்ல வேண்டும்.

நல்லவேளையாய் அப்பா மனம் காயப்பட்டு விடாமல் தெளிந்து விட்டோம். இறைவா! என் மனதை ஒருமுகப்படுத்து. எப்போதும் கலங்காதிருக்கும் மனதிடத்தைக் கொடு. என் தந்தைக்கு நல்ல மகளாய், தம்பி தங்கைக்கு நல்ல முன் உதாரணமாக விளங்க வேண்டும்.'

செல்வகணபதி மகளின் தலையை வருடினார். "என்னடாம்மா! எதுவுமே பேசாம வர்றே?"

"அப்பா! மலையடிவாரத்தில ஒரு அம்மன் கோவில் இருக்கே. அங்கே போயிட்டு வீட்டுக்குப் போகலாமா?"

"சரிம்மா. போகலாம்."

"அக்கா! இன்னிக்கு கூட்டம் ஓவரா இருக்கு. கோவிலுக்கு போயிட்டு வந்தா பஸ் கிடைக்கிறது கஷ்டம். இன்னொரு நாள் போகலாமே" என்றான் சந்தர்.

"இல்லடா. எனக்கு கோவிலுக்குப் போகணும்போல இருக்கு."

"சரி. ஆனா, ரொம்ப லேட்டாக்கிடாதே. எல்லா பஸ்ஸுமே கூட்டமாத்தான் இருக்கு. இருட்டினப் பிறகு உங்களையும் வெச்சிகிட்டு இங்கே ரொம்பநேரம் நிற்க முடியாதில்ல."

"சரிடா. சீக்கிரம் கிளம்பிடலாம்."

"அக்கா! நம்ம தம்பிக்கு வர வர ரொம்ப அக்கறைதான். இல்லக்கா?"

"பின்னே! அவன் இப்போ பெரியவனாகிட்டானே. பொறுப்பும் அக்கறையும் தானா வந்திடுமே" என்றார் செல்வகணபதி பெருமையாக.

"ஆமாப்பா! இவங்க ரெண்டுபேரையும் கரையேத்துற பொறுப்பு இருக்கில்ல."

"ஏன்டா! நாங்க என்ன ஆத்திலயோ கடல்லயோ விழுந்தா தத்தளிக்கிறோம். யாரைப் பார்த்தாலும் இந்த ஒரு வார்த்தைய சொல்லிட்டே இருக்கீங்க. எனக்கு இப்பவே தெரிஞ்சாகணும்" என்றாள் வளர்மதி.

"என்ன இவ்வளவு சீக்கிரம் திரும்பிட்டீங்க. நைட் வரை இருப்போம்னு சொன்னானே சந்தர்" என்ற வழக்கமான குரலைக் கேட்டதும், நிறைமதியின் உடல் தடதடவென ஆடத் துவங்கியது. தடுமாறிய மனதை இழுத்துப் பிடித்தாள்.

"சார்! நீங்களா? நீங்க எப்போ வந்தீங்க?" சந்தர் உற்சாகமாய் குரல் கொடுக்க, செல்வகணபதியும் சேர்ந்து கொண்டார்.

"வாங்க தம்பி! நீங்களும் இங்கேதான் வந்தீங்களா?"

"ஆமா சார்! பிரெண்ட்ஸ்களோட வந்தேன். அவங்கள்லாம் தண்ணியில மிதந்திட்டு இங்கேயே லாட்ஜ் எடுத்து தங்கிட்டாங்க. நான் வீட்டுக்கு கிளம்பிட்டேன். சந்தரோட குரல் கேட்டது. பார்த்தா நீங்க!"

"நாங்களும் கிளம்பிட்டோம் தம்பி!" பேசிக் கொண்டே நடந்தனர்.

"ஏன் சார், அதுக்குள்ள சுத்திப் பார்த்தாச்சா?"

"மகாபலிபுரம் முன்னே மாதிரி இல்லையே தம்பி. ரொம்ப மாறிப் போச்சே" சலிப்பாய் அவர் சொல்ல, ஆமோதித்தான் நிரஞ்சன்.

"ஆமா சார்! எங்களுக்கே கஷ்டமாத்தான் இருக்கு."

"அதான் கிளம்பிட்டோம். இன்னிக்கு கூட்டமும் அதிகமா இருக்கு. அதான் சீக்கிரமா புறப்பட்டாத்தான் பஸ் கிடைக்கும்னு."

"நான் கார்லதான் வந்திருக்கேன். வாங்களேன் சார். நான் ட்ராப் பண்ணிடுறேன்" இயல்பாகவே அவன் கூற, மற்றவர்கள் அமைதியானார்கள்.

நிறைமதி நிமிர்ந்தும் கூட பாராமல் தங்கையின் கையைப் பற்றிக் கொண்டு நடக்க, வளர்மதி தந்தையிடம் வேண்டாம் என சைகையால் மறுத்தாள்.

"என்ன சார்! ஒண்ணுமே பேசாம வர்றீங்க?"

"இல்ல தம்பி! வேண்டாம். நாங்க பஸ்ல போயிடுறோம். அதுதான் வசதி."

"ஆமா சார். பஸ்ல போனாத்தான் எங்களுக்குப் பிடிக்கும். நீங்க கிளம்புங்க. நாங்க கோவிலுக்கு போயிட்டுத்தான் கிளம்புவோம்" என்றான் சந்தர்.

நிரஞ்சன் தோளைக் குலுக்கினான். "ஓ.கே. என்னோட வர சங்கோஜப்படுறீங்க. எனக்கும் புரியுது. ஓ.கே. நீங்க கிளம்புங்க. நான் பிரண்ட்ஸ்ங்ககிட்ட சொல்லிட்டு கிளம்ப வேண்டியதுதான். சரி நான் வர்றேன்."

"சரிங்க தம்பி. போயிட்டு வாங்க. நாங்க மறுத்திட்டோம்னு தவறா நினைச்சுக்க வேண்டாம் தம்பி."

"பரவாயில்ல சார். அடுத்தவங்களோட சூழ்நிலையும் புரிஞ்சு நடக்கிறவன்தான் நான். நான் ஒண்ணும் தப்பா எடுத்துக்கல்ல. வர்றேன். பை சந்தர்."

"பை சார்! அப்புறம் சந்திக்கலாம்" என விடைபெற்று நிரஞ்சன் விலகிச் செல்ல, ஒருவித நிம்மதி பெருமூச்சோடு நிமிர்ந்தாள் நிறைமதி.

"நல்லவேளைப்பா! ரொம்ப தொந்தரவு பண்ணாம போயிட்டார்" என்றாள் வளர்மதி.

"பையன் ரொம்ப நல்லப் பையம்மா. நாம சிரமப்படக்கூடாதேன்னு ஒரு மரியாதைக்காக கூப்பிட்டது. நான்

மறுத்ததும் நாகரீகமா போயிட்டது. இதுதான் நல்ல பிள்ளைக்கு அடையாளம்."

"அப்பா! இப்படி வாங்க. இப்படி போனா நேரே கோவில் வாசல்ல போய் இறங்கிடலாம்" என்று நிறைமதி கூறியதும் வளைவில் திரும்பி இறங்க ஆரம்பித்தனர்.

'நல்லவேளையாக வந்த உடனே புறப்பட்டு விட்டான். கூடவே நின்று பேசிக் கொண்டிருந்தால் இந்தப் பாழும் மனம் தன் கட்டுப்பாட்டை அறுத்திருக்கும். இவன் ஆள் மட்டுமல்ல, இவனது குரல் கூட ஆபத்தானது. கூடுமானவரை இவன் கண்ணில் படாமல் இருப்பதுதான் நல்லது. இந்த ஒரு முறையோடு போதும். இனி இவனிடம் எந்த ஆர்டரையும் எடுக்கக் கூடாது. பிறகேன் இவனைச் சந்திக்கப் போகிறோம்.' இப்படித்தான் நிறைமதி மனதிற்குள் வாதாடி முடிவெடுத்தாள். ஆனால் நாம் நினைப்பதா நடக்கிறது?

சென்னை செல்லும் பேருந்தில் ஏறி கூட்டத்தோடு கூட்டமாய் நசுங்கிக் கொண்டு வந்தவர்கள், அந்த பலத்த சத்தத்தில் அதிர்ந்து வீறிட்டு பேருந்தை விட்டு இறங்கிய பிறகே தெரிந்தது பேருந்தின் முன்பக்க டயர் வெடித்திருந்தது. பேருந்து தடுமாறி சாலையோரம் மணலில் புதைந்து நிற்க, கூட்டம் முழுவதும் பெரிய ஓலத்தோடு ஒருவரை ஒருவர் முண்டியடித்துக் கொண்டு கீழே இறங்கினர்.

நடத்துனர் உதட்டைப் பிதுக்கிவிட்டு, அனைவரது டிக்கெட்டிலும் ஏதோ கிறுக்கிக் கொடுத்தார். "எல்லாருக்கும் ஒரே பஸ்ல இடம் கிடைக்காது. வர்ற பஸ்ஸ நிறுத்தி கொஞ்ச கொஞ்சமாய் ஏறிப் போங்க" என்றார்.

"இப்படிச் சொன்னா எப்படி சார்? எல்லா பஸ்ஸுமே கூட்டமா வருமே. எப்படி நாங்க ஏறுறது?" என்றார் ஒருவர்.

"நாங்க என்ன பண்ணட்டும் சார். டயர் போயிடுச்சே. இனிமே டிப்போவிற்கு போன் பண்ணி ஆள் வந்து டயரை மாற்ற எவ்வளவு நேரமாகுமோ. அதனால நீங்க கிடைச்ச பஸ்ல ஏறிப் போயிடுங்க. இது காட்டுப்பகுதி. லேடீஸ், குழந்தைங்க எல்லாம் இருக்காங்களே" என்றார் நடத்துனர்.

"இவனுங்களுக்கு இதே வேலைதான். பஸ்ஸ எடுக்கும்போது இதெல்லாம் செக் பண்ண மாட்டாங்க. நாமதான் சங்கடப்படணும். ச்சே" அவரவர் தங்களது கோபத்தைக் கொட்டிவிட்டு சாலையில் போய் நின்று பேருந்திற்காக காத்திருக்கத் துவங்கினர்.

நிறைமதி கலக்கமாய் தந்தையை ஏறிட்டாள். "இப்ப என்னப்பா பண்றது? இவ்வளவு கூட்டத்தில நாம எப்படி?"

"இரும்மா! அதான் எல்லாரும் நிற்கிறாங்கள்ல. நாமும் சேர்ந்து நிற்போம்" என்றவாறே கூட்டத்தோடு நின்று கொண்டார் செல்வகணபதி.

நேரம்தான் போய்க்கொண்டே இருந்ததே தவிர, பேருந்து கிடைத்தபாடில்லை. தனியாய் நின்ற ஆட்கள் எதிரே வந்த இரு சக்கரவாகனங்களில் லிப்ட் கேட்டு ஏறிக் கொள்ள, கூட்டம் குறையத் துவங்கியது.

தவிப்பாய் நிற்கும்போதுதான் அந்த பால்நிற எஸ்டீம் கார் அவர்களை நெருங்கி வந்து நின்றது. சந்தர்தான் முதலில் பார்த்து கூவினான்.

"அப்பா! இது நிரஞ்சன் சார் கார்."

அதற்குள் அவனே இறங்கி வர, "அடடே! நீங்களும் இப்பத்தான் கிளம்பி வர்றீங்களா தம்பி?" என்றார் செல்வகணபதி.

"அதிருக்கட்டும் சார். நீங்க என்ன... இப்படி பாதி வழியில நிக்கறீங்க. என்ன ஆச்சு?"

"பஸ் பிரேக் டவுன் ஆயிடுச்சு தம்பி. அதான் வேற எதுவும் பஸ் வருதான்னு பார்த்திட்டு இருக்கோம். எல்லாமே கூட்டத்தோடு வருது. எவனும் நிறுத்த மாட்டேங்கிறான்."

"என்ன சார் நீங்க? விசேஷ நாளாச்சே. கூட்டமாத்தான் இருக்கும். ஸ்டாப்பிங்லயே நிறுத்த மாட்டேங்கிறாங்க. இப்படி நடுவழியிலே எப்படி... சார், திரும்பவும் கேட்கிறேன்னு தப்பா எடுத்துக்காதீங்க. நம்ம கார்ல போகலாம் வாங்க."

மகள்களை தயக்கமாய் திரும்பிப் பார்த்தார் செல்வகணபதி.

"ஏன் சார் தயங்குறீங்க? என்னைப் பார்த்தா அவ்வளவு மோசமானவனா தெரியுது. என் வீட்டிலும் ஒரு தங்கை இருக்கிறாள் சார்."

"அய்யோ! நாங்க தப்பா நினைக்கல்ல தம்பி."

"பின்னே என்ன சார். நேரமாகுது. இன்னும் கொஞ்சநேரத்தில இருட்டிடும். வயசுப் பொண்ணுங்களை வெச்சிகிட்டு எவ்வளவு நேரம் இப்படி ரோட்ல நிற்பீங்க. வாங்க சார்."

"அது ஒண்ணுமில்ல தம்பி. நம்ம வீட்டு பக்கத்தில உள்ளவங்கள்லாம் எதுவும் ஒரு வார்த்தை சொல்லிடக் கூடாதேன்னு ஒரு... தயக்கம்..."

"புரியுது சார்! நான் உங்களை மயிலாப்பூர் பஸ் ஸ்டாண்ட்ல விட்டுடுறேன். நீங்க நடந்து போயிடுங்க."

"அப்பா! இது நல்ல ஐடியாப்பா. போலாம்ப்பா. நானும் சாரோட கொஞ்சம் பேசிட்டே வருவேனே." சந்தர் கேட்டதும் மகள்களை பார்த்தார்.

"நீங்க என்னம்மா சொல்றீங்க?"

"அக்கா! போலாமா? ரொம்ப நேரமா நிற்கிறோமே. அந்த கோடு போட்ட சட்டைக்காரன் வேற இதுவரை நாலுவாட்டி நம்மை சுத்தி வந்திட்டான்." வளர்மதி கிசுகிசுப்பாய்ச் சொல்ல, தயக்கமாய் நிமிர்ந்தாள் நிறைமதி.

கண்களில் கெஞ்சுதலோடு நின்றிருந்தான் நிரஞ்சன். தந்தையிடம் திரும்பினாள். "போலாம்ப்பா"

"ஓ! ரொம்ப நன்றிங்க" என்றவாறு கார் கதவை திறந்து விட்டான்.

"சார்! நன்றி நாங்கதான் சொல்லணும்" என்றவாறு வளர்மதி காரில் ஏற, நிறைமதியைத் தொடர்ந்து தந்தையும் ஏறிக் கொண்டதும் கதவை அறைந்து சாத்தினான். "நீங்க என் கார்ல வர்றதுக்குத்தான் இந்த நன்றி."

"சார்! நான் உங்ககூட..."

"ஷ்யூர்" என்றவாறு சந்தரை முன் இருக்கையில் ஏற்றிக் கொண்டு கார் புறப்பட்டதும், அனைவரும் நிம்மதியாய் சாய்ந்துக் கொண்டனர்.

"சார்! நீங்க நல்லா கார் ஓட்டுறீங்க? யார்கிட்ட கத்துக்கிட்டீங்க." சந்தர் தன் கேள்விக்கணையை தொடுக்க, வளர்மதி அலுத்துக் கொண்டாள்.

"நிரஞ்சன் சார்! இனி சென்னை வரை வாயை மூடவே மாட்டான். எதற்கும் உங்களிடம் பஞ்சு இருந்தால் காதை அடைச்சி வைச்சிக்கங்க."

"ஏன் வளர் அப்படிச் சொல்றீங்க? சந்தர் என்ன அப்படியா பேசுவான்?"

"பேசுவானா? பேசியே கொன்று விடுவான்."

"ஏய்! என்னடி பேச்சு இது" நிறைமதி அதட்டினாள்.

"சரி சரி. பேசியே காதை செவிடாக்கி விடுவான். இது ஓ.கே.வா?"

"ஏய்! நீ மட்டும் என்ன கொஞ்சமா பேசுவே. விட்டால் ரம்பம், பிளேடு, கத்தி எதுவுமே இல்லாமல் காதில் ரத்தம் வரவைத்து விடுவாயே" சந்தர் பதிலுக்கு எகிற,

"சந்தர்! இதெல்லாம் எங்கே கற்றுக் கொள்கிறாய்?" எனக் கேட்டான் நிரஞ்சன்.

"ஏன் சார், என் பிரண்ட்ஸ்கிட்டே இருந்துதான்."

"எனக்கும் கொஞ்சம் கற்றுக் கொடேன்."

"உங்களுக்கு எதுக்கு சார்?"

"நீ உன் அக்காவிடம் சண்டை போடுவது போல நான் என் தங்கையிடம் தினமும் சண்டை போடுகிறேனே. அப்போ பேசத்தான்..."

"சரிதான். ரெண்டும் சரியான ஜோடிதான்" வளர்மதி சொல்ல,

"யாரெல்லாம் வளர்?" என்றான் தனக்கெதிரே இருந்த கண்ணாடியைப் பார்த்துக் கொண்டே. கண்ணாடியில் தெரிந்த நிறைமதி அவசரமாய் பார்வையைத் திருப்பிவிட, "ம்... முன் ஸீட்டில் இருக்கிற ரெண்டுபேரும்தான்" என்றாள் அவள்.

"நல்லவேளை சந்தர்! நீ என் பக்கத்தில் இருந்தாய். இல்லையென்றால் பிரச்சினை பெரிதாகியிருக்கும்" என நமுட்டுச் சிரிப்போடு அவன் சொல்ல, முகம் சிவந்தாள் நிறைமதி.

"அவ ஒரு ஓட்டைவாய் சார். இப்படித்தான் எதையாவது பேசிட்டே இருப்பா. நாம நம்ம விஷயத்துக்கு வருவோம்" என்ற சந்தர் தொடர்ச்சியாய் பேசிக் கொண்டே வர, அவனும் சளைக்காமல் பதில் சொல்லிக் கொண்டே வந்தான்.

ஏசியின் ஜில்லிப்பும், இனிமையான நறுமணமும், கண்ணுக்கு இனியவனின் காதுக்கினிய பேச்சும் ரம்மியமாகத்தான் இருந்தது. தன்னையும் அறியாமல் அவர்களது உரையாடலில் மெய்மறந்த போது, கார் தன் வேகத்தை குறைத்துவிட, வெளியே பார்வையை வீசினாள் நிறைமதி.

நான்கைந்து பேர் கொண்ட கும்பல் சாலையின் நடுவே நின்று காரை நிறுத்தியது. சந்தரின் பேச்சு நின்றுவிட, காரை நிறுத்தினான் நிரஞ்சன்.

## 7

ஆண்களும் பெண்களுமாய் நான்கைந்து பேர் நிற்க, அதில் ஆண்கள் சற்றே தள்ளாடிக் கொண்டு நின்றனர். சாலையோரத்தில் கார் ஒன்று நின்று கொண்டிருக்க, கார் பழுதாகி நிற்கிறதோ என்ற எண்ணத்தில் காரை நிறுத்தினான் நிரஞ்சன்.

காலையில் இருந்து அலைந்ததில் ஏற்பட்ட அலுப்பில் காரின் இருக்கையில் சாய்ந்து கண் அயர்ந்திருந்தார் செல்வகணபதி. வளர்மதியும் கூட குட்டித் தூக்கத்தில் இருந்தாள். காரை நிறுத்திவிட்டு இறங்க முயன்றவனை அவசரமாய் தடுத்தாள் நிறைமதி.

"ஏங்க! இறங்க வேண்டாமே" குரலில் பதற்றம் தொனித்தது. ஆச்சர்யமாய் திரும்பினான் நிரஞ்சன்.

"ஏன்...?"

"இல்ல. அவங்க ட்ரிங்ஸ் சாப்பிட்டு இருக்காங்க போலிருக்கு. ஏதாவது கலாட்டா பண்ணத்தான் ரோட்ல நிக்கறாங்க."

"ஜென்ஸ் மட்டும் இருந்தா நானும் அப்படித்தான் நினைச்சிருப்பேன். லேடீசும் நிற்கிறாங்களே. கார் எதுவும் ரிப்பேராச்சோ என்னவோ. போய் என்னன்னு கேட்டுட்டு வரனே" அவன் இதமாய் கேட்க, தயக்கமாய் வெளியே பார்த்தாள் நிறைமதி.

மூன்று பெண்களும் ஜீன்ஸ் பேண்ட், டிசர்ட் சகிதமாக நின்று கொண்டிருந்தனர். ஆண்கள் காரை நோக்கி வர நிரஞ்சனை ஏறிட்டாள்.

"அவங்க வர்றாங்க. போய் என்னன்னு கேட்டுட்டு வாங்க."

"சரி" என கார் கதவைத் திறந்தான்.

"ஏங்க! பத்திரம்" என்றாள் மீண்டும்.

அழகாய் புன்னகைத்து விட்டு 'சரி' என்பதாய் தலையசைத்துவிட்டு இறங்கி கதவை மூடிவிட்டு முன்னே சென்றான். காரை நிறுத்திய இளைஞர்கள் வெகுநாட்கள் பழகியவர்கள் போல் பேச நிரஞ்சனின் முகம் மாறியதைக் கவனித்த நிறைமதி தம்பியை அழைத்தாள்.

"சந்தர்! கண்ணாடியை இறக்கி விடு. அவங்க பேசுறது கேட்கட்டும்."

"சரிக்கா" என்றவாறு அவன் கண்ணாடியை இறக்கி விட, இப்போது வெளியே பேசிய குரல்கள் தெளிவாகக் கேட்டது. கார் நின்று விட்டதில் உறக்கம் கலைந்து, "என்னம்மா! கார் ஏன் நிற்குது?" என்றவாறு வெளியே எட்டிப் பார்த்தார் செல்வகணபதி.

நிரஞ்சன் நடுவே நிற்க, மற்றவர்கள் அவனை வியப்பாய் மேலிருந்து கீழாக அளவெடுத்தனர். உயரமாய் நின்றவன் விசிலடித்தான்.

"அடேங்கப்பா! மிஸ்டர் நிரு. நாங்க எதிர்பார்த்ததை விட ரொம்பவே ஹேண்ட்ஸமாத்தான் இருக்கீங்க. அதான் தாரா அப்படி உருகுறா" என்றான்.

தாரா என்ற பெயரைக் கேட்டதும் முகம் மாறினான் நிரஞ்சன்.

"ஏய் மிஸ்டர். யார் நீங்க! இப்ப எதுக்காக காரை மறித்தீர்கள்?"

"ஏய் வாய்ஸ்கூட சூப்பர்பா. கோபத்துல கூட அழகா இருக்கார்" என ஒருத்தி கூற, மற்றவள் கேலியாய் சிரித்தாள்.

"அதைத்தான் அவளே நூறுவாட்டி சொல்லிட்டாளே. நாம இப்போ இவரு தாராவுக்கு மேட்ச்சா இருப்பாரான்னு பார்ப்போம்."

"ம்ஹூம்! தாராவுக்கு இவர் ரொம்ப அதிகம்தான்."

"ஏய்! மெல்ல பேசுடி. காதுல விழுந்தா கடிச்சு குதறிடுவா" மற்றவள் எச்சரிக்க, சுற்றுப்புறம் பார்வையைத் திருப்பினான் நிரஞ்சன்.

"ஹேய் தாரு! உன் ஆளு உன்னைத் தேடுறார். சீக்கிரம் வா. கமான்யா" தள்ளாடியவாறே ஒருவன் காரை நோக்கி குரல் கொடுக்க, படீரென கதவைத் திறந்து கொண்டு ஓடிவந்து அவனை இடித்துக் கொண்டு நின்றாள் தாரா.

"ஹேய்! எங்க ஜோடிப் பொருத்தம் எப்படி இருக்குன்னு சொல்லுங்கடா" என்றவளைப் பார்த்து அதிர்வோடு விலகி நின்றான் நிரஞ்சன்.

"மிஸ் தாரா. என்ன இது விளையாட்டு?"

"இது விளையாட்டா? ம்ஹூம் விளையாட்டெல்லாம் கல்யாணத்துக்கு அப்புறம்தான்."

"வாட் நான்சென்ஸ்! என்ன உளர்றீங்க?"

காருக்குள் பதறினாள் நிறைமதி. "அப்பா! யாரோ அவரை டீஸ் பண்றாங்கப்பா. போய் பாருங்களேன். சந்தர் நீயும் போடா"

"சரிக்கா! நீங்க ரெண்டுபேரும் கீழே இறங்க வேண்டாம்"

"சரிடா. நீ போ. அப்பா..."

"இதோ போறேம்மா" என அவர்கள் இறங்க வளர்மதியும் விழித்துக் கொண்டாள். செல்வகணபதி வேகமாய் நிரஞ்சனை நெருங்கினார்.

"தம்பி! யாருப்பா இவங்க? ஏன் கலாட்டா பண்றாங்க?"

"நீங்க ஏன் சார் இறங்கி வந்தீங்க. இது வேலை வெட்டியில்லாத கூட்டம். தண்ணியடிச்சிட்டு ரோட்ல நின்னு விளையாடுதுங்க. நீங்க கார்ல ஏறுங்க. நாம போகலாம்" என நகர்ந்தவன் முன்

### உலகிலேயே மிகச் சிறிய மீன்தொட்டி

ரஷ்யாவைச் சேர்ந்த ஓவியர் அனடோலி கொனன்கோ. உலகிலேயே மிகவும் சிறிதான பொருட்களை உருவாக்குவதில் இவர் வல்லவர். சிறுவகை மீன்களுக்காக இவர் மிகச்



சிறிய கண்ணாடி மீன்தொட்டியை உருவாக்கியிருக்கிறார். இதன் அகலம் 30 மி.மீ., உயரம் 24 மி.மீ., ஆழம் 14 மி.மீ. இந்த குட்டி மீன்தொட்டியில் 10 மி.மீ. தண்ணீர் மட்டுமே பிடிக்கும். அதாவது 2 டேபிள் ஸ்பூன் தண்ணீர் மட்டுமே பிடிக்கும். சிரஞ்ச் மூலமாக தான் இந்த தண்ணீரை கூட இந்த சிறிய மீன்தொட்டிக்குள் விட முடியும்.

உலகிலேயே மிகவும் சிறிய புத்தகத்தை உருவாக்கி அனடோலி உலக சாதனையை படைத்துள்ளார். கடந்த 30 வருடமாக மிக சிறிதான பொருட்களை உருவாக்கி வருகிறார். இதற்கு மைக்ரோ மினியேட்சர்ஸ் என்று பெயர் வைத்துள்ளார். ஆர்வம் காரணமாக உலகிலேயே மிகச் சிறிய மீன் தொட்டியை உருவாக்கியதாக இவர் கூறுகிறார். இவர் உருவாக்கிய பொருட்களை மைக்ரோஸ்கோப் மூலமாகத்தான் நாம் தெளிவாக பார்க்க முடியும்.

---

வந்து நின்றாள் தாரா.

''நிரு! நீங்கதான் இப்போ விளையாடுறீங்க. நான் ரெண்டு மணி நேரமா உங்க காருக்காக நடுரோட்ல வெயிட் பண்ணிட்டு இருக்கேன். ஆமா இது யாரு புதுசா?'' என்றவாறு செல்வகணபதியை அலட்சியமாய்ப் பார்த்தாள்.

''இவங்க... என்னோட ரிலேடிவ்ஸ்'' என்றான் நிரஞ்சன்.

அதற்குள், ''தாரு! காருக்குள்ள பாரேன். லட்டு மாதிரி ரெண்டு பிகர்'' என்றான் ஒருவன்.

''ரிலேடிவ்ஸ்ன்னா... யாரு?'' என்றவாறே காரினுள் பார்த்தாள்.

''இதைக் கேட்கத்தான் காரை நிறுத்தினாயா?''

''பேச்சை மாத்த வேண்டாம் நிரு. இவரைப் பார்த்தா உங்க ரிலேஷன் மாதிரி தெரியலையே! நீங்க தனியா வர்றதாத்தான் நியூஸ் கிடைத்தது.''

நிரஞ்சனுக்கு கோபம் எழுந்தது. ''என்ன உளவு பார்க்கிறாயா? நீ யார் என்னை விசாரிக்க? ஒழுங்கா வீடு போய் சேர். நீங்க வாங்க சார்'' என்றவாறு வேகமாக காரை நெருங்கினான்.

''வெயிட்! வெயிட்! என்ன அவசரம்?'' என அவன் பின்னே வந்தவளின் முகம் கறுத்துப் போனது. காரின் உள்ளே இருந்த பெண்களைக் கண்டதும் கோபமாய் நிரஞ்சனின் சட்டையைப் பிடித்து திருப்பினாள்.

''என்ன நிரு. யார் இவளுங்க?'' கடுமையாய்க் கேட்டாள்.

''சட்டையை விடு. கொஞ்சம் மரியாதையாப் பேசு.'' அவளது கைகளை விலக்கினான்.

''மரியாதையா? யாருக்கு? ஆமா நீங்க உங்க பிரண்டோடத்தானே போனதா சிந்து சொன்னா? இதுதான் அந்த பிரண்டா. அப்போ இவர் யாரு? ஏஜெண்டா? இந்தக் கொடுக்கு எதுக்கு?'' சந்தரைக் காட்டினாள்.

அவள் பேசியதன் உள் அர்த்தம் புரிய கோபமாய் காரை விட்டிறங்கினாள் வளர்மதி. ''ஏய் வாயை மூடுடி. பொம்பளைதானே நீ? இத்தனை ஆம்பிளைங்க முன்னாடி என்னடி பேசுற. வாயை கிழிச்சிடுவேன்'' என எகிற, நிறைமதி அவசரமாய் தங்கையை தன்புறமாய் இழுத்தாள்.

''வளர்! என்ன நீ? இவகிட்ட போய் பேசிட்டு...''

''விடுக்கா என்னை! இவ நம்மையும் நம்ம அப்பாவையும் எவ்வளவு அசிங்கமா பேசுறா. இவளை விடுறதா?''

''என்னடி பண்ணப் போற! பெரிய இவளாட்டம் துள்ளுற. நான் நினைச்சா இப்பவே... உன்னை... உன் குடும்பத்தை அசிங்கப்படுத்த முடியும். பார்க்கிறியா?'' வளர்மதியின் முகத்திற்கு நேராக சொடுக்கு போட்டாள் தாரா. மற்றவர் அதிர்ந்து நிற்க, நிரஞ்சன் எரிமலையாய்க் குமுறினான்.

''தாரா, உனக்கென்ன பைத்தியமா? பேசாம போன காரை நிறுத்தி ரவுடித்தனம் பண்ணிட்டு இருக்க. அவங்களை யாருன்னு நினைச்ச?''

"அதைத்தானே நானும் கேட்கிறேன். யாரு?"

"இதோ பாருங்க. அவருக்கும் எங்களுக்கும் தனிப்பட்ட முறையில எந்த உறவும் இல்லை. பிஸினஸ் விஷயமாத்தான் பழக்கம்" நிறைமதி பொறுமையாய் சொல்ல, இன்னும் ஏளனமாய் சிரித்தாள் தாரா.

"அதுதான் என்ன பிஸினஸ்னு கேட்கிறேன். உங்க ரெண்டுபேரையும் வெச்சித்தான் பிஸினஸ் பண்றாரா இவர்?" உடன் இருந்தவர்கள் சிரிக்க,

வளர்மதி சிலிர்த்துக் கொண்டு தன்னைப் பற்றியிருந்த அக்காவின் கைகளை உதறினாள். ஆவேசமாய் சென்று தாராவின் கன்னத்தில் பளார் பளாரென அறைந்தாள். "யாரைப் பார்த்து என்ன பேசுறே? தொலைச்சிடுவேன்."

அனைவருமே ஸ்தம்பித்துப் போய்விட, தாரா சிலையாகிப் போனாள். அவமானத்தில் முகம் சிவந்து போனது. மனம் கொதிக்க, தன்னை அறைந்தவளையும், அவளை சமாதானப்படுத்திக் கொண்டிருந்தவளையும் மாறி மாறிப் பார்த்தாள்.

"தப்பு பண்ணிட்டீங்கடி. இந்த தாரா யாரு, எப்படிப்பட்டவன்னு தெரியாம கை வெச்சிட்டீங்க. காட்டில கிடக்கும் கருநாகத்தை விட விஷம்டி நான். என்னை சீண்டிட்டீங்கல்ல, இனிமே ஒரு நிமிஷம் கூட உங்களால நிம்மதியா வாழ முடியாது. உன் மொத்த குடும்பத்தையும் உருத்தெரியாம அழிச்சிடுவேன். அப்பத் தெரியும் நான் யாருன்னு. வாங்கடா போகலாம்" என திரும்பிப் போனாள்.

நிரஞ்சன் அவசரமாய் அவளைத் தடுத்தான். "தாரா! அது சின்னப் பொண்ணு. அவகிட்ட போய் இப்படியெல்லாம் பேசுறியே. நீ பேசினது தப்பு. அவ செய்ததை தப்புன்றியே. அவங்கள்லாம் ரொம்ப அமைதியா யார் வம்புக்கும் போகாம வாழுறவங்க."

"யார்கிட்ட வேணா வம்புக்கு போகலாம். என்கிட்ட வரலாமா?" கொடூரமாய்க் கேட்டாள் தாரா.

"நீ பேசினது தப்பு தாரா. பாவம்! பஸ் பிரேக் டவுனாகி நின்னதால நான் கார்ல கூட்டிட்டு வந்தேன். நீதான் தப்பாய் புரிஞ்சிகிட்டு..."

"போதும் நிரஞ்சன். சும்மா லிப்ட் கொடுத்ததுக்கா இவ்வளவு நேரம் வாதாடுறீங்க! இதுவரைக்கும் நீங்க எப்படி இருந்தீங்களோ. பட் இனிமே உங்க மனசில உங்க பார்வையில நான்... நான் மட்டும்தான் இருக்கணும். அதுல எந்த மாற்றமும் இருந்தா உங்க தங்கையோட கல்யாணத்தையே மாற்ற வேண்டியதிருக்கும். மைண்ட் இட்" என்றவாறு வேகமாய்ச் சென்று காரில் ஏற, மற்றவர்களும் மவுனமாய் ஏறிக் கொண்டதும் கார் புயலாய்ப் புறப்பட்டுப் போனது.

தாராவின் பேச்சை ஜீரணிக்க முடியாமல் உறைந்து போனான் நிரஞ்சன். நிறைமதியோ சுக்குநூறாய் உடைந்து கொண்டிருந்தாள். வளர்மதி இன்னும் கோபம் குறையாமலேயே நிற்க, செல்வகணபதி கண்களில் துளிர்த்த நீரைத் துடைத்துக் கொண்டார்.

"வாங்கம்மா போகலாம்" பிள்ளைகளை அழைத்தார்.

"எங்கேப்பா?"

"இன்னும் கொஞ்ச தூரம்தான். செங்கல்பட்டு வந்திடும். நாம இப்படி ஓரமா நடந்து போவோம். செங்கல்பட்டு பஸ் ஸ்டாண்டுக்கு போயிட்டா எப்படியும் பஸ் கிடைக்கும். வாங்கம்மா, வாய்யா" இன்னும் அதிர்ச்சியோடு நின்ற மகளையும் அணைத்துக் கொண்டார். நிரஞ்சனை நெருங்கினார்.

"தம்பி! எங்களை மன்னிச்சிடுங்க தம்பி. எங்களால உங்களுக்கு ரொம்ப சிரமமாப் போச்சு."

"ஐயோ! என்ன சார் பேசுறீங்க. என்னாலதான் உங்களுக்கு அவமானம். ச்சே! இப்படியெல்லாம் நடக்கும்னு நான் நினைக்கல்ல." வருத்தமாய் கூறினான் நிரஞ்சன்.

"பரவாயில்ல தம்பி. நாங்க புறப்படுறோம்."

"எங்கே?" பதற்றமாய்க் கேட்டான்.

"செங்கல்பட்டுக்குப் போய் பஸ் பிடிச்சு போயிடுவோம்."

"கார்ல ஏறுங்க சார். நானே ட்ராப் பண்ணிடுறேன்."

"வேண்டாம் தம்பி! அந்தப் பொண்ணு இத்தனை பேசினபிறகும் உங்ககூட நாங்க வந்தா அது... ரொம்ப... அசிங்கம்."

"சார்! அவ பேசினதுக்கு நான் உங்ககிட்ட மன்னிப்பு கேட்கிறேன். தயவு செய்து மனசில வெச்சுக்காதீங்க. ப்ளீஸ்."

அதுவரை அமைதியாய் விசும்பிக் கொண்டிருந்த நிறைமதி வெடுக்கென நிமிர்ந்தாள்.

"எதை மனசில வெச்சுக்கக் கூடாது. எங்க அப்பாவை ஏஜெண்ட்னு சொன்னாளே அதையா? இல்ல எங்களைச் சொன்னாளே

அதையா?"

"மதி... ப்ளீஸ். அவ ஏதோ பேசிட்டு போயிட்டா. நான்..."

"போதும் சார். யார் கூட வேணும்னாலும் சகவாசம் வெச்சுக்கலாம். ஆனா உங்களை மாதிரி பணக்காரங்களோட மட்டும் சகவாசம் வெச்சுக்கக் கூடாது. போதும். இனிமே எதுக்காகவும் எங்க வீட்டுப்பக்கம் நீங்க வர வேண்டாம். உங்க பொருட்கள் உங்க அட்ரசுக்கு வந்து சேரும்."

"மதி! ஏன் இப்படியெல்லாம் பேசுறீங்க. அவ பண்ணின தப்புக்கு நான் என்ன பண்ணுவேன்?"

"நீங்க ஒரே குடும்பம். அடிச்சாலும் பிடிச்சாலும் ஒண்ணா கூடிப்பீங்க. ஆனா நாங்க? எங்களால திரும்பத் திரும்ப அவமானப்பட முடியாது சார். இப்ப அவ பேசினதே எங்க ஆயுசுக்கும் மறக்காது. மேலே மேலே எங்களை கஷ்டப்படுத்தாதீங்க. வாங்கப்பா போகலாம்." விடுவிடுவென நடக்கத் துவங்கினாள் நிறைமதி. மற்றவர்களும் நடக்க ஆரம்பித்தனர்.

பின்னே ஓடி வந்தான் நிரஞ்சன். "சார்! நான் இனிமே உங்க வீட்டுக்கு வரவில்லை. ஆனா! இப்ப கார்ல ஏறுங்க. செங்கல்பட்டு வரையாவது கொண்டு போய் விட்டுடுறேன்."

வளர்மதி கும்பிடு போட்டாள். "வேண்டாம் சார். போகிற வழியில எங்காவது காரோடு நிற்கப் போகிறாள் உங்க தாரா. நீங்க கிளம்புங்க."

"என்ன வளர்! இப்படிப் பேசுற. அவ ஒண்ணும் என் தாரா இல்லை."

"அட... அப்படித்தானே சொன்னா?"

"இல்லம்மா. என் தங்கையை அவள் அண்ணனுக்குத்தான் பேசி வைத்துள்ளோம். நிச்சயம் கூட முடிந்து விட்டது. அன்று ஒருநாள்தான் இவளை நான் பார்த்தேன். மற்றபடி நீ நினைப்பது போல் எதுவுமில்லை."

"எதுவுமில்லாமலா எங்கள் மீது சேற்றை பூசினாள்? உங்களை மிரட்டிவிட்டு போகிறாள்."

"அதுதான் எனக்கும் புரியவில்லை. ஆனால்... நான்..."

"வளர்! பேசாமல் வா. உன் பேச்சு நமக்கு எதையெல்லாம் கொண்டு வரப் போகிறதோ தெரியவில்லை. என்னுடன் வா" என்றவாறு தங்கையின் கையைப் பற்றிக் கொண்டு வேகமாக சென்று விட்டாள் நிறைமதி.

அங்கேயே நின்று விட்டான் நிரஞ்சன். மனம் தவியாய் தவித்தது. 'இரண்டு வார்த்தைதானே அவள் என்னுடன் பேசினாள். அந்த இன்பத்தில் நெருப்பைக் கொட்டிவிட்டு போய்விட்டாளே இந்தத் தாரா. மொத்தக் குடும்பமும் என் மீது வெறுப்பாகிப் போனார்களே'

'தாரா... என் மதியின் கண்களில் நீரை வரவழைத்து விட்டாயே. உன்னை...' கடுப்பாய் காரில் ஏறி அமர்ந்தான்.

## 8

"அப்பா! உங்ககிட்ட கொஞ்சம் பேசணும்" என்றவாறு வந்து நின்ற மகனைப் பார்த்தார் சபேசன்.

"என்ன விஷயம்ப்பா?"

"எனக்குத் தெரியாமல் ஏதாவது



செய்யறீங்களாப்பா?" தந்தையின் முகத்தை நேராய் பார்த்துக் கேட்டான் நிரஞ்சன்.

"என்னப்பா! உனக்குத் தெரியாமலா? அப்படி ஒன்றும் செய்யவில்லையே!"

"அம்மாவையும் சேர்த்துத்தான் கேட்கிறேன்."

"வாசுகி! காபி அப்புறம் போடலாம். முதல்ல இங்கே வா" என மனைவியை அழைத்தார் சபேசன்.

"இதோ ரெடியாச்சுங்க" என்றவாறு காபியை ஆற்றியவாறே கிச்சனில் இருந்து வெளியே வந்தாள் வாசுகி.

"அட! ரஞ்சனும் வந்தாச்சா? காபி சாப்பிடுறியாப்பா?"

"ம்மா! அது இருக்கட்டும். நீங்களும் அப்பாவும் எனக்குத் தெரியாம ஏதாவது ஏற்பாடு பண்ணியிருக்கீங்களா?"

புரியாமல் கணவனைப் பார்த்தாள் வாசுகி. மீண்டும் மகனைப் பார்த்து "ஏற்பாடா? என்ன ஏற்பாடு?" எனக் கேட்டாள்.

"கல்யாண ஏற்பாடு" என்றான் இறுகிய குரலில்.

"ஓ! அதுவா. அதுதான் எப்பவோ பேசி முடிவாகிப் போச்சே."

"அம்மா! நீங்க எதைப்பத்தி பேசறீங்க?"

"சிந்துவோட கல்யாணத்தைப் பத்தி..."

"நான் கேட்கிறது அதில்ல. என் கல்யாண ஏற்பாடு ஏதாவது..."

சபேசன் நிமிர்ந்தார். "என்ன? உன் கல்யாண ஏற்பாடா? அதெப்படி உன்னைக் கேட்காமல் செய்வோம். எதுக்குப்பா இந்த சந்தேகம் உனக்கு?"


தந்தையின் வார்த்தையில் நிம்மதி உண்டாக, சோர்வாக அமர்ந்தான். மகனை பரிவோடு வருடினாள் வாசுகி.

"என்னப்பா! ஏன் முகமெல்லாம் வாடிக் கிடக்கு" என்ற தாயின் கைகளைப் பற்றிக் கொண்டான் நிரஞ்சன்.

"அம்மா! வசந்த்தோட தங்கை என்னை ரொம்ப கஷ்டப்படுத்துறாம்மா."

"யாரு? தாராவா?"

"ம். அவளோட பிஹேவியர் எதுவுமே



எனக்கு பிடிக்கல்ல. அவளோட பேச்சும் சரியில்ல. என்னை ரொம்ப ஹர்ட் பண்ணிட்டாம்மா"

"அவ ஏம்பா உன்னை தொந்தரவு பண்றா?"

"தெரியலையே. அம்மா! நிறைமதின்னு ஒரு பொண்ணு. அவளை எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கும்மா."

"அது யாருடா நிறைமதி." சபேசன் மகனை நெருங்கி அமர்ந்தார்.

"அப்பா! எல்லாம் சொல்றேன். ஆனா அதுக்கு முன்னால நான் கேட்கிறதுக்கு பதில் சொல்லுங்க. எனக்கு மனைவியாக போறவளை நான் தேர்ந்தெடுத்தா அது யாராக இருந்தாலும் ஏத்துப்பீங்களா?"

"வாழப்போறவன் நீ. உனக்குப் பிடிச்சிருந்தா போதும். அதேநேரம் நம்ம குடும்பத்துக்கு ஏத்த பொண்ணாகவும் இருக்கணும்."

"கண்டிப்பா அப்பா. அம்மா அடிக்கடி சொல்வாங்களே மகாலட்சுமி மாதிரின்னு. அந்த மாதிரி இருப்பாப்பா நிறைமதி" என்றான் பெருமையாய்.

"அப்போ பேசி முடிச்சிடலாமாங்க" வாசுகி கணவனைப் பார்த்து ஆர்வமாய்க் கேட்டாள்.

"பொறுங்கம்மா! அந்தப் பொண்ணுக்கும் என்னை பிடிக்கணுமே. அதற்குத்தான் முயற்சி செய்தேன். ஆனா இந்த தாரா இடையில புகுந்து எல்லாத்தையும் கெடுத்திட்டாம்மா. அந்த பொண்ணு குடும்பத்துல உள்ள எல்லாரையும் அசிங்கமா பேசி... என்னையும் அவங்க தப்பா..." பேசிக் கொண்டிருக்கும் போதே கோபமாய் வந்தாள் சிந்துஜா.

"அண்ணா! என்ன பண்ணித் தொலைத்தாய் நீ?"

"ஏய்! ஏன்டி இவ்வளவு கோபமா வர்றே" என்ற தாயை முறைத்தாள்.

"உங்க பிள்ளை என்ன செய்தான் என்று கேளுங்கள். வசந்தும் தாராவும் என்னை வறுத்து எடுக்கிறார்கள் போனில். அவர் ரொம்ப கோபப்படுறார் அப்பா" என்றாள் கண்களில் மின்னிய கண்ணீரோடு.

"சிந்து! அதைப் பத்திதான் சொல்லிட்டு இருக்கேன். நீயும் கேளு" என்ற நிரஞ்சனை பார்த்து கத்தினாள் சிந்துஜா.

"நான் என்ன கேட்கிறது? அவங்களே வர்றாங்களாம். அப்பா! அவங்க எல்லாரும் புறப்பட்டு வர்றாங்கப்பா."

"என்னம்மா சொல்றே?" சற்றே பதற்றமானார் சபேசன்.

"அப்பா! அண்ணன் என்ன பண்ணினான்னு தெரியாது. ஆனா அவர் அண்ணனைத்தான் குறை சொல்றார். தாராவை ரொம்ப அவமானப்படுத்திட்டானாம். தாரா ரொம்ப அழுது ஆர்ப்பாட்டம் பண்றாங்களாம்."

"சிந்து! எல்லாத் தப்பையும் செய்தது அவதான். அவளால ஒரு குடும்பமே நொந்து போச்சு தெரியுமா? என் மனசு வலிக்குது."

"அண்ணா! தாராவைப் பத்தி எனக்குத் தெரியாது. ஆனா வசந்த் தினமும் பேசும் போது நூறுவாட்டி தன் தங்கையோட பெருமையைப் பத்திதான் பேசுவாரு. இன்னிக்கு என்ன சொன்னார் தெரியுமா?" மீண்டும் கண்ணீர் துளிர்த்தது.

"மாப்பிள்ளை என்னம்மா சொன்னார்?"

"அவர் தங்கைக்கு ஒரு அவமானம் என்றால் சும்மா இருக்க மாட்டாராம். தாரா சொன்னால் கல்யாணத்தைக் கூட நிறுத்திடுவாராம்."

நிரஞ்சன் அதிர்ந்து போனான். மெல்ல எழுந்து தங்கையின் அருகே வந்தான்.

"அழாதேம்மா! உன்னை அழவைப்பாள் என்று நினைக்கவில்லை. இனி அவளிடம் எச்சரிக்கையாக நடந்து கொள்கிறேன். அவள் நிழல்கூட படாமல் விலகிப் போய் விடுகிறேன்" என்றான் மென்மையாய்.

"அண்ணா! அ... அவங்க... பேசுறதப் பார்த்தா..." தயங்கினாள்.

"என்ன? தாராகிட்ட மன்னிப்பு கேட்கணுமா நான்?"

"இல்லண்ணா. அப்படி உன்னை அடிபணிய நான் விட மாட்டேன். ஆனா அவங்க பேசுறதப் பார்த்தா உன்னை அந்த வீட்டு மாப்பிள்ளையாக்க முடிவு செய்திருக்கிற மாதிரித் தெரியுது."

"என்ன?" பெற்றவர்களோடு நிரஞ்சனும் அதிர்ந்து போனான்.

"ஆமாண்ணா. தெளிவாய்ச் சொல்லலை. ஆனா எனக்கு அப்படித்தான் தோணுது."

தவிப்பாய் தந்தையை ஏறிட்டான். "அப்பா! என்னால... முடியாதுப்பா. தயவு செய்து என்னை தவிக்க விட்டுடாதீங்க."

"பதறாதேப்பா! முதலில் அவங்க வரட்டும். பேசிக்கலாம்." சமாதானமாய்ச் சொன்னாலும், சபேசனின் குரலில் தெம்பு இல்லை. முகத்தில் குழப்பமும் சங்கடமும் சூழ்ந்து கொண்டது.

'மகளுக்கென நிச்சயம் செய்த திருமணம் மகனின் திருமணப்பேச்சால் முறிந்து விடுமோ' என அவரது மனம் அஞ்சியது. அதே சமயம் மனதிற்கு பிடித்தும் இல்லாத ஒரு பெண்ணை மகனுக்கு மணமுடித்து வைப்பதில் அவருக்கு உடன்பாடில்லை.

'பிறந்தது முதல் இதுவரை எதற்கும் ஆசைப்படாத பிள்ளை. எதைக் கேட்டும் தொல்லைப்படுத்தாத பிள்ளை. நிறைமதியை எனக்கு ரொம்ப பிடித்திருக்கிறது என்று சொல்லி வாயை மூடும்முன் இப்படி ஒரு இடையூறா? இதை எப்படி கையாளப் போகிறேன். எப்படி சமாளிக்கப் போகிறேன்.'

தனக்குள் உழன்று கொண்டிருந்தவரை வாசுகி அசைத்தாள். "என்னங்க! அவங்க வந்துட்டாங்க. வாசல்ல போய், வாங்கன்னு கூப்பிடுங்க" என உசுப்பினாள்.

"ம்? இதோ... இதோ போறேன்" என அவர் எழுந்திருக்கும் முன்பாக அவர்களே பூ, பழம் அடங்கிய தட்டோடு உள்ளே வந்தனர்.

"வாங்க! வாங்க! உட்காருங்க; எல்லோரும் சவுக்கியமா?" கணவனும் மனைவியும் பதற்றமாகவே வரவேற்றனர்.

"ம். சவுக்கியம்தான். மாப்பிள்ளை இல்லையா?" நேரிடையாக விஷயத்திற்கு வந்தார் ரத்தினபாண்டியன்.

"மாப்பிள்ளையா? யாரு?" விழித்தார் சபேசன்.

"என்ன சம்பந்தி. உங்க பையன்தான். மருமககிட்ட சொல்லியிருந்தேனே. சிந்து எங்கே?"

"இதோ வந்திட்டேன். உங்களுக்கு காபி கலந்துட்டு வந்தேன். மாமா, அத்தே எல்லோரும் நல்லா இருக்கிங்களா?"

"ம்... ம். உன் அண்ணன் எங்கே? வீட்ல இல்லையா?" கொஞ்சம் கர்வமாகவே கேட்டாள் வசந்தின் தாய் மஞ்சுளா.

"குளிச்சிட்டு இருக்கார். இப்ப வந்திடுவார். ஒன் செகண்ட்" என்றவாறு அண்ணனின் அறைக்குள் நுழைந்தாள். கோபமாய் உலவிக் கொண்டிருந்தவனை நெருங்கினாள்.

"அண்ணா! உன்னைத்தான் தேடுறாங்க."

"காதுல விழுந்தது. குளிக்கிறேன்னு சொன்னேனல்ல. வெயிட் பண்ணட்டும். குளிச்சிட்டு வர்றேன்" என்றவன் முழுதாய் அரைமணி நேரத்திற்கு பிறகே வெளியே வந்தான். "வாங்க" என்ற ஒற்றைச் சொல்லோடு தந்தையின் அருகே சென்று அமர்ந்தான்.

எதிர்சோபாவில் இருந்த தாரா நிரஞ்சனை விழியெடுக்காமல் பார்த்தாள்.

"ஹாய் நிரு! எப்படி இருக்கீங்க?" என்றாள் கொஞ்சுதலாய்.

"ம். இருக்கேன்" என்றான் அவளைப் பாராமலே.

சிந்து தாராவைப் பார்த்தாள். கழுத்து வரை இருந்த கூந்தல் காற்றிலாட, விலையுயர்ந்த பட்டுப்புடவை, அதற்கேற்ற நகைகள் என வெகு ஆடம்பரமாய் இருந்தபோதும் ஏனோ ரசிக்கும்படி இல்லை. அதீத ஒப்பனை முகம் சுளிக்க வைத்ததே தவிர மீண்டும் பார்க்கத் தூண்டவில்லை.

வாசுகியும் அதேபோல் முகத்தைச் சுளித்துக் கொண்டிருக்க, மஞ்சுளா அனைவரையும் பொதுவாய் பார்த்துக் கூறினாள்.

"இப்படியே உட்கார்ந்தா எப்படி? பேச வேண்டியதெல்லாம் நாங்க பேசிட்டோம். நீங்கதான் உங்க பையன்கிட்ட பேசணும்."

சபேசன் தயக்கமாய் மகனைப் பார்த்தார்.

"என்னப்பா? என்கிட்ட என்ன பேசணும்?"

"வந்து... அது.. சம்பந்தி... அவங்க பொண்ணை..."

"அட என் சம்பந்தி இப்படி தயங்குறீங்க? பட்டுனு சொல்ல வேண்டியதுதானே. மாப்பிள்ளை! எம் பொண்ணு தாராவுக்கு உங்களைக் கேட்டு வந்திருக்கோம். உங்களுக்கு சம்மதம்னா ரெண்டு கல்யாணத்தையும் ஒரே நாள்ல வெச்சிடலாம்னு முடிவு பண்ணியிருக்கோம். நீங்க என்ன சொல்றீங்க?" நேரிடையாக கேட்டார் ரத்தினபாண்டியன்.

சற்றே திடமாய் அவரை ஏறிட்டான் நிரஞ்சன்.

"ஸாரி அங்கிள்! எனக்கு இப்போ கல்யாணம் பண்ற ஐடியா இல்லை."

"ஏன்?"

"நான் இன்னும் கொஞ்சநாள் சுதந்திரமா இருக்கணும்னு நினைக்கிறேன்" என்றான் கடுப்பாய்.

"இதெல்லாம் ஒரு பதிலா?" சிடுசிடுத்தாள் மஞ்சுளா. வாசுகி பதற்றமாய் மகனைப் பார்க்க, அவன் துளியும் அலட்டிக் கொள்ளவில்லை.

"ஆண்ட்டி! எனக்கு கல்யாணம் பண்ண இன்னும் வயசு இருக்கு. தாராவுக்கு நல்ல இடமா அமைஞ்சா பாருங்க" அலட்சியமாக சொன்னவனிடம் எழுந்து வந்தாள் தாரா.

"அப்படியே என் அண்ணனுக்கும் வேற நல்ல இடமா பார்த்திடவா?" என்றாள் குரலில் கிண்டலோடு.

"தாரா... என்ன இது? இதென்ன பண்டமாற்று வியாபாரமா?"

"ஐ டோண்ட் கேர். பட்! எனக்கு நீங்க வேணும்."

"ஸாரி! எனக்கு இதில விருப்பமில்லை."

"ஏன் என்னை பிடிக்கலை?"

"உன்னை மட்டுமில்ல தாரா. எனக்கு வேறு எந்தப் பெண்ணையுமே பிடிக்காது."

"மண்சட்டி செய்யறவளை மட்டும்தான் பிடிக்குமோ?"

"தாரா!"

"ஷ். எனக்கு எல்லாம் தெரியும். நிரு. நான் உங்களை என் ஹஸ்பண்டுன்னு என் பிரெண்ட்ஸ் எல்லாருக்கும் அறிமுகப்படுத்திட்டேன். உங்களை அப்படித்தான் நினைக்கிறேன். என்னால இதை மாத்திக்க முடியாது. ஸோ... பிரச்சினை பண்ணாம கல்யாணத்திற்கு ஓ.கே. சொல்லுங்க" என்றாள் அலட்சியமாய்.

"என்ன மிரட்டுறியா?"

"இல்ல. உங்க நல்லதுக்குத்தான் சொல்றேன். நிரு, நீங்க எனக்கு கிடைக்க நான் என்ன வேண்டுமானாலும் செய்வேன். உங்க நிறைமதியைக் கூட இல்லாமல் பண்ண முடியும். பார்க்கிறீங்களா?"

"பாருங்கள். ஒரு பெண் மாதிரியா பேசுகிறாள்? இவளைப் போய் நான் மணப்பேன் என்று எப்படி நினைத்தீர்கள்? எந்த தைரியத்தில் தட்டைத் தூக்கிட்டு வந்தீங்க?"

"மாப்பிள்ளை! அவ செல்லமா வளர்ந்த பொண்ணு. உங்க மேல அளவு கடந்த அன்பு வெச்சிருக்கா. அதான் இப்படியெல்லாம் பேசுறா."

"ச்சீ! இதைச் சொல்ல வெட்கமா இல்லை உங்களுக்கு?" நிரஞ்சன் சீறிவிட, வசந்த் கோபமாய் எழுந்தான்.

"என்ன ரஞ்சன்? வார்த்தை தடிக்குது. ஏன் என் தங்கைக்கு என்ன குறைச்சல்."

"வசந்த்! நீங்க சிந்துவைப் பார்த்ததும் பிடித்துப் போய்தானே திருமணத்திற்கு சம்மதித்தீர்கள்?"

"யெஸ்"

"அதே மாதிரி எனக்கும் பிடிக்க வேண்டாமா?"

"நோ..." ஆங்காரமாய் கத்தினாள் தாரா. "உனக்கு பிடிக்கணும். என்னை மட்டும்தான் பிடிக்கணும்."

"பைத்தியம் மாதிரி பேசாதே. விருப்பம் என்பது தானாக வரவேண்டும்."

"வரும். தானாக வரும். முதலில் நம் திருமணம் நடந்தால் விருப்பம் தானாக வரும்" உரத்த குரலில் கூறியவளைக் கண்டு மிரண்டு போனார் சபேசன்.

"அப்பா! எனக்கு வேலையிருக்கு. நான் கிளம்புறேன்" என்றவனின் கரத்தை இறுகப் பற்றினாள் தாரா.

"நிரஞ்சன்! எப்போதுமே என்னை அலட்சியப்படுத்திக் கொண்டே இருக்கிறாய். இது உனக்கு நல்லதில்ல"

"ஏய்! முதல்ல கையை விடு."

"நான் சொல்வதை முழுதாய் கேளு. உனக்கு இன்னும் ஒரு வாரம் டைம் தர்றேன். ஏழு நாள். அதற்குள் உன் முடிவைச் சொல்ல வேண்டும்."

"எதற்கு ஏழுநாள். அதுதான் இப்போதே சொல்லிட்டேனே."

"முழுசாக் கேள் ராசா. ஏழாவது நாளுக்குள்ள உன்னோட சம்மதம் கிடைக்கலன்னா எட்டாவது நாள் என் அண்ணனுக்கு வேற ஒரு பெண்ணோட நிச்சயதார்த்தம் நடக்கும். அடுத்த நாளே கல்யாணம்."

இடிவிழுந்தது போல் அதிர்ந்து துடித்து நிமிர்ந்தாள் சிந்துஜா.

"வசந்த்! என்ன உங்க தங்கை இப்படியெல்லாம் பேசறாங்க. நீங்க ஒண்ணும் பேசாம நிற்கிறீங்க?" தடுமாறியவாறே கேட்டான்.

"நான் சொல்ல வேண்டியதைத்தான் தாரா சொல்கிறாள்" சற்றும் தயக்கமின்றி அவன் சொல்ல, நிரஞ்சனே ஆடிப் போனான். பெற்றவர்கள் மனம் துடித்து விம்ம, நிரஞ்சன் வசந்த்தை நெருங்கினான்.

"வசந்த்! இதென்ன விளையாட்டு? நிச்சயம் முடிந்து திருமணத் தேதியும் முடிவானபிறகு இப்படி பேசினால் என்ன அர்த்தம்."

"எந்த நேரமும் பெண் மாறிவிடும் என்று அர்த்தம்."

"வசந்த்! இப்படி பேச உங்களுக்கு எப்படி மனம் வந்தது? சிந்துவின் மனம் என்ன பாடுபடும் என்று யோசித்தீர்களா?"

"நீங்கள் யோசித்தீர்களா? இருபத்தினாலு மணிநேரமும் உங்களையே நினைத்துக் கொண்டிருக்கும் என் தங்கையைப் பற்றி நீங்கள் யோசித்தீர்களா?"

"வசந்த்! அது வேறு. இது வேறு."

"எனக்கு ரெண்டும் ஒன்றுதான். உங்கள் தங்கையின் கழுத்தில் என் கையால் தாலி ஏற வேண்டும் என்றால் என் தங்கையின் கழுத்தில் நீங்கள் தாலிகட்ட வேண்டும்" வசந்த்தின் குரல் உயர்ந்தது.

நம்ப முடியாமல் பார்த்தாள் சிந்துஜா.

"வசந்த்! ஊரைக் கூட்டி நிச்சயம் பண்ணியாச்சு. நீங்க இப்படி பண்ணினா அப்புறம் சிந்துவோட நிலை..." மன்றாடிக் கொண்டிருந்தான் நிரஞ்சன்.

"எந்தங்கச்சியோட கண்ணீர் உங்க தங்கை கண்ணலயும் வரட்டுமே."

"வசந்த்! சிந்து நீங்கள் விரும்பி ஏற்றப் பெண். அவள் கண்ணீர் விட்டால் உங்களுக்கு வலிக்காதா?"

"சிந்துவை எனக்கு இரண்டு மாதமாகத்தான் தெரியும். பட் எங்கூடவே பொறந்து வளர்ந்தவ என் தங்கை. அவளை அழ வைத்துவிட்டு உங்கள் தங்கையை மணக்க மாட்டேன்."

"வசந்த்! ஏன் இப்படி..."

"லுக், நிரஞ்சன். நீங்க என்ன பேசினாலும் என் முடிவை மாற்ற மாட்டேன். என்னிடம் பேசுவதை விட்டுவிட்டு உங்கள் மனதை மாற்றப் பாருங்கள். உங்கள் தங்கை மீது உண்மையான அன்பும் அக்கறையும் இருந்தால் சம்மதம் சொல்லி அனுப்புங்கள். அதுவரை என்னை சமாதானம் செய்ய முயற்சிக்க வேண்டாம். தாரா, கிளம்பலாம்" என அவன் வெளியேற, கர்வச்சிரிப்போடு தாராவும் வெளியேறினாள்.

வாசுகியும் சபேசனும் கெஞ்சிக் கொண்டே போக, தாராவின் பெற்றோர்கள் அதைக் காதிலேயே வாங்கவில்லை. நிரஞ்சன் வேதனையும் கலக்கமுமாய் தங்கையை பார்க்க, அதுவரை கண்ணீரைத் தேக்கி வைத்திருந்த சிந்துஜா, "அண்ணா" என்ற வீறிடலோடு நிரஞ்சனைக் கட்டிக் கொண்டு கதறத் துவங்கினாள்.

நிரஞ்சனின் மனம் விம்மி வெடித்துச் சிதறியது.

## 9

காலைநேர பரபரப்பில் பிஸியாக இருந்தான் கார்த்திக்.

ஓட்டலில் கூட்டம் நிறைந்திருந்தது. நோட்டுக்களை எண்ணி போட்டுக் கொண்டே இருந்தபோதும் கண்கள் மட்டும் நொடிக்கொருதரம் உள் அறையை எட்டிப் பார்த்துக் கொண்டேயிருந்தது. காலையிலே வந்த நண்பனிடமிருந்து எந்த பேச்சும் இதுவரை வராதது மனதை வாட்டிக் கொண்டேயிருந்தது.

உள் அறையில் நாற்காலியில் அமர்ந்து டேபிளின் மீது தலைசாய்த்து படுத்திருந்தான் நிரஞ்சன்.

"சார்!" என்ற குரலில் கலைந்து நிமிர்ந்தான். கடை சர்வர் நின்று கொண்டிருக்க, அவன் கையில் இருந்த பிளேட்டில் சூடாக சாப்பாடு இருந்தது.

"என்னப்பா?"

"சாப்பிடுங்க சார்"

"இல்ல... இப்ப எதுவும் வேண்டாம்."

"கண்டிப்பா சாப்பிட வையுன்னு கார்த்திக் சார் சொன்னாங்க சார்" என்றான் அவன் பவ்யமாய்.

"சரி! வெச்சிட்டு போ. நான் சாப்பிடுகிறேன்."

"சரி சார். சூடு ஆறிடுமுன்னால சாப்பிடுங்க சார்" என்றவாறே பிளேட்டை வைத்து விட்டு அவன் வெளியேற, மீண்டும் டேபிளின் மீது சாய்ந்து கொண்டான் நிரஞ்சன்.

பத்துமணிக்கு மேல் கூட்டம் குறைந்துவிட பொறுப்பை ஒருவரிடம் ஒப்படைத்துவிட்டு நண்பனிடம் சென்றான் கார்த்திக். கொண்டு வந்திருந்த சாப்பாடு அப்படியே இருக்க, நிரஞ்சனிடம் அசைவே இல்லை.

மெல்ல நண்பனை நெருங்கி அவன் தோள் மீது கை வைத்தான். சட்டென நிமிர்ந்த நிரஞ்சனின் கண்கள் கோவைப்பழமாய் சிவந்திருக்க, பதற்றமாய் நண்பனருகே அமர்ந்து கொண்டான் கார்த்திக்.

"ரஞ்சன்! ஏன் கண்ணெல்லாம் இப்படி சிவந்திருக்கு?"

"ம்ப்ச்! நான் தூங்கி எத்தனையோ நாளாச்சு" பெருமூச்சோடு சொன்னவனை வேதனையோடு பார்த்தான்.

"இப்படி எத்தனை நாள்தான் சொல்வ. உன்னையே ஏன்டா இப்படி வருத்திக்கிறே. கஷ்டமா இருக்கு ரஞ்சன்.

"நான் என்னை மட்டும் வருத்திக்கல்ல கார்த்தி. ஒரு பாவமும் அறியாத சிந்துவையும் சேர்த்து வருத்தப்பட வெச்சிட்டு இருக்கேன்."

"வசந்த்கிட்ட பேசிப் பார்த்தியா?"

"ம்ப்ச். எத்தனை முறை போன் பண்ணினாலும் எடுக்க மாட்டேங்கிறான்."

"வீட்டுக்கு போய்ப் பாரேன்."

"அவங்க எங்க வீட்டுக்கு வந்திட்டு போன மறுநாளே சிந்துவோட அழுகையை தாங்க முடியாம வசந்த் வீட்டுக்குப் போனேன்டா. அவன் இல்ல. அண்ணனும் தங்கையுமா கனடா போயிருக்காங்களாம்."

"எப்போ வருவாங்களாம்?"

"எனக்கு கொடுத்த கெடு முடியும் போது அதாவது நாளைக்கு வருவாங்களாம்"

"என்னடா பண்ணப் போறே."

"எத்தனை யோசித்தாலும் விடைதான் தெரிய மாட்டேங்குது. நான் என்னடா பண்ணட்டும்?" என பரிதாபமாய்க் கேட்டான்.

"சிந்து எப்படி இருக்கா?"

"அவளை என்னால பார்க்கவே முடியல்லடா. சாப்பிடாம தூங்காம அழுதிட்டே இருக்கா. அவளைப் பார்த்து அம்மாவும் அப்பாவும் கண்ணீர் விடுறாங்க. வீட்ல ஒரு நிமிஷம் கூட இருக்க முடியல்ல."

கார்த்திக் நிரஞ்சனை ஆழமாய்ப் பார்த்தான். "ரஞ்சன், நான் ஒண்ணு கேட்டா தப்பா எடுத்துக்க மாட்டியே?"

"கேளுடா!"

"ஏன்டா! வீட்ல உள்ள எல்லாரையும் அழவெச்சிட்டு நீ அந்த நிறைமதியை கல்யாணம் பண்ணிக்கப் போறியா?" நண்பனின் கேள்வியில் திடுக்கிட்டு நிமிர்ந்தான்.

"கார்த்தி"

"சொல்லுடா. எல்லாருமே சந்தோஷமா வாழ்த்தினா தானே நீயும் அந்தப் பொண்ணும் சந்தோஷமா வாழ முடியும்? இப்படி மத்தவங்களோட கண்ணீருக்கும் வெறுப்புக்கும் மத்தியில எப்படிடா உன்னால சந்தோஷமா வாழ முடியும்? ஒரு விஷயத்தை யோசித்தாயா? உன் தங்கை தன் வருங்கால கணவன் இவன்தான்னு தெரிஞ்சப்புறம்தானே வசந்த்தை விரும்ப ஆரம்பிச்சா. அப்ப அவ மனசு என்ன பாடுபடும்னு நினைச்சிப் பாரு."

"சிந்துவை நினைச்சுத்தான் நான் கலங்கி நிற்கிறேன் கார்த்தி."

"எத்தனை நாள் கலங்கி நிற்பே? நாளையோட அவ கொடுத்த கெடு முடியுது. நாளை மறுநாள் அவ சொன்னமாதிரியே வசந்த்துக்கு இன்னொரு பெண்ணை கட்டி வெச்சிட்டா என்ன பண்ணுவ? சிந்து என்ன செய்வா? உயிரையே விட்டுட மாட்டாளா?"

பதற்றமாய் மறுத்தான் நிரஞ்சன். "வேண்டாண்டா. அந்த வார்த்தையை மட்டும் சொல்லாதே. சிந்துவுக்கு ஒன்றென்றால்... நான்... இருக்க மாட்டேன்."

"சிந்து சந்தோஷமாக வாழ்வது உன் கையில்தான் இருக்கிறது ரஞ்சன். ஒன்றை இழந்தாத்தான் இன்னொன்றை அடைய முடியும். நீ உன் நிறைமதியை மறந்தால்தான் உன் தங்கை மனதுக்கு பிடித்தவனை மணக்க முடியும்."

"ஐயோ கார்த்தி! சிந்துவுக்காக நான் நிறைமதியை இழக்கலாம். ஆனா என்னால... அந்த தாராவை ஏத்துக்கவே முடியாதுடா. அவளைப் பார்த்தாலே எனக்கு வெறுப்பா இருக்கு. நான் எப்படி அவளை..."

"ரஞ்சன்! நேசிச்சது கிடைக்கலையேன்னு தவிக்கிறதை விட கிடைச்சதை நேசிடா. உன் வாழ்க்கை சந்தோஷமா இருக்கும்."

"சந்தோஷமான வாழ்க்கையா? எனக்கா!"

"இப்படி வெறுமையா பேசாதே. தாராவுக்கு உம்மேல அளவுக்கதிகமான பிரியம்தானே. நிச்சயமா உன்னால சந்தோஷமா வாழ முடியும். கொஞ்சநாள் போனா உனக்கும் பழகிடும். காலம் எல்லாவற்றையும் மாத்திடும்."

"மாற்றிவிடுமா? என் மனதை... அதில் குடியிருக்கும் தேவதையை... மாறாது கார்த்தி. என் மரணம் வரை மாறாது. அவள் நினைவும் மறையாது."

"ரஞ்சன். ஏன் இப்படி பேசுகிறாய்?"

"கார்த்தி! இது உண்மை. நான் தாரா கழுத்தில் தாலிகட்டும் போது பிணமாகத்தான் இருப்பேன். என்னால் ஒருபோதும் அவளுடன் வாழ முடியாது."

"ரஞ்சன்"

"டேய் கார்த்தி. உனக்குத்தான் நான் நன்றி சொல்ல வேண்டும். நீ இவ்வளவு நேரம் பேசிய பிறகுதான் எனக்கே இந்த எண்ணம் வந்திருக்கு. என்னால் யாருடைய மனதும் நோகக்கூடாது. சிந்து சந்தோஷமா வாழணும். அதுக்காக... நான் என்ன வேண்டுமானாலும் செய்வேன்" என்றவாறே எழுந்தான்.

"ரஞ்சன்! உட்காருடா. பொறுமையா இரு."

"இல்ல கார்த்தி. இதுதான் முடிவு. இதுல இனி எந்த மாற்றமும் இல்லை. நான் நேரே போய் தாராவோட அப்பாகிட்ட என் சம்மதத்தை சொல்லிடுறேன்."

"நில்லுடா. என்ன சொல்லப் போகிறாய்."

''இரண்டு திருமணத்தையும் ஒரே மேடையில் வைக்கப் போவதாகச் சொன்னார்கள். முதலில் என் தங்கையின் கழுத்தில் தாலியேறட்டும். அதைப் பார்த்துவிட்டு நான் என் முடிவை தேடிக் கொள்வேன்.''

''வேண்டாம் ரஞ்சன். கொஞ்சம் பொறுடா. வேறு ஏதாவது யோசிப்போம்.''

''வேண்டான்டா. இந்த ஆறுநாள்ல எவ்வளவோ யோசிச்சிட்டேன். எதுவுமே சரியாகல்ல. இதுதான் சரியான வழி. ஒரே வழி.''

''ரஞ்சன்! அந்தப் பொண்ணு உன் மனசில இவ்வளவு ஆழமா பதிஞ்சு போயிருப்பான்னு நினைக்கலியே நான். ரெண்டு நாள்தானேடா பேசியிருப்பே.''

''அவளை எந்த நிமிஷம் பார்த்தேனோ அப்பவே இந்த ஜென்மத்தில அவமட்டும்தான் என் லைப்னு முடிவு பண்ணிட்டேன். அவ மனசில என்ன இருக்கோ தெரியாது. ஆனா எம்மனசு பூரா அவதான் நிறைஞ்சிருக்கா. அவ நினைப்போட இன்னொருத்திய என்னால நெருங்கவும் முடியாது. நினைக்கவும் முடியாது. டயமாகுது. நான் போறேன் கார்த்தி. தேதி குறிச்சப்புறம் வர்றேன்'' என்றவாறு சரேலென அறையை விட்டு வெளியேறினான் நிரஞ்சன்.

''டேய் ரஞ்சன்... அவசரப்படாதேடா. நில்லுடா'' என பின்னாலே ஓடிவந்த கார்த்திக் அறைவாசலருகே அந்தப் பெண்ணைக் கண்டதும் நின்றான்.

''யாரு நீங்க? இங்கே ஏன் நிற்கிறீங்க?'' என்றான் சற்றே கோபமாய்.

''எம்பேர் வளர்மதி. நிறைமதியோட தங்கை'' வளர்மதி நிதானமாய் சொல்ல, திடுக்கிட்டான் கார்த்திக்.

''என்ன? நீங்க எங்கே இங்க?'' சற்றே தடுமாற்றமாய் அவன் கேட்க, கையிலிருந்த விசிட்டிங் கார்டை நீட்டினாள் வளர்மதி.

''நிரஞ்சன் சார் எம்பிராய்டரி பண்ண ஆர்டர் கொடுத்திருந்தார். வேலை முடிஞ்சது. இந்த கம்பெனிக்குத்தான் போனோம். அவர் இங்க இருக்கிறதாச் சொன்னாங்க. அதான் இங்கேயே கொண்டு வந்திட்டோம்.''

''துணியெல்லாம் எங்கே?''

''அப்பா கீழே ஆட்டோவில வெயிட் பண்றாங்க. துணி பார்சலும் அங்கேதான் இருக்கு. யாராவது ரெண்டு ஆள் அனுப்பி எடுத்துக்கிறீங்களா?''

''ஷ்யூர். அமவுண்ட் எவ்வளவுன்னு சொன்னீங்கன்னா?''

கையிலிருந்த ரசீதை நீட்டினாள். வாங்கியவன் தயக்கமாய் அவளை ஏறிட்டான்.

''நீங்க... எப்போ இங்கே வந்தீங்க?''

''இந்த ரூமுக்குள்ளே நுழையும் போது..''

''வாட்''

''ஸாரி சார். ஏதோ கஸ்டமரை கவனிக்க போறீங்கன்னு நினைச்சுத்தான் வெளியே வெயிட் பண்ணினேன்.''

''அப்போ... நாங்க பேசினது..''

''எல்லாமே காதில விழுந்தது'' உணர்ச்சியற்ற குரலில் வளர்மதி சொல்ல, கார்த்திக் தடுமாறிப் போனான்.

''வந்து... சூழ்நிலையால... நான்... அப்படி பேச வேண்டியதாகிப் போச்சு. அதோட சிந்துவும் பாவமில்லையா? ஆனா... அவன்...''

''நீங்க ஏன் சார் பதறுறீங்க. ஒரு நண்பனா நீங்க நல்ல அறிவுரையைத்தான் சொன்னீங்க. உங்க மேல எந்த தப்பும் இல்லை.''

''தேங்க்யூ. ஆனா அவன் தப்பான முடிவை எடுத்திருக்கிறான். அதை எப்படி நிறுத்தப் போகிறேன் என்றுதான் தெரியவில்லை.''

''நிரஞ்சன் சாருக்கு எதுவும் ஆகாது. அவர் நல்ல மனசு எங்களுக்கும் தெரியும். அவரைக் கடவுள் ரொம்ப சங்கடப்படுத்த மாட்டார். யார் கண்டது? அவர் மனம் போல் கூட வாழ்க்கை அமையலாம்.''

''வளர்மதி! நீங்க என்னை ரொம்ப குழப்புறீங்க.''

''கார்த்திக் சார். இது நிலைமாறும் உலகம். எப்ப வேணா எது வேணா நடக்கலாம். ஒருவேளை தாரா மனசு மாறலாம். இல்ல அவரது அண்ணன் மனசு மாறலாம்.''

''சான்ஸே இல்ல. ஒருபோதும் மாற மாட்டார்கள்.''

''ஒருவேளை சிந்துகூட தன் மனதை மாற்றிக் கொள்ளலாம். அப்படி ஏதேனும் தானாக மாற்றம் ஏற்பட்டு நிரஞ்சன் சார் மீண்டு வந்தால் அவரை என் அப்பாவிடம் வந்து பேசச் சொல்லுங்கள் சார்.''

''உண்மையாகவா? இதெல்லாம் நடக்குமா?''

''உங்கள் நண்பரின் மீது 'உங்களுக்கு இருக்கும் அக்கறை என் அக்கா மீது

எனக்கும் இருக்கிறது. நிரஞ்சன் சாரின் வேதனைகளை என் அக்காவிடமும் சில நாட்களாய் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன். இயல்பாகவே அவரை எங்கள் வீட்டில் எல்லோருக்கும் பிடிக்கும்."

"ஓ! தேங்க் காட். இது அவனுக்கே தெரியாது என்று நினைக்கிறேன்."

"சார். இப்போது எதையும் அவரிடம் சொல்ல வேண்டாம். உங்கள் மனதோடு இருக்கட்டும். ஒருவேளை நான் சொன்னதுபோல் எதுவும் நடந்து அவர் தனியே நின்றால் அப்போது சொல்லுங்கள். எங்கள் அன்றில்கள் கூட்டில் அவருக்கும் இடம் உண்டு என்று சொல்லுங்கள்."

"அதென்ன அன்றில்கள் கூடு?"

"எங்கள் வீட்டின் பெயர்."

"சூப்பர்ப். எப்படியோ என் நண்பன் சந்தோஷமாய் வாழ்ந்தால் போதும்."

"கார்த்திக் சார். எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டுமே."

"சொல்லுங்கள்... செய்கிறேன்."

"உங்களுக்கு எத்தனையோ வேலை இருக்கலாம். அதற்கு நடுவே தினம் ஒரு முறையாவது நிரஞ்சன் சாரை வீட்டில் போய் கவனித்துக் கொள்ளுங்கள்."

"கண்டிப்பாய் போகிறேன். என் உயிர் நண்பன் அவன். அவனை விட்டு விடுவேனா? இதிலிருந்து மீள நானும் ஏதாவது வழி கிடைக்கிறதா என்று பார்க்கிறேன்."

"உங்களுக்கு திருமணம் ஆகி விட்டதா?"

"இல்லை. ஏன் கேட்கிறீர்கள்?"

"உங்க மனசுல யாரேனும்..."

"நோ நோ.. நான் ரொம்ப நல்லவன் மேடம்."

"அப்போ உங்களால இந்த பிரச்சினையை சுலபமா தீர்க்க முடியும்?"

"என்னாலயா? நான் என்ன செய்ய முடியும்?"

"முடியும். சிந்துவைப் பார்த்து நாலுவார்த்தை ஆறுதலாய் பேசுங்கள். இந்த நேரம் அதுதான் முக்கியம்."

"நான் ஆறுதல் சொன்னால் பிரச்சினை சரியாகி விடுமா?"

"முயற்சி செய்து பாருங்களேன். நான் சொன்னது நடக்கும்."

அழகாய் தோளைக் குலுக்கினான். "ஓ.கே. பார்ப்போம். வாருங்கள். நிற்க வைத்தே பேசிட்டு இருக்கேனே."

**ஆப்பிளின் புதிய மினி ஐபேட்**

ஆப்பிளின் அனைத்து ஐபேட்களும் மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றுள்ளன. தற்போது, மிகவும் விலை குறைந்த சிறிய ஐபேடை வெளியிட ஆப்பிள்



"பரவாயில்ல சார். இழே அப்பா வெயிட் பண்றாங்க."

"ஓ ஸாரி ஸாரி... நண்பனின் பிரச்சினையில் நீங்கள் எதற்கு வந்தீர்கள் என்பதையே மறந்து விட்டேனே. வாருங்கள்" என கார்த்திக் முன்னே சென்று படிக்கட்டில் இறங்க, வளர்மதியும் தொடர்ந்து சென்றாள்.

அவர்கள் இருவரும் கண்ணை விட்டு மறைந்ததும் டேபிள் முன் அமர்ந்து ஆப்பிள் ஜூஸை பருகிக் கொண்டிருந்த அந்தப் பெண் தன் செல்போனை எடுத்து காதில் வைத்தாள்.

"தாரு! நான் உஷா பேசறேன். உன் ஆள் வழக்கம் போல இன்னிக்கும் வந்தார். ரொம்ப நேரம் ரெண்டு பேரும் பேசினாங்க. ஆனா என்ன பேசினாங்கன்னு கேட்கலை. ஆனா அவர் வெளியே போகும்போது தேதி குறிக்கப் போறேன். தாரா வீட்டுக்குப் போறேன்னு சொன்னாருடி."

மறுமுனையில் தாரா துள்ளினாள். "பார்த்தியா! சிங்கம் தானா வந்து வலையில விழுந்திடுச்சு. நான் யாரு?"

"முழுசாக் கேளு தாரா. அவர் போன கொஞ்ச நேரத்தில ஒரு பொண்ணு வந்தாடி. அவ யாருன்னு தெரியுமா?"

"யாரு?"

"அவதான் அன்னிக்கு ரோட்ல வெச்சு உன் கன்னத்தில அறைஞ்சாளே. இப்ப உன் வாழ்க்கையையும் கெடுத்திடுவா போலிருக்கு" என மளமளவென சொல்ல, தாராவின் பற்கள் அரைபட்டன. முகம் முழுக்க குரோதம் குடிகொண்டது. கண்களில் வெறி தோன்றி அருகே இருந்த

நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இதற்கு 'ஐபேட் மினி' என்று பெயரிட்டுள்ளது. இந்த ஆண்டு இறுதியில் இந்த ஐபேட் மினி விற்பனைக்கு வருகிறது. இதன் திரை 7 அங்குலம் இருக்கும். ரெட்டினாவுக்கு பதிலாக சார்ப் நிறுவனத்தின் டிஸ்ப்லே பயன்படுத்தப்பட்டுள்ளது.

சந்தையில் குறைந்த விலை அண்ட்ராய்ட் டேப்லட்களின் ஆதிக்கத்தை குறைக்கும் பொருட்டே இந்த ஐபேட் மினியை ஆப்பிள் நிறுவனம் வெளியிட உள்ளது. சமீபத்தில் கூகுள் நிறுவனம் குறைந்த விலையில் 'நெக்சஸ்7' என்ற டெப்லட்டை அறிமுகப்படுத்தியது என்பது குறிப்பிடத்தக்கது.

வசந்தை மிரளச் செய்தது.

## 10

அழுது சிவந்திருந்த தங்கையின் முகத்தை பரிவோடு வருடினான் நிரஞ்சன். அண்ணனைப் பார்த்ததும் எழுந்து அமர்ந்தாள் சிந்துஜா. தங்கையின் அருகே அமர்ந்து கலைந்திருந்த கூந்தலை ஒதுக்கி விட்டான்.

"சிந்தும்மா! சாப்பிட்டியாடா?"

"ம்."

"வசந்த் போன் எதுவும் பண்ணினாரா?"

'இல்லை' என்பதாய் தலையாட்டும் போதே மீண்டும் கண்ணீர் சுரந்தது.

"அழாதேடா. இனிமே நீ அழவேண்டிய அவசியமே இல்லை."

"அண்ணா."

"ஆமான்டா. நான்... நான் தாராவை மணக்க சம்மதம் சொல்லிட்டேன்."

சிந்துஜா மட்டுமில்லை அப்போதுதான் அறைக்குள் நுழைந்த வாசுகியும் கூட நம்ப முடியாமல் பார்த்தாள்.

"ரஞ்சன்! நீ என்னப்பா சொல்றே?"

"ஆமாம்மா. இப்பத்தான் தாரா வீட்டுக்கு போய் அவங்க அப்பாகிட்ட பேசிட்டு வந்தேன்."

"அவங்க என்னப்பா சொன்னாங்க?"

"அம்மா நாம நினைக்கிற மாதிரி வசந்தும் தாராவும் கனடாவுக்கெல்லாம் போகல்ல. வீட்லதான் இருந்தாங்க."

"என்ன?" அதிர்ந்து போனாள் சிந்துஜா.

"ஆமாம்மா. நான் என் முடிவைச் சொன்னவுடனே வீட்டுக்குள்ள இருந்து வந்திட்டாங்க. அவங்க எல்லாருக்கும் சந்தோஷம்மா. நாளைக்கே நம்ம வீட்டுக்கு வர்றாங்களாம்... தட்டு மாத்திட்டு நிச்சயம் பண்ண. அடுத்தவாரமே கல்யாணமாம்." முகத்தில் எந்தவித உணர்ச்சியும் இல்லாமல் மகன் சொல்ல, வாசுகியின் பெற்ற மனம் பதறியது.

"தம்பி! அப்போ... அந்தப் பொண்ணு?"

"ப்ச்! விடுங்கம்மா. அதையெல்லாம் நான் மறந்திட்டேன். இந்த நிமிஷம் எனக்கு சிந்துவோட கல்யாணம்தான் முக்கியம்."

'அண்ணன் அந்தப் பெண்ணை மறக்கவில்லை. மறக்க இயலாமல் தவிக்கிறான்' என்பதை அவனது கண்களைப் பார்த்தே கண்டு கொண்டாள் சிந்துஜா. அதோடு ஒரு வாரமாய் ஊரில் இருந்து கொண்டே தன்னிடம் ஒரு வார்த்தை கூட பேசாமல், பேச முயற்சித்த போதும் போனை எடுக்காமல் இருந்த வசந்த் மீது முதன் முறையாய் வெறுப்பு எழுந்தது.

"மாப்பிள்ளை என்னப்பா சொன்னார்?"

"இனிமே சிந்துவைக் கட்டிக்க எந்த பிராப்ளமும் இல்லைன்னு சொன்னார்" அண்ணனின் வார்த்தை மீண்டும் தாக்கியது.

'அப்படியென்றால் என்னை இழக்கவும் இன்னொரு பெண்ணை மணக்கவும் தயாராய் இருந்தாரா? இது வெறும் மிரட்டல் என்று நினைத்தேனே.'

"எல்லாரும் மரியாதையா பேசினாங்களாப்பா?"

"ம் ம்... அப்பா எங்கேம்மா?"

"வீட்ல உள்ள சங்கடம் தாங்காம திருவண்ணாமலை கோவிலுக்கு போயிருக்காங்கப்பா!"

"அவ்வளவு தூரம் ஏம்மா அனுப்புனீங்க. ஏற்கனவே அப்பாவுக்கு பி.பி. இருக்கு. இதுல நாலஞ்சு நாளா சரியா சாப்பிடவும் இல்லை."

"நீயும் சாப்பிடலையே தம்பி. சாப்பிடுறியாப்பா?"

"வேண்டாம்மா. எனக்கு பசியெல்லாம் மறந்து போச்சு." வெறுமையாய் சொன்ன மகனைக் கண்ணீரோடு பார்த்தாள்.

"தம்பி! நாங்கள்லாம் சேர்ந்து உன்னை சூழ்நிலைக் கைதியா ஆக்கிட்டோமோ. எங்களாலதான் நீ இந்த முடிவெடுத்தியா?"

"ஏம்மா, பெரிய வார்த்தையெல்லாம்

பேசுறீங்க. நமக்கு சிந்து எவ்வளவு முக்கியம். அவ அழுது என்னிக்காவது நாம பார்த்திருக்கோமா? ச்சே! என்னால... என்னாலதானே அவ இத்தனை நாள் அழுதிருக்கா. இந்த முடிவை நான் அப்பவே எடுத்திருக்கணும்."

சிந்துஜா அண்ணனையே விழிவிரிய பார்த்துக் கொண்டிருந்தாள்.

"என்ன சிந்தும்மா. அப்படிப் பார்க்கிற?"

"அண்ணா! எனக்காகவா?"

"ம்ஹூம்... அழக் கூடாது. உனக்காக அண்ணன் என்ன வேணா செய்வேன்." தங்கையின் கண்களைத் துடைத்தான்.

"நான்... நான் என்ன அண்ணா செய்யப் போகிறேன்?"

"நீ எப்பவும் சந்தோஷமா சிரிச்சிட்டே இருந்தாப் போதும். வேறென்ன வேணும் சொல்லு."

"அண்ணா! நான் வேணும்னா தாராகிட்ட பேசிப் பார்க்கவா?"

"எதைப் பத்தி."

"அந்த... நிறைமதியைப் பத்தி."

"நோ... சும்மா ஒருநாள் கார்ல வந்ததுக்கே நடுரோட்டில் நிறுத்தி அசிங்கப்படுத்தினா அவ. இதுல நீ வேறு எண்ணெயை ஊற்றி விடாதே. பாவம் மதி. அவளுக்கு இது எதுவுமே தெரிய வேண்டாம்."

"அப்போ... அவங்களை நீ பார்க்கவே இல்லையாண்ணா?"

"இல்லம்மா. நடக்காத ஒன்றுக்கு ஏன் ஆசைப்படணும். மதியைப் பார்த்தா என் உறுதி தளர்ந்திடும். கல்யாணம் வரைக்கும் நான் வீட்டை விட்டு எங்கும் போவதாக இல்லை."

"எம்பிள்ளை மனசை இப்படி பாதிச்சிருக்காளே அந்த மகாலட்சுமி. தம்பி, அவளை ஒருமுறை நான் பார்க்கணுமே."

"வேண்டாம்மா. பார்த்தா நீங்களும் மனசு கஷ்டப்படுவீங்க."

"ஏம்ப்பா!"

"இந்தப் பொண்ணையா எம்பிள்ளை இழக்கப் போகிறான்னு உன் மனசு கிடந்து தவிக்கும்மா. பார்க்க வேண்டாம்" என்றவாறு எழுந்தான்.

"எங்கேண்ணா போற?"

"என் ரூம்ல போய் ரெஸ்ட் எடுக்கிறேம்மா. ரொம்ப டயர்டா இருக்கு."

"சரிப்பா. போய் படுத்துக்கோ."

"அம்மா! என்னை தேடி யாரும் வந்தா எழுப்ப வேண்டாம்" என்றவாறு அவன் விலகிச் சென்றதும் சிந்துஜாவின் செல்போன் சிணுங்கியது. எடுத்துப் பார்த்தாள்.

"யாருடி போன்ல?" ஆர்வமாய்க் கேட்டாள் வாசுகி.

"வசந்த்" என்றாள் மரத்த குரலில்.

"மாப்பிள்ளைன்னு சொல்லு. சரி நீ பேசு" அம்மா நாகரீகம் கருதி அறையை விட்டு வெளியேற, போனை காதிற்குக் கொடுத்தாள்.

"ஹலோ"

"ஹாய் சிந்து! ஹவ் ஆர் யூ?" உற்சாகமாய் பேசினான் வசந்த்.

"ம். கனடா போயிட்டு எப்போ வந்தீங்க? என்ன திடீர்னு போன்?"

"உன் அண்ணன் ஓ.கே. சொல்லிட்டாரு சிந்து. இனிமே நான் உனக்குத்தான்."

"அப்படின்னா?"

"இல்லன்னா... இன்னும் ரெண்டு நாள்ல பிரியாவோட கைக்கு போயிருப்பேன்."

"பிரியாவா? அது யாரு?"

"தாரா எனக்கு பார்த்து வெச்சிருந்த பொண்ணு" தயங்காமல் சொன்னான்.

"ஓஹோ! பொண்ணெல்லாம் பார்த்தாச்சா?"

"பின்னே! என் தங்கை ஒரு விஷயத்தை செய்யணும்னு நினைச்சா யார் தடுத்தாலும் நிறுத்த மாட்டா! இப்போ உனக்கே தெரிஞ்சிருக்குமே."

"அப்போ என் அண்ணன் மறுத்திருந்தா நீங்க அந்த பிரியாவை கல்யாணம் பண்ணியிருப்பீங்க?"

"ஹேய் சிந்து... இப்ப ஏன் அந்த பேச்செல்லாம்?"

"மிஸ்டர் வசந்த். எனக்குத் தெரிஞ்சாகணும். பதில் சொல்லுங்க."

"என்ன சிந்து. ஒரு மாதிரி பேசுற."

"நீங்கள்லாம் ஒரு மாதிரி நடந்துக்கும் போது நான் ஒரு மாதிரி பேசக்கூடாதா?"

"சிந்து!"

"சத்தம் போடாதீங்க. உங்க தங்கை புத்திதானே உங்களுக்கும் இருக்கும் நல்லகாலம் இதெல்லாம் கல்யாணத்திற்கு முன் நடந்து விட்டது. நான் தப்பித்தேன்."

"என்ன சொல்ற சிந்து?"

"ஆமா! கல்யாணம் முடிந்த பிறகு உங்க தங்கை இப்படிப் பேசியிருந்தா என்னை வீட்டை விட்டு விரட்டி இருப்பீங்கதானே.

"சிந்து! நான் எவ்வளவு ஆசையா போன் பண்ணினேன். நீ ஏன் வேண்டாத கதையெல்லாம் பேசுற?"

"ஸாரி சார். நான் ஒண்ணும் உங்க ஆசைநாயகி இல்லை."

"சிந்து! என்ன பேசுற நீ?" வசந்த் சற்றே கோபமானான்.

"மிஸ்டர் வசந்த். அந்த பிரியாவை என்ன செய்யப் போகிறீர்கள்?"

"ஏன்? இனிமேல் அவ எதற்கு?"

"அப்படிச் சொல்லாதீர்கள். அநேகமா அந்த பிரியாதான் உங்களுக்கு மனைவியாவாள் என்று நினைக்கிறேன்."

"சிந்து! என்ன நீ, பைத்தியக்காரத் தனமாய் பேசுற?"

"வேணும்னா எடுத்துக்கிறதுக்கும், வேண்டாம்னா வெளியே வீசியெறியவும் நான் ஒண்ணும் உங்க வீட்டு துடைப்பக்கட்டை இல்லை. ஸாரி, எனக்கு இந்தக் கல்யாணத்தில் விருப்பம் இல்லை."

"ஏய்! என்ன சொல்கிறாய் நீ!"

"ஏன் தமிழ்லதானே சொன்னேன்."

"சிந்து! நமக்கு ஊரறிய நிச்சயமாகி விட்டது."

"ஓ. அது இப்போதுதான் நினைவு வந்ததா?"

"நிச்சயமான ஒரு பெண்ணிற்கு வேறு மாப்பிள்ளை எப்படி கிடைப்பான்?"

"ஏன் கிடைக்க மாட்டான்? உங்களுக்கு ஒரு பெண் கிடைக்கும்போது எனக்கு ஒரு மாப்பிள்ளை கிடைக்க மாட்டானா?" கோபமாய் சிந்துஜா கேட்டுக் கொண்டிருக்கும் போது வீட்டினுள் அந்தக் கார் நுழைந்து நின்றது.

காரை விட்டு இறங்கிய கார்த்திக் சிந்துஜாவை பார்த்துவிட்டு மென்மையான புன்னகையோடு அவளை நோக்கி வந்தான்.

## டோல் சிறுமி!

பஞ்சாப் மாநிலம் சண்டிகாரில் வசிப்பவள் ஜகன் கீத் சிங். 14 வயது சிறுமி. 9-ம் வகுப்பு படிக்கிறாள். டோல் வாசிப்பதில் கைதேர்ந்தவர் இவர். விளையாட்டாக டோலை வாசிக்கக் கற்றுக் கொண்டவளுக்கு இப்போது அதுவே ஒரு பொழுதுபோக்காக ஆகிவிட்டது. இவர் டோல் வாசிப்பதை கேட்கும் பஞ்சாபியர்கள் மெய்மறந்து விடுகிறார்கள். இத்தனைக்கும் டோலை ஆண்கள் தான் பெரும்பாலும் வாசிப்பார்கள். பெண்களுக்கு இந்த வித்தை தெரியாது. ஆனால், ஜகன் கீத் சிங் இதற்கு விதிவிலக்கு ஆகியிருக்கிறாள்.



முகலாய மன்னர்களின் படையெடுப்பின் போது டோல் இசைக்கப்படும். பிறகு அதுவே பழக்கமாகி பஞ்சாபியர்களின் கலாச்சாரத்தோடு இரண்டற கலந்து விட்டது. இப்போதெல்லாம் பஞ்சாபிய குடும்பங்களில் குழந்தை பிறக்கும் போதும், திருமணங்கள் நடைபெறும் போதும், மற்ற நிகழ்ச்சிகளின் போதும் டோல் வாசிக்கப்படுகிறது. பஞ்சாபியர்களின் கிராமிய கலையாகவும், கலாச்சாரத்தின் வெளிப்பாடாகவும் டோல் விளங்குகிறது.

பல்வேறு இசைகளில் தன்னால் டோல் வாசிக்க முடியும் என்று சொல்லும் ஜகன் கீத் சிங்கை அவளது பெற்றோரான ஹர்சரண் சிங், பர்மீந்தர் கவுர் இருவரும் உற்சாகப்படுத்தி வருகிறார்கள். டோல் வாசிப்பதில் பல்வேறு பரிசுகளை வென்றுள்ள இந்தச் சிறுமி, கிராமிய கலைஞர்களுடன் இணைந்து இப்போது டோல் வாசிக்கிறார். இது தனக்கு புது அனுபவமாகவும், உற்சாகமாகவும் இருப்பதாக கூறுகிறார் ஜகன் கீத் சிங்.

## 11

சூரியன் தன் கோபத்தையெல்லாம் வெயிலாய் தகித்துக் கொண்டிருக்க, சிமெண்ட் தரையில் அமர்ந்து, வெயிலை பொருட்படுத்தாமல் வரிசையாய் மண்ணால் செய்யப்பட்டிருந்த பூக்குவளைகளை காயவைத்துக் கொண்டிருந்தாள் வளர்மதி.

அவள் அருகே அமர்ந்து குவளையின் உடம்பில் வண்ணமயமாக பூக்களை வரைந்துக் கொண்டிருந்தாள் நிறைமதி. வீட்டின் பின்புறமாய் செல்வகணபதி

மண்பாண்டங்களை செய்து கொண்டிருந்தார்.

வேப்பமரத்தில் கூடியிருந்த சில சிட்டுக்குருவிகள் சுவரோரமாய் இருந்த தண்ணீர் தொட்டியில் தங்களது குட்டி அலகுகளால் நீரை அருந்திக் கொண்டிருக்க, அவற்றின் சலசலப்பில் நிமிர்ந்தாள் நிறைமதி.

"வளர்! குருவிக்கு பாத்திரத்தில தண்ணி இல்லையா? கொஞ்சம் ஊற்றி வையேன்."

"காலையிலேயே அப்பா ஊற்றியதை காக்கா தட்டிவிட்டிருச்சு. பேசாம இந்த பெரிய மனுஷங்க எல்லாம் தொட்டியிலயே குடிக்கட்டும்."

"பாவம்டி. சின்னக்குருவியில்ல. தவறி தண்ணியில விழுந்திடப் போகுது."

"ம்க்கும். இதுக்கெல்லாம் பாவம் பாரு. மத்ததையெல்லாம் விட்டுடு."

"என்னடி சொல்ற?"

"பின்னே! நேத்து முழுக்க ஓதினேனே. காதுல விழலே இல்லையா?"

"வளர், நீ சின்னப் பொண்ணு. இதையெல்லாம் பேசக் கூடாது. யாரோ யாரையோ கட்டிட்டு போகட்டுமே. நமக்கென்னடி?"

"எங்கே என் முகத்தைப் பார்த்துச் சொல்லு" அக்காவின் முகத்தை நிமிர்த்தினாள் வளர்மதி. மூத்தவளின் கண்கள் லேசாய் கலங்கியிருந்தது.

"நமக்கு அவர் வேண்டாம்டி வளர். பாவம். ஒருநாள் கார்ல இடம் தந்ததுக்கே நடுரோட்டுல அவர் சட்டையெல்லாம் பிடிச்சு இழுத்து அசிங்கப்படுத்தினா. நம்மை எவ்வளவு கேவலமா பேசினா. கேட்டே இல்ல."

"அக்கா! அதுக்கும் அவருக்கும் என்னக்கா சம்பந்தம்?"

"சம்பந்தம் இருக்குடி. அவங்க பெண் கொடுத்து பெண் எடுக்கிறதாச் சொன்னியே. இவர் அவளை கட்டிகிட்டு சந்தோஷமா வாழ்ந்தாத்தானே இவர் தங்கை சந்தோஷமா வாழ முடியும்?"

"அதெல்லாம் சரிக்கா. இப்ப என் கேள்விக்கு பதில் சொல்லு. ஒரு வேளை பிரச்சினை எல்லாம் சரியாகி அவர் உன்னைக் கேட்டு வந்தால் நீ என்ன சொல்லுவ?"

"தப்புடி. அடுத்தவளுக்குன்னு முடிவான ஒருத்தரை நாம நமக்கு கிடைக்கணும்னு எதிர்பார்க்கவே கூடாது."

"அக்கா! உம்மனசைத் தொட்டுச் சொல்லு. தாராவோட அவர் கல்யாணம் நடந்தா எப்படி இருக்கும்?"

நிறைமதியின் முகம் மாறியது. தாடகை மாதிரி ஆடிய தாராவின் முகமும், இளம் புன்னகையோடு தெரிந்த நிரஞ்சனின் முகமும் கண்முன்னே வந்து போனது. வருத்தமாய் தங்கையை ஏறிட்டாள்.

"நன்றாக இருக்காதுதான். ஆனால் நாம் என்ன செய்ய முடியும்?"

"முடியும். உன்னைக் கட்டிக் கொண்டால் அவர் எப்போதும் சந்தோஷமாக இருப்பார். நீயும் தனியே போய் அழ மாட்டாய். உன்னைப் பார்த்து நானும் சந்தருடம் கூட அழ மாட்டோம்."

"நான்... நான் அழுதேனா? எ... எப்போ?"

"போதுங்கா. உன்னையே ஏன் ஏமாற்றிக் கொள்கிறாய். கார்த்திக் சாரிடம் சொல்லிவிட்டு வந்திருக்கேன்."

"என்ன சொன்னாய்?"

"நிரஞ்சன் சாரை நம்ம அப்பாவிடம் வந்து பேசச் சொன்னேன்."

"எதுக்கு?"

"ம்? உன் தலையில உள்ள களிமண்ணையும் எடுத்து பூச்சாடி செய்யறதுக்கு."

"ஏய்..."

"பின்னே! ஒருவாட்டி சொன்னா புரியாதா?"

"உனக்கு புரிஞ்சுதாடி" என ஒலித்த கர்ணகொடூரமான குரலில் இருவரும் மிரண்டு திரும்பினர். இடுப்பில் கைகளை ஊன்றியவாறே நின்ற தாராவையும் அவளுக்கு பின்னே நின்ற மூன்று ரவுடிகளைப் பார்த்து பதற்றமாய் எழுந்து நின்றனர்.

"ஏன்டி நாயே. எம்மேல கைவெச்ச அன்னைக்கே உன்னை தூக்கியிருக்கணும். போனா போகுதுன்னு விட்டேனே... அது பெரிய தப்பு."

"ஏய்! வாயை மூடு. எதுக்குடி எங்க வீட்டுக்கு வந்தே" என முன்னே வந்த வளர்மதியின் நீட்டிய வலக்கையை பற்றி பின்புறமாய் திருப்பினாள் தாரா.

வலி தாளாமல் "அப்பா" என வீறிட, சத்தம் கேட்டு மண்பிசைந்த கையோடு ஓடி வந்தார் செல்வகணபதி. நிறைமதி தாராவிடமிருந்து தன் தங்கையை விடுவிக்க முயல, அவளை எட்டி உதைத்தாள் தாரா. பூக்குவளைகள் மேல் போய் விழுந்தாள் நிறைமதி.

வளர்மதி இன்னமும் வலியால் துடித்துக் கொண்டிருக்க, செல்வகணபதி பதறினார். "அம்மா! எம்புள்ளை கைய விடும்மா. எம்புள்ளைங்க என்னம்மா பாவம் பண்ணினாங்க. நீ யாரும்மா? கைய விடும்மா முதல்ல" என வளர்மதியை விலக்கி தன்னோடு அணைத்துக் கொண்டார்.

அதற்குள் வலது கை எலும்பு முறிந்து தொய்ந்து விழ, வீறிட்டுக் கத்திய வளர்மதியின் குரலில் அக்கம்பக்கத்தவர் கூட ஆரம்பித்தனர்.

"ஹேய்! யாரும் பக்கத்தில வரக்கூடாது. வந்தா சீவிடுவோம்" என மூவரும் கத்தியைக் காட்ட, மற்றவர்கள் பயந்து உறைந்து நின்றனர். செல்வகணபதி மகளின் கையைப் பார்த்து கதறினார்.

"ஐயோ! பாவி! பாதகி! எம்புள்ளை கைய உடைச்சிட்டாளே. இன்னொரு வீட்ல போய் வாழப்போற பொண்ணை ஊனமாக்கிட்டாளே. நான் என்ன பண்ணுவேன்" துடித்தார்.

கீழே விழுந்து எழுந்து வந்த நிறைமதியின் கூந்தலைக் கொத்தாய் பற்றினாள் தாரா. "ஏன்டி, பிச்சைக்காரிங்களா? உங்களுக்கு சொகுசு வாழ்க்கை கேட்குதோ. அதுவும் என் நிரு கூட. எத்தனை நெஞ்சழுத்தம்டி. நானே அந்த ஆளை மிரட்டி உருட்டி ஒரு வழியா சம்மதிக்க வெச்சிருக்கேன். நீ உன் தங்கையை தூது அனுப்பி அவர் மனசை கலைக்க பார்த்தியா? அவர் தங்கையோட மனசையும் மாத்துனீங்களா?"

"தாரா, அப்படி எதுவுமே நடக்கல்ல. எங்களை விட்டுடு. நாங்க எப்பவுமே உன் வழிக்கு வரமாட்டோம். அவங்க யாரையுமே நாங்க பார்க்கல்ல."

"உயிரோடு இருந்தாத்தானேடி வருவீங்க. இன்னிக்கே உன் மொத்த குடும்பத்தையும் அழிச்சிடுறேன்."

"இல்ல தாரா. நீ நினைக்கிற மாதிரி எதுவுமே நடக்கல. நாங்க எந்தத் தப்பும் பண்ணல்ல. இப்படி அசிங்கப்படுத்தாதே. எல்லோரும் பார்க்கிறாங்க தாரா."

"பார்க்கட்டுமேடி. உங்க லட்சணத்தை ஊரே பார்க்கட்டுமே"

"அப்படியென்னடியம்மா இந்த புள்ளைங்க தப்பு பண்ணிச்சு. இப்படி இரக்கமில்லாமே அட்டூழியம் பண்றியே." பக்கத்து வீட்டு மாமி கேட்டதும் ஆத்திரமாய்த் திரும்பினாள்.

"மாமியா? ஏன் மாமி உங்காத்து பொண்ணுக்கு பார்த்து வெச்சிருக்கிற மாப்பிள்ளைய இவ இழுத்திட்டு ஓடினா சும்மா இருப்பேளா?"

"சிவ சிவா" காதை மூடிக் கொண்டாள் மாமி.

"ம். அப்படி பொத்திண்டு போங்க. ஏய் தர்மா. இந்த மூணு நாய்களையும் வீட்ல போட்டு பூட்டி வீட்டுக்கு தீ வையுங்கடா. என் கண்முன்னே இவளுங்க எரியணும். இந்த வாயாடியோட மரண ஓலத்தை நான் கேட்கணும்."

செல்வகணபதி வெகுண்டெழுந்தார். "இதோ பாரும்மா. வயசுப் பொண்ணாச்சேன்னு பார்க்கிறேன்."

"இல்லன்னா என்னய்யா பண்ணுவே?"

"இது மண்பானை செய்யற கை. மண்ணை மிதிச்ச காலு. கால்ல போட்டு மிதிச்சே கொன்னுடுவேன்."

"டேய் தடிமாடுங்களா, ஒரு கிழட்டுப் பய வசனம் பேசிட்டு இருக்கான். நீங்க வேடிக்கைப் பார்த்திட்டு இருக்கீங்களா? கத்தி எதுக்கு பிலிம் காட்டவா கொண்டு வந்தீங்க? கிழவனோட ரத்தம் என்ன கலர்ல இருக்கு பார்ப்போம். ஒரு கோடு போடுங்கடா" தாரா ஆவேசமாய்ச் சொல்ல, கனத்த உடம்போடு இருந்தவன் செல்வகணபதியை நெருங்க, அதுவரை தாராவின் பிடியில் நடுங்கிய நிறைமதி தாராவை உதறித் தள்ளிவிட்டு, அவனை ஒரே தள்ளில் கீழே சாய்த்தாள்.

ஓடிச் சென்று தோட்ட வேலை செய்வதற்கென்று அப்பா வைத்திருந்த இரும்பு தடியை எடுத்து வந்தாள்.

"இதோ பாரு! அவருக்கும் எங்களுக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. நீயா ஏதாவது கற்பனை பண்ணிகிட்டு எங்களை இம்சிக்காதே. எவனாவது எங்களை நெருங்கினா ஒரே போடு. தலை ரெண்டா பொளந்திடும். போடி... போடி வெளியே" தடியை ஓங்கியவாறே முன்னேறியவளைக் கண்டு துணுக்குற்றாள் தாரா.

"அப்பா! இவளை நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்க வளரை ஹாஸ்பிடல் கூட்டிட்டு போங்க. போங்கப்பா..." கத்தினாள்.

"உன்னை எப்படிம்மா தனியா விட்டுட்டு..."

"நீங்க போங்கப்பா. என்னைக் காப்பாத்திக்க எனக்குத் தெரியும். ம்... போங்க"

அதற்குள் நான்கு பேர் ஆட்டோவை அழைத்துவர, வளர்மதியை கைத்தாங்கலாய் அழைத்து ஏற்ற, தயக்கமாய் நின்ற தந்தையை

மீண்டும் அதட்டி ஏற வைத்தாள்.

ஆட்டோ புறப்பட்டுப் போனதும் தாராவிடம் திரும்பினாள். "நீயெல்லாம் பொம்பளையாடி. உன் அன்பால அவரை விரும்ப வெக்காம எங்களை மிரட்ட வந்திட்டியாக்கும். போடி. போய் அவர் மனசு கோணாம நடந்துக்க."

தாரா சிலிர்த்து நிமிர்ந்தாள். "ஏய்! பூனை மாதிரி இருந்துகிட்டு என்னையே மிரட்டுறியா? எனக்கு தெரியும்டி. நிரு என்னை மறுக்க நீதான் காரணம். ஊமை மாதிரி இருந்துகிட்டு என் நிருவை மயக்கிட்டியா?"

"நிறுத்துடி. சும்மா சொன்னதையே சொல்லாதே. என் தங்கை கையை உடைத்ததற்கே உன் எலும்பை முறித்திருப்பேன். உன்னால் அவரது தங்கை திருமணம் தடைபடக் கூடாது என்றுதான் உன்னை விடுகிறேன். ஓடிப் போயிடு."

"டேய், தண்டச்சோறுங்களா! ஒரு பொட்டச்சி இவ்வளவு வீரவசனம் பேசிட்டு இருக்கா. என்னடா பண்ணிட்டு இருக்கீங்க." தாரா கத்திக் கொண்டு இருக்கும்போதே மாமி தன் கணவனை உசுப்பினாள்.

"ஏன்னா! இவ மதியை என்னவோ பண்ணிடப் போறா. பேசாம போலீசுக்கு போன் பண்ணுங்கோ."

"குழந்தையைப் பார்த்துக்கோ. நான் ஆத்துல போய் போன் பண்றேன்" என்றவாறு அவர் தன் வீட்டினுள் நுழைந்தார்.

ஆட்டோவிற்குள் கை வலியால் துடித்துக் கொண்டிருந்த வளர்மதி, "டிரைவரண்ணே. அவசரமா ஒரு போன் பண்ணணும். ஏதாவது கடையில போன் இருந்தா நிறுத்துங்களேன்" என்றாள்.

"இந்தாங்கம்மா. என் செல்லுல பேசுங்க" என அவர் தன் போனைக் கொடுக்க நன்றியோடு வாங்கி நிரஞ்சனின் நம்பரை நினைவுபடுத்திக் கொண்டு எண்களை அழுத்தினாள்.

"யாருக்கும்மா போன் பண்றே?" செல்வகணபதி தவிப்போடு கேட்டார்.

"நிரஞ்சன் சாருக்குப்பா..."

"அவருக்கா? வருவாரா?"

"வருவாருப்பா. கண்டிப்பா வருவார்" என்றவாறே போனை காதில் வைத்தாள்.

வெகுநேரம் பெல் அடித்துக் கொண்டே இருந்தது. மீண்டும் முயற்சித்தாள்.

நான்காவது முறையாக போன் எடுக்கப்பட்டு, "ஹலோ" என்று நிரஞ்சனின் குரல் கேட்டது.

"சார்... நான் வளர்மதி பேசுறேன்."

"வளர்! நீங்களா? என்ன விஷயம். என்ன திடீர்னு போன் பண்றீங்க!" பதற்றமாய்க் கேட்டான்.

"சார்! நீங்க எங்க இருந்தாலும் உடனே எங்க வீட்டுக்குப் போங்க. அக்காவுக்கு ஆபத்து. உடனே போங்க."

"வளர்! என்ன சொல்றீங்க?"

"பேச நேரமில்ல சார்! தாரா ரவுடிங்களைக் கூட்டிட்டு எங்க வீட்ல வந்து தகராறு பண்ணிட்டு இருக்கா. என் கை உடைஞ்சு போச்சு. நானும் அப்பாவும் ஹாஸ்பிடலுக்கு போயிட்டு இருக்கோம். உடனே போங்க. அக்கா தனியா இருக்கா."

"இதோ இப்பவே போறேன்" போனை வைத்தவன் கத்தினான்.

"அம்மா!"

"என்னடா?" என ஓடி வந்தாள் வாசுகி.

"தாரா மதியோட வீட்ல போய் தகராறு பண்றாளாம். நான் உடனே போகணும். வசந்த் வீட்ல உள்ளவங்க வந்தா சொல்லிடுங்க" என ஓட்டமாய் காரில் ஏறினான். சிந்துஜா கூடவே ஓடி வந்தாள்.

"அண்ணா! நானும் வர்றேனே."

"நீ எதுக்கும்மா?"

"நான் என் அண்ணியைப் பார்க்கணும்"

"என்ன?" ஆனந்த அதிர்வோடு நிமிர்ந்தான்.

"அண்ணா! உன் உயிரைப் பறிச்சிட்டு நான் வசந்த் கூட வாழ வேண்டாம்ண்ணா. அப்படி வாழ்வதை விட உன் தங்கையாகவே கடைசி வரை வாழ்ந்திட்டு போயிடுறேன்."

"என்னம்மா! அதுக்காகவா நான் இவ்வளவு கஷ்டப்பட்டேன். நீ சந்தோஷமா வாழுறதை நாங்க பார்க்க வேண்டாமா?"

"அண்ணா! அதையெல்லாம் பிறகு பார்க்கலாம். சீக்கிரம் காரை எடுங்க."

"ரஞ்சன்! நானும் வர்றேம்பா. எனக்கு பதற்றமாவே இருக்கு. இந்த தாரா ஏன் அங்கே போனா?" என்றவாறே வாசுகியும் காரில் ஏற, கார் சீறிப் பாய்ந்து வெளியேறியது.

எதிரே வந்த வசந்த்தின் காரில் இருந்த பெற்றோர்கள் "நம்மை வரச் சொல்லி விட்டு எங்கே போறாங்க? காரை திருப்பு வசந்த்" என்றதும் காரை திருப்பினான் வசந்த்.

## 12

வாகன நெரிசலில் கார் திக்கி திணற, அதைவிடவும் திணறிப் போனான் நிரஞ்சன். இந்த நெரிசலில் நீந்தி எத்தனை மணிக்கு நிறைமதி வீட்டை போய்ச் சேர முடியும். அதற்குள் என்னவெல்லாம் நிகழ்ந்து விடுமோ. நிறைமதி தனியாக தாராவிடம் மாட்டிக் கொண்டு என்ன பாடுபடுகிறாளோ என்ற எண்ணம் தோன்றியபோதே கண்கள் குளமாகியது.

சிந்து பதற்றமாய் அண்ணனின் தோளில் கைவைத்தாள்.

"அண்ணா! ஏண்ணா கண் கலங்குது. தாரா மட்டும்தானே போயிருக்கா?"

"இல்லம்மா. ரவுடிங்களோட போயிருக்காளாம். வளர்மதியோட கையை உடைச்சிருக்கா. இப்போ வளரை ஹாஸ்பிடலுக்கு கூட்டிட்டு போறாங்களாம்."

"ஐயோ! அப்போ வீட்ல வேற யார் இருக்காங்களாம்?"

"சுந்தர் ஸ்கூலுக்கு போயிருப்பான். நிறைமதி மட்டும் தனியா மாட்டிட்டு இருக்காளாம். ட்ராபிக் வேற ஹெவியா இருக்கே."

வாசுகி இன்னும் பதறிப் போனாள். "ரஞ்சன்... வேற ஏதாவது செய்யுப்பா. நாம போறதுக்குள்ள அந்தப் பொண்ணுக்கு ஏதும் ஆயிடப் போகுது."

"நானும் அதை நினைச்சுத்தான் பயப்படறேம்மா. வளர்மதிதான் கொஞ்சம் தைரியமான பொண்ணு. அவளையே அடிச்சு காயப்படுத்தினவ என் மதியை என்னவெல்லாம் பண்ணியிருப்பாளோ. பாவம்மா அவ. அதிர்ந்து கூட பேசத் தெரியாது."

"அண்ணா! ட்ராபிக் கிளியராகுது பார். நீ காரை எடு. ஏதாவது யோசிக்கலாம்" அவசரப்படுத்தினாள் சிந்துஜா.

நிரஞ்சன் காரை எடுத்து கிடைத்த இடைவெளிகளில் காரை நுழைத்து பிரதான சாலையில் சீறிப் பாய்ந்து கொண்டிருந்த போது உற்சாகமாய் குரல் கொடுத்தாள் சிந்துஜா.

"அண்ணா! ஒரு ஐடியா."

"என்ன? சீக்கிரம் சொல்லு"

"எங்கிட்ட தாராவோட செல் நம்பர் இருக்கு. நீ போன் பண்ணி அவகிட்ட ஏதாவது பேசி அவளை டைவர்ட் பண்ணிடு. நாம அதுக்குள்ள அங்கே போயிடலாம்."

"வாவ்! குட் ஐடியா சிந்து. கமான். சீக்கிரமா போன் பண்ணிக் கொடு."

"என் போன்ல பேசினா டவுட் ஆகிடுவா. உன் போனைக் கொடு. நான் டயல் பண்ணித் தர்றேன்" என்றவாறு நிரஞ்சனின் சட்டைப்பையிலுள் கையை விட்டு போனை எடுத்த நேரம் அதுவே சிணுங்கி அழைத்தது.

"அண்ணா! கார்த்திக் பண்றார்."

"கொடு." அவசரமாய் வாங்கி காதில் வைத்தான் நிரஞ்சன்.

"சொல்லு கார்த்தி."

"ரஞ்சன். நான் இங்க ஒரு கல்யாணத்திற்காக மயிலாப்பூர் வரை வந்தேன். கொஞ்சம் லேட்டாகிப் போச்சு. நீ கொஞ்சம் நம்ம ஓட்டலை பார்த்திட்டு இருக்கியா. நான் இன்னும் ஒன் அவர்ல வந்திருவேன்."

"கார்த்தி! கார்த்தி நீ இப்போ எங்கே இருக்கே?" பதற்றமாய்க் கேட்டான்.

"மயிலாப்பூர்ல! ஏன்டா?"

"நண்பா, இப்போதைக்கு என் கடவுள் நீதான்."

"டேய்... என்னடா பெரிய வார்த்தையெல்லாம் பேசுற."

"உண்மைதான்டா கார்த்தி. வெகு அவசரம். நான் சொல்ற அட்ரசுக்கு உடனே போ. கேள்விக் கேட்காதே.

"சரிடா. எங்கே போகணும்."

"தெப்பக்குளம் பக்கத்தில ஒரு பார்க் வரும். அதுல ரைட்ல கட் பண்ணி போனா ஒரு குறுகலான சந்து வரும். அதுல நாலாவது வீடு. பச்சை கலர் பெயிண்ட் அடிச்சிருக்கும். அன்றில்கள் குடில்னு பேர் போட்டிருக்கும்."

"அட! அது உன் ஆள் வீடு. அங்கே நான் ஏன்டா போகணும்."

"கார்த்தி... மதிக்கு ஆபத்து. தாரா இப்போ அங்கேதான் ரவுடிங்களோட இருக்கா. நீ உடனே போ."

"ரஞ்சன்... நீ என்ன சொல்றே" கார்த்திக் கலவரமானான்.

"ப்ளீஸ் கார்த்தி, நீ உடனே போ. நானும் அங்கேதான் வந்திட்டு இருக்கேன். நீ சீக்கிரம் போயிடுவியா?"

"இதோ. பத்தே நிமிஷத்துல அங்கே இருப்பேன். நீ போனை வை." என்றவாறு போனை கட் பண்ணினான் கார்த்திக்.

ஒருவித நிம்மதி மூச்சோடு போனை அணைத்தான். அவன் பேசியதைக் கேட்ட சிந்து மீண்டும் பரபரத்தாள்.

"அண்ணா! போனைக் கொடு. கார்த்திக் போறதுக்குள்ள நீ தாராவை ஏதாவது பேசி திசை திருப்பு" என்றவாறு தாராவின் நம்பரை அழுத்தி அண்ணனின் காதில் வைத்தாள்.

"ரிங் போகுது. நீ பேசுண்ணா. நான் போனை பிடிச்சுக்கிறேன்."

வாசுகி ஊரில் உள்ள தெய்வங்களையெல்லாம் வேண்டிக் கொண்டே வர, சற்று பின்னால் வசந்த் கார் தொடர்ந்து கொண்டிருந்தது.

"வசந்த்! நீ பேசும் போது சம்பந்தியம்மா என்னடா சொன்னாங்க?"

ரத்தினபாண்டியன் கேட்க, காரை ஓட்டிக் கொண்டிருந்த வசந்த் திரும்பாமலே பதில் அளித்தான்.

"அங்கிள் ஊர்ல இல்லையாம். நாளைக்கு வாங்க பேசிக்கலாம்னு சொன்னாங்க. நான்தான் சிந்துவை சமாதானப்படுத்தணும். நாங்க உடனே புறப்பட்டு வர்றோம்னு சொன்னேன்."

"அதுக்கு என்ன சொன்னாங்க?"

"சரி வாங்க. சிந்துவும் வீட்லதான் இருக்கான்னு சொன்னாங்க."

"பிறகு எதுக்குடா இவ்வளவு வேகமா புறப்பட்டுப் போறாங்க. நம்மள அவாய்ட் பண்றாங்களோ?" பின் இருக்கையில் இருந்த மஞ்சுளா கேட்டாள்.

"இருக்காதும்மா. ஏதோ அவசரம் போலிருக்கு."

"சிந்துவும் கார்லதானே இருக்கா. போன் பண்ணிக் கேளேன்."

"சிந்து இப்பல்லாம் நான் போன் பண்ணினா எடுக்கவே மாட்டேங்கிறா."

"பின்னே! அண்ணனும் தங்கையும் கொஞ்ச வேலையா பண்ணியிருக்கீங்க. தாராதான் சின்னப் பொண்ணு. உனக்கென்னடா ஆச்சு?" கடிந்து கொண்டார் ரத்தினபாண்டியன்.

"எம்புள்ளைங்க செய்தது சரிதான். அவங்க அப்படி மிரட்டினாத்தான் பணிவாங்க. எம் பொண்ணு ஆசைப்பட்டு கேட்டவனை நான் எப்படி விட முடியும்?" மஞ்சுளா அலட்சியமாய்ச் சொல்ல, பின்னால் திரும்பி முறைத்தார் ரத்தினபாண்டியன்.

"நீ சிந்துவிடம் கடுமையாய் பேசினால்தான் அவள் வழிக்கு வருவாள். அவள் சொன்னால்தான் திரு என்னை மணக்க சம்மதிப்பார்" என்றாள் தாரா.

அவள் சொல்லிக் கொடுத்ததைத்தான் வசந்த் பேசினான். ஆனால் சிந்துஜா



தன்னையே உதறித் தள்ளுவான் என்று நினைக்கவில்லையே. அதன்பிறகு எத்தனை முயற்சித்தும் அவளிடம் பேசவே முடியவில்லை.

முதன் முறையாக வசந்திற்கு வலித்தது. பதில் பேசாமல் மவுனமாய் காரோட்டிய மகனை மீண்டும் அழைத்தாள் மஞ்சுளா.

"என்னடா! எதுவுமே சொல்ல மாட்டேங்கிற?"

"அவன் என்ன சொல்லுவான். பெத்தவ தானே நீ. புள்ளையோட மனசை உன்னால புரிஞ்சுக்க முடியாதா?"

"வசந்த்! என்னடா அப்பா பேசுறதைப் பார்த்தா நீ அந்த சிந்துவ..."

"ஆமாம்மா. சிந்துதான் என்னோட

வொய்ப். அதுல எந்த மாற்றமும் இல்ல."

"அப்போ...தாரா?"

"நிரஞ்சன்கிட்ட பேசிப் பார்ப்போம். ஒத்துகிட்டா ருன்னா சந்தோஷம். இல்லேன்னா என்ன பண்ண முடியும். தாராவைத்தான் சமாதானம் பண்ணணும்..."

"அதெப்படிடா. அவதான் ஒத்தைக்கால்ல நிற்கிறாளே?"

"நிரஞ்சனுக்கும் பிடிக்க வேண்டாமா? அதுவும் அவர் மனசுலயும் ஒரு பொண்ணு இருக்கா. நாம அவரை மிரட்டினதே பெரிய பாவம்மா. அது எவ்வளவு வலின்னு எனக்கே இப்பத்தான் புரியுது."

"என்னடா! இப்படிப் பேசுற? தாரா உன் தங்கை. அவ ஆசைப்பட்ட வாழ்க்கையை அமைச்சுத் தர்றது நம்ம கடமை இல்லையா?"

"கடமைதாம்மா. ஆனா அந்த ஆசை நியாயமான ஆசையா இருக்க வேண்டாமா? எனக்கென்னவோ தாராவோட பிடிவாதம்



வீண்பிடிவாதமாத்தான் தோணுது. நாம முதல்லயே அவளை தட்டி வெச்சிருக்கணும்."

"இப்ப சொல்லி என்ன பிரயோஜனம். முதல்ல அவ எங்கே இருக்கான்னு போன் பண்ணிப் பாரு. நமக்குத் தெரியாம ஏதாவது ஏடாகூடமா பண்ணி வெக்கப் போறா." ரத்தினபாண்டியன் அலுப்புடன் கூறினார்.

"சரிங்க..." என்றவாறு தாராவின் செல்போனிற்கு முயற்சி செய்து பார்த்துவிட்டு உதட்டைப் பிதுக்கினாள் மஞ்சுளா.

"எங்கேஜ்டா இருக்குதுங்க. யார்கிட்டயோ பேசிட்டு இருக்கா போலிருக்கு."

"அவ போன் எப்பத்தான் ப்ரீயா இருந்தது. வசந்த், அவங்க கார் லெப்ட்ல திரும்புது பாரு. பார்த்து திருப்பு."

"அப்பா! இது மயிலாப்பூர் ரோடுப்பா."

"மயிலாப்பூர்ல யார் இருக்காங்க. எதுக்கும் நான் நிரஞ்சனுக்கு போன் பண்ணிக் கேட்கிறேன்" என்றவாறு தனது செல்லை எடுத்தார்.

"என்னப்பா கேட்பீங்க? நாம அவங்களை பாலோ பண்றது தெரிஞ்சா தப்பா நினைச்சுக்க மாட்டாங்களா?"

"இதுல தப்பா நினைக்க என்னடா இருக்கு? உண்மையைச் சொல்வோம்" என்றவாறு நிரஞ்சனின் எண்களை அழுத்திவிட்டு காதிற்கு போனை கொடுத்தார்.

அதுவும் எங்கேஜ்டாகவே இருந்தது.

## 13

தாராவின் உக்கிரம் குறைந்து முகம் குளிர்ந்து போயிருந்தது. பேச்சில் மென்மையும் குழைவும் சேர்ந்து கொள்ள நம்பவே முடியாமல் கேட்டாள்.

"நிரு! உண்மையாகவா சொல்றீங்க? எம்மேல உள்ள கோபமெல்லாம் போயிடுச்சா?"

"கோபமா? உம்மேலயா? சேச்சே! தாரு! உன்னைப் போய் கோவிச்சுப்பேனா? சும்மா உன்கூட விளையாடிப் பார்த்தேன்."

"நிரு! என்னைத் தாருன்னா கூப்பிட்டீங்க?"

"ஆமா!"

"ஓ.... தேங்க்யூ நிரு."

"சரி. நீ ஏன் வீட்டுக்கு வரல்ல. நீயும் வருவேன்னு நினைச்சேன்" நிரஞ்சன் வருத்தமாய்ச் சொல்ல, துள்ளினாள் தாரா.

"இதோ இப்பவே வர்றேன். என்னை தேடினீங்களா? ஹைய்யோ! எப்படி நிரு. என்னால நம்பவே முடியல்ல."

"நம்பு. உடனே எங்க வீட்டுக்கு வா. உனக்கு நிறைய சர்ப்ரைஸ் காத்திட்டு இருக்கு. சீக்கிரம் வாயேன்."

"இதோ வந்துட்டேன் நிரு. கிளம்பிட்டேன்."

"நீ எங்கே இருக்க தாரு?"

"நானா? இங்க ஒரு வெட்டிவேலை செய்திட்டு இருந்தேன். இனிமே அந்த வேலைக்கு அவசியமே இல்லை. நீங்கதான் எனக்கு கிடைச்சிட்டீங்களே" ஓரக்கண்ணால் நிறைமதியை பார்த்துக் கொண்டே சத்தமாய் பேசினாள் தாரா.

அழைத்து வந்திருந்த அடியாட்களை புறங்கையால் போகச் சொல்லி சைகை செய்ய அவர்கள் விலகி தங்கள் காரில் ஏறிப் புறப்பட்டனர். கூட்டமும் விலகி கலையத் துவங்க, தன் கையில் இருந்த தடியை தூக்கி ஓரமாய்ப் போட்டாள் நிறைமதி.

"ஓ.கே. நிரு. இன்னும் அரைமணி நேரத்துல உங்க வீட்ல இருப்பேன். போனை வெச்சுடவா?"

"கமான் க்விக். உன் வருகைக்காக நாங்க எல்லோருமே வெயிட் பண்ணிட்டு இருக்கோம்."

"இதோ வந்திட்டே இருக்கேன். பை நிரு" என ஒரு அழுத்தமான முத்தத்தை போனிற்கு கொடுத்தாள் தாரா.

முகம் முழுக்க வெறுப்பாய் நின்ற நிறைமதியை நெருங்கி தோளில் இடித்தாள் தாரா. "என்னடி? எரியுதா. உடம்பெல்லாம் தகிக்கிற மாதிரி இருக்குமே. பார்த்தியா. என்னோட நிரு எனக்கே கிடைச்சுட்டார்."

மனதில் ஓரமாய் லேசான வலி தோன்றியது. அதை வெளிக்காட்டாமல் நின்றவளை மீண்டும் முகத்தில் இடித்தாள்.

"இந்த மூஞ்சுக்கு என் நிரு கேட்குதா. நீயெல்லாம் உன் லெவலுக்கு ஆசைப்படணும். மண்சட்டியில கஞ்சி குடிக்கிறவளுக்கு வெள்ளித்தட்டுல விருந்து கேட்குதோ. வெறுங்காலோட நடக்கிறவளுக்கு பென்ஸ் கார் வேணுமோ."

"தாரா! உண்மையிலேயே நீ பைத்தியம்தானா?" நக்கலாகவே கேட்டாள் நிறைமதி.

"ஏய்... என்னடி திமிரா? சங்கை அறுத்திடுவேன்."

''இந்த பூச்சாண்டியெல்லாம் எங்கிட்ட காட்டாதே. நான் உங்கிட்ட வந்து சொன்னேனா, நான் அவரை விரும்புகிறேன்னு. நீயாகவே கற்பனை செய்து கொண்டு வந்து பஜாரித்தனம் பண்ணிக் கொண்டிருக்கிறாய். இது பைத்தியக்காரத்தனம்தானே."

"ஹேய்! நடிக்காதடி. எனக்கு இப்ப உங்கிட்ட பேச நேரமில்லை. என் நிரு எனக்காக வெயிட் பண்ணிட்டு இருக்கார். நான் போகணும். உன் நல்லநேரம் தப்பிச்சிட்டே. இனிமே என் கண்லயே பட்டுடாதே. அதுதான் உனக்கு நல்லது. வரட்டா?"

"நில்லு. நீ பாட்டுக்கு வந்தே. எங்க பொருட்களையெல்லாம் உடைச்சு நொறுக்கியிருக்கே. என் தங்கையோட கைய உடைச்சுட்டே. எனக்கு பதில் சொல்லிட்டுப் போ."

"வேண்டாம். என்னை சீண்டாதே. அவ கைய உடைச்ச மாதிரி உன் தலையை திருகிட்டு போயிட்டே இருப்பேன். என்னைப் பத்தி உனக்குத் தெரியாது'' என்றவாறே கோபமாய் நிறைமதியின் குரல்வளையைப் பற்றிய போது போலீஸ் ஜீப் வந்து நிற்க, அதன் பின்னே கார்த்திக் காரில் வந்து இறங்கினான்.

தாராவின் முகம் நொடியில் மாறியது. கொடூரமானது.

"சார்! இவதான் சார். ரொம்ப அராஜகம் பண்ணிண்டு இருக்கா.'' மாமியின் வீட்டுக்காரர் ஓடி வந்து சொன்னதும் ரவுத்திரமானாள் தாரா. மூளை சூடாகிக் கொதித்தது.

"யேய் விடும்மா அந்தப் பொண்ணை. பார்த்தா பெரிய இடத்துப் பொண்ணு மாதிரி இருக்க. இப்படி காரியம் பண்றியே. எடும்மா கையை'' என போலீஸ் நெருங்கியதும் தன் பிடியை இறுக்கினாள் தாரா.

சாதாரணமாகவே நின்று கொண்டிருந்த நிறைமதி மூச்சுக்கு திணறினாள். கைகளால் தாராவை விலக்க முயன்று தோற்றாள்.

"ஏய்! என்ன பண்றே விடு அவங்களை" கார்த்திக் நெருங்க, பலமாய் எச்சரித்தாள் தாரா.

"யாராவது என்கிட்டே வந்தா இவ தலையை திருகிடுவேன்."

"பொம்பளையா இவ? ரவுடி மாதிரி பேசறா."

"இன்ஸ்பெக்டர் ப்ளீஸ். அவங்களை

## 8 வயது சதுரங்க வீராங்கனை!

அனன்யா குப்தா, 8 வயது சிறுமி. இந்த வயதிலேயே சதுரங்க விளையாட்டில் வீராங்கனையாக திகழ்கிறாள். மும்பையைச் சேர்ந்த இவள் காலையில் பள்ளிக்கு செல்கிறாள். பிற்பகலில் வீட்டுப் பாடத்தை முடிக்கிறாள். மாலையில் சதுரங்கம் விளையாட செய்கிறாள்.



மும்பையில் 8 வயது குழந்தைகளுக்கான சதுரங்க போட்டியில் அனன்யா குப்தா தான் முதலிடம் வகிக்கிறாள். மராட்டிய மாநில அளவில் 2-ம் இடத்தையும், இந்திய அளவில் 4-ம் இடத்தையும் பெற்றுள்ளாள். 4 வயதிலேயே சதுரங்கம் விளையாட கற்றுக் கொண்டதாக கூறும் அனன்யா, சிநேகிதிகள் வீட்டுக்கு செல்லும் போதெல்லாம் அவர்களுடன் சேர்ந்து சதுரங்கம் விளையாடியதால் பின்னாளில் அதுவே தன்னை இதில் முழுமையாக ஈடுபட வைத்து விட்டதாக கூறுகிறாள்.

சமீபத்தில் சூரத்தில் நடந்த சர்வதேச அளவிலான சதுரங்க போட்டியில் 2 முன்னணி வீரர்களை இவள் தோற்கடித்து விட்டாள். நாக்பூரில் நடந்த மாநில அளவிலான போட்டியிலும் இவள் பங்கேற்றுள்ளாள்.

''என்னுடைய தந்தைக்கும் குழந்தை பருவத்தில் இருந்தே சதுரங்கம் விளையாட தெரியும். ஆனால் ஒரு போதும் அவர் என்னிடம் ஜெயித்ததே இல்லை'' என்று சொல்லி சிரிக்கும் அனன்யா, ''சதுரங்க போட்டி என்பது மூளையை பயன்படுத்தி விளையாடக் கூடியதாகும். எதிரியை எப்படி மடக்குவது என்பது நமது நகர்த்தலைப் பொருத்தே உள்ளது'' என்கிறாள்.

போகிற போக்கைப் பார்த்தால் அனன்யாவும் விஸ்வநாதன் ஆனந்த் போல சர்வதேச தரத்திற்கு உயர்ந்து விடுவார் போல இருக்கிறது.

காப்பாத்தனும்..." கார்த்திக் பதறினான்.

"நீங்க யார் சார்?"

"சார்... எம்பேர் கார்த்திக். இது எம்பிரண்ட் கட்டிக்கப் போற பொண்ணு. அவங்களுக்கு ஆபத்து. உடனே போய் காப்பாத்துன்னு சொல்லி என்னை அனுப்பினான். அவன் இப்ப வந்திடுவான்."

தாராவின் முகம் அகோரமானது. "என்ன அவன் இங்கே வந்திட்டு இருக்கானா? என்னையே ஏமாத்திட்டானா? இந்தத் தாராவையே ஏமாத்தினதுக்கு அவனுக்கு பரிசு கொடுக்க வேண்டாம். உம் பொணம்தான்டி அவனுக்கு நான் கொடுக்கப் போற பரிசு." ஆவேசமாக இரு கரங்களாலும் அவளது கழுத்தைப் பற்றி அழுத்த, நிறைமதி மூச்சுக்காற்றுக்கு போராடினாள்.

கண்கள் வெளியே வந்துவிடுவது போல் பிதுங்கியது. நாக்கில் பற்கள் குத்தி, ரத்தம் சொட்டியது. அதற்கு மேலும் பார்த்துக் கொண்டிருக்க முடியாமல் கார்த்திக் பாய்ந்து சென்று தாராவின் கூந்தலைப் பற்றி இழுத்து பளாரென அறைந்தான்.

வலி தாளாமல் கையை விலக்கியதும் நிறைமதி கீழே சரிந்து விழுந்தாள்.

"டேய், நீ யாருடா இவளுக்கு? இந்த பிச்சைக்காரிக்காக எம்மேலயே கை வெச்சியா? உன்னை..." என ஆங்காரமாய் ஓடி வந்தவளை மீண்டும் அறைந்தான் கார்த்திக்.

"பொம்பளையாச்சேன்னு விடுறேன். இல்ல உன் உடம்புல ஒரு எலும்பு மிஞ் சாது. இன்ஸ்பெக்டர் என்ன பண்ணிட்டு இருக்கீங்க. இவளைப் பிடிச்சு வண்டியில ஏத்துங்க" கத்தினான்.

தலைமுடி தாறுமாறாய் கலைந்திருக்க, தன்னை நெருங்கி வருபவர்களையெல்லாம் அடித்து பிராண்டினாள் தாரா. வாய்க்கு வந்தபடி காது கூசும்படி அவள் பேச, "அச்சோ! பைத்தியம் பிடிச்சிருச்சு போலிருக்கே" என சிலர் உச்சுக் கொட்டினர்.

கார்த்திக் நிறைமதியிடம் ஓடி அவசரமாய் தண்ணீர் தெளித்துக் கொண்டிருக்கையில் வரிசையாய் இரண்டு கார்களும் வந்து நிற்க, முதலில் இறங்கிய நிரஞ்சன் நிறைமதியிடம் பதறி ஓடினான்.

வசந்த் தாராவிடம் ஓடி, "தாரா! என்ன பண்றே நீ" என கோபமாய்க் கேட்க, தன் கோபத்தையெல்லாம் வசந்த்தின் மீது காட்ட ஆரம்பித்தாள். அவனது தலைமுடியை இருகைகளாலும் பற்றி உலுக்கி எடுத்துவிட்டாள். மஞ்சுளாவையோ ரத்தினபாண்டியையோ அவளுக்கு அடையாளமே தெரியாமல் போயிருந்தது.

மற்றவர்கள் அவளைக் கண்டு மிரண்டு ஓட, நிரஞ்சனோ மயக்கம் தெளியாத நிறைமதியைத் தூக்கிக் கொண்டு காருக்கு ஓடினான். கார்த்திக் ஓடி வந்து காரை எடுக்க, பின் இருக்கையில் தன் மடிமேல் நிறைமதியின் தலையை வைத்து விழிகள் நிறைய நீரோடு தவித்துக் கொண்டிருந்தான் நிரஞ்சன்.

"மதி! கண் விழிச்சிடு மதி. என்னை ஏமாத்திடாதே. என்னை தவிக்க விட்டுடாதே. என்னால்தானே... என்னால் தானே... உனக்கு இத்தனை துன்பம். பூ போன்ற உன்னை இப்படி கசக்கியெறிய எப்படி அவளுக்கு மனசு வந்தது. மதி... என்னை மன்னித்து விடு மதி. கண் விழிச்சுக்கோ. ப்ளீஸ் மதி"

ஹாஸ்பிடல் வரை அரற்றிக் கொண்டே இருந்தான்.

□ □ □

**கை**யில் பெரிய மாவுக்கட்டோடு அமர்ந்திருந்தாள் வளர்மதி. தங்கைக்கு மாத்திரைகளை பிரித்து கொடுத்துக் கொண்டிருந்தாள் நிறைமதி. சந்தரும் செல்வகணபதியும் நிறைமதியின் பதிலுக்காக அவளது முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

நிரஞ்சனின் குடும்பமும் தாராவின் குடும்பமும் கூட காத்திருந்தது. தாராவும் மஞ்சுளாவும் மருத்துவமனையில் இருக்க, வசந்த்தும் ரத்தினபாண்டியும் சபேசனுடன் வந்திருந்தனர். சிந்துதான் பொறுமையிழந்தாள்.

"அண்ணி! நாங்க வந்து மூணு மணி நேரமாச்சு. நீங்க இப்படி எதுவுமே பேசாம இருந்தா எப்படி?"

"என்ன பேசணும்" நிமிராமலே கேட்டாள்.

"இதென்ன கேள்வி அண்ணி. எனக்கு அண்ணியா, எங்க பேரண்ட்ஸுக்கு மருமகளா, எங்க அண்ணனுக்கு மனைவியா நீங்க வரணும்."

"இல்ல. எம்மனசில அந்த மாதிரி ஆசை எதுவும் இல்ல. அது தாரா வாழ ஆசைப்பட்ட இடம். எனக்கு வேண்டாம்."

"மிஸ் நிறைமதி. என் தங்கை மட்டும்தான் ஆசைப்பட்டா. நிரஞ்சனுக்கு உங்க மேலதான் ஆசை" வசந்த் சொல்ல,

"இல்ல சார். இப்ப வேணா தாரா

மனநிலை சரியில்லாம இருக்கலாம். நாளைக்கே குணமாகி வந்து ரகளை பண்ணினா? ஏற்கனவே அவ பண்ணியதை எங்களால தாங்கிக்க முடியல்ல" என்றவாறே வளர்மதியின் கட்டுப்போட்ட வலதுகையை வருடினாள்.

"என் தங்கைதான் உங்க பயம்னா நீங்க பயப்பட வேண்டிய அவசியமே இல்ல. இன்னும் ஒன்வீக்ல கனடா போகப் போறோம். அவளுக்கு அங்கேயே ட்ரீட்மெண்ட் பண்ணிட்டு செட்டிலாகிட போறோம்."

"அப்போ... உங்க கல்யாணம்?"

"ம்ப்ச். நல்லவனோ கெட்டவனோ. தாரா என் தங்கை. அவளை இந்த நிலையில வெச்சிகிட்டு என்னால மேரேஜ் பண்ணிட்டு சந்தோஷமா வாழ முடியாது. அதுக்கு என் மனசும் இடம் கொடுக்கல்ல."

"சிந்து! சிந்துவோட கல்யாணம்?"

"அது என் பொறுப்புங்க. சிந்துவோட கண்ல ஒரு சொட்டு கண்ணீர் வராம பார்த்துக்க வேண்டியது என் பொறுப்பு" என்ற கார்த்திக்கை பார்த்து விழிகளை விரித்தாள் நிறைமதி.

"உங்களை நான் எங்கேயோ பார்த்திருக்கிறேனே."

சற்று தடுமாறிய கார்த்திக், "அதாங்க! அன்னிக்கு போலீஸ் பின்னால வந்தேனே. தாராகிட்ட இருந்து காப்பாத்தினேனே" என்றான் சமாளிப்பாய்.

"இல்ல. அதுக்கு முன்னால... எங்கேயோ..."

"டேய் மச்சான். அவங்க யோசிக்கிறதுக்கு முன்னால நீ ஏதாவது பேசுடா. நாங்க எல்லோரும் பேசுறோம். நீ என்ன கல்லுபிள்ளையார் மாதிரி உட்கார்ந்திட்டு இருக்கே" என நிரஞ்சனை அசைத்தான் கார்த்திக்.

நிரஞ்சன் எழுந்தான். செல்வகணபதியை நெருங்கி அவரது கைகளை பற்றிக் கொண்டான். "மாமா! உங்க பெண்ணை நான் மனப்பூர்வமாக விரும்புகிறேன். என் உடம்புல உயிர் இருக்கிற வரை அவளை பூப்போல வெச்சு பாதுகாப்பேன். எனக்கு உங்க பெண்ணைத் தருவீங்களா?"

"அட என்ன தம்பி! ஏன் இப்படித் தயங்குறீங்க. எனக்கு பரிபூரண சம்மதம். மதி... உங்களுக்குத்தான்" திட்டவட்டமாக அவர் கூறியதும், சந்தர் சத்தமாய் விசிலடித்தான்.

"நிரஞ்சன் சார்! அசத்திட்டீங்க. அப்பா சொல்லிட்டா அதுக்கு மறுப்பே கிடையாதுன்னு உங்களுக்கு எப்படித் தெரிஞ்சது?" ஆர்வமாய்க் கேட்டாள் வளர்மதி.

"நீதானே சொன்னே வளர்."

"நானா? நான் எப்பச் சொன்னேன்?"

"அன்னைக்கு மகாபலிபுரத்தில் சொன்னாயே. எங்களிடம் எவனாவது வந்து வழிந்தால் எங்கள் அப்பாவிடம் பேசச் சொல்லிடுவோம்னு சொன்னாயே"

"ஐயோ! அது உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"நானும் அங்கேதானே உங்க நிழலா பின்தொடர்ந்தேன்."

"அட! அப்படீன்னா... அப்பவே எங்க அக்காவை விரும்புனீங்களா?"

"பார்த்த நிமிஷத்தில இருந்தே" என்றான் கண்கள் மின்ன. நிறைமதியின் முகம் செவ்வானமாய் மாறியது. தலையை குனிந்து கொண்டாள்.

"சரி. அப்பா சம்மதிச்சா போதுமா? அக்கா சம்மதிக்க வேண்டாமா?"

"நிச்சயமாய்! மதி சம்மதம் வேண்டும்."

"அப்போ கேளுங்க."

"மதி! உனக்கு மாப்பிள்ளையை பிடிச்சிருக்காம்மா. அப்பா கூட உன் விருப்பத்தை கேட்கலையே" சற்றே வருத்தமாய்க் கேட்டார் செல்வகணபதி.

"ஐயோ! அப்படியெல்லாம் ஒண்ணுமில்லப்பா. நீங்க பார்த்து எது செய்தாலும் சரிதாம்ப்பா."

"அய்! இந்த பேச்செல்லாம் சரிப்படாது. என் அண்ணனுக்கு நேரிடையான பதில் வேண்டும். அண்ணா நீயே கேளு" சிந்து உசுப்பினாள்.

"தைரியமா கேளுங்க சார். நல்ல பதில்தான் வரும்" வளர்மதியும் சொல்ல, நிரஞ்சன் நிறைமதியின் முன்னே மண்டியிட்டு அமர்ந்தான்.

"மதி! உங்களது அன்றில்கள் கூட்டில் எனக்கொரு இடம் தருவீர்களா?" என இருகரங்களையும் விரித்து தலைசாய்த்துக் கேட்க, நிறைமதி நாணமும் புன்னகையும் போட்டிபோட 'சம்மதம்' என தலையசைத்தாள்.

பார்த்துக் கொண்டிருந்த அனைவரின் முகமும் புன்னகை பூத்தது.

(முற்றும்)